வெளியீடு 30-3-2007

Issued 30-3-2007

774
04/04/07
04/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, டிசம்பர் 6, 2006—தொகுதி 18—எண் 3

**Wednesday the 6th December, 2006—Volume 18—No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

V211,31 P06
P06.18.3
227440

[Price Rs. 3.00

**6–12–2006**

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| | பக்கங்கள் |
| **1. வினாக்கள்–விடைகள்**— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 129-160 |
| **2. தகவல் கோரல்**— | |
| (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 160-163 |
| (ஆ) ஓமலூர் மாணவி இறந்ததையொட்டி பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளிமீது நடத்தப்பட்ட தாக்குதல் | 163-176 |
| (இ) காவல் துறைப் பணியிடங்களை நிரப்ப வயது வரம்பைத் தளர்த்துதல் | 176-178 |
| (ஈ) சென்னை விமான நிலைய விரிவாக்க அறிவிப்பு காரணமாக மக்களுக்கு எழுந்துள்ள அச்சம் | 178-180 |
| **3. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) அலுவல் வரிசையில் மாற்றம் | 180-181 |
| (ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் | 225-226 |
| **4. அறிக்கைகள் அளித்தல்**— | |
| பொதுக் கணக்குக் குழு | 181 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**— | |
| (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 181-182 |
| (ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2006 | 182 |

பக்கங்கள்

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 183

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 — 184

(உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2006 — 222-223

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2006 — 225

**6. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 182

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 183

(இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) — 218

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 222

(உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997–1998, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.) — 223

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.) — 224



பக்கங்கள்

**7. அரசினர் தனித் தீர்மானம்—**

சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழை அறிமுகப்படுத்த ஒப்புதல் வழங்குமாறு மேதகு குடியரசுத் தலைவரைக் கோருதல் — 185-209

* மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 185,204-209

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் — 186-187

திரு. ஜி.கே. மணி — 187-192

* திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன் — 193-195

* திரு. சி. கோவிந்தசாமி — 196-197

* திரு. சு. குணசேகரன் — 197-198

திரு. கு. செல்வம் — 198-199

* மாண்புமிகு திரு. துரைமுருகன் — 200-204

**8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2006–2007, அளித்தல்—** 210-215

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 210-212

**9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997–1998, அளித்தல்—** 216-217

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 216-217

**10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, வாக்கெடுப்பு—** 218-221

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 218

**11. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997–1998, வாக்கெடுப்பு—** 223-224

* மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 223

பக்கங்கள்

**12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

| | | |
|---|---|---|
| (அ) | தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 226-228 |
| | மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 226-227,228 |
| (ஆ) | தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2006 | 228-250 |
| | * மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 228,243-248, 249,250 |
| | திரு. சி. ஞானசேகரன் | 229-234, 248-249 |
| | திரு. ஜி.கே. மணி | 234-241 |
| | திரு. தி. இராமசாமி | 241-242 |
| | செல்வி கே. பாலபாரதி | 242 |
| (இ) | தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 250-252 |
| | * மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 251-252 |
| (ஈ) | தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 252-254 |
| | * மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா | 253,254 |

**13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 254-255

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## கார்த்திகை 20, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 டிசம்பர் 6, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"காலங் கருதி இருப்பர் கலங்காது*
*ஞாலங் கருது பவர்."*

கலக்கத்துக்கு இடம் தராமல் உரிய காலத்தை எதிர்பார்த்துப் பொறுமையாக இருப்பவர்கள் இந்த உலகத்தையேகூட வென்று காட்டுவார்கள்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 11, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**11—**

### மின் பகிர்மானம்

***489—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மின் பகிர்மானத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2006 டிசம்பர் 6

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆம். கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு தனியாக மின் பகிர்மானத் திட்டத்தை, தொழில்நுட்ப ரீதியாகவும், தற்போது வாரியத்தில் நிலவி வரும் நிதிப் பற்றாக்குறையின் காரணமாகவும் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லை.

**திரு. டி. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் என்பது இன்றைக்கு தொழிற்சாலைகள் நிறைந்த பெரும் பகுதிகளைக் கொண்ட மாவட்டம் ஆகும். ஓசூரிலே முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இப்போது சிறப்புப் பொருளாதார மண்டலத்தையும் அறிவித்து தொழிற்சாலைகள் பெறும் பகுதியாக வளர்ந்துகொண்டு வருகிற ஒரு மாவட்டமாக இந்த மாவட்டம் இருக்கிறது. ஆகவே, அந்த மாவட்டத்திற்கு தனியாக ஒரு S.E. அலுவலகத்தைப் பிரித்துத் தரவேண்டும் என்று நான் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருந்தேன். கடந்த 11ஆம் தேதி நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு, படித்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசு உதவித்தொகை வழங்க வந்தபோது, அந்தக் கோரிக்கையை மீண்டும் நான் வலியுறுத்திப் பேசியபோது, நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ‘அந்தக் கோரிக்கையினை விரைவிலே நான் நிறைவேற்றித் தருகிறேன், ஏப்ரல் மாதம் நிறைவேற்றித் தருகிறேன்’ என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதாக ஒப்புக்கொண்ட நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குத் தனியாக Superintending Engineer Office நிதி நெருக்கடி காரணமாக அமைக்க முடியவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 2 S.E.-க்கள் இருக்கிறார்கள், [illegible] ஒருவர். வேலூரில் ஒருவர் என்று. இருந்தாலும் [illegible] சில இடங்களிலே இப்போது

227440



2006 டிசம்பர் 6]

எங்களுடைய பகுதிகளிலே low voltage இருக்கிறது. இப்பொழுது கேட்டால் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு கிரிவலத்தைக் காரணமாக வைத்து அந்த அமைச்சர் 100 மின் மாற்றிகளைப் பெற்றுவிட்டார் என்ற கருத்தைச் சொல்லி என்னுடைய மாவட்டத்திற்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, எங்களுடைய மாவட்டத்துக்காரரான மின் துறை அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து பக்கத்து மாவட்டத்திற்கு கொடுத்திருக்கிற 100 மின் மாற்றிகள் அளவிற்கு எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கும் மின் மாற்றிகள் கொடுத்தீர்கள் என்று சொன்னால் low voltage இல்லாமல், எங்களுடைய பகுதிகளில் எல்லாம் கொஞ்சம் வெளிச்சமாக லைட் எரியக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வாரா? வேலூர் மாவட்டத்திற்குக் குறைந்தபட்சம் 100 மின் மாற்றிகளை அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலான மின் மாற்றிகள் பல இடங்களிலே பழுதாகி இருக்கின்ற காரணத்தால் அவற்றை மாற்ற வேண்டுமென்று மின் வாரியம் முடிவெடுத்து, 1,000 மின் மாற்றிகளை வாங்குவதற்கான டெண்டர் கோரப்பட்டு, அந்த டெண்டர் யாருக்கு வழங்கப்பட்டதோ அவர்களெல்லாம் மின் மாற்றிகளை உற்பத்தி செய்து, இப்போதுதான் ஏறக்குறைய 2000 மின் மாற்றிகளை வழங்கியிருக்கிறார்கள். தமிழகத்திலே எந்தெந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்று முடிவு செய்து, தஞ்சை, திருச்சி, திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களில் உடனுக்குடன் மின் மாற்றிகளை அமைத்து வைத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் குறிப்பிடுவதைப்போல, வேலூர் மாவட்டத்திற்கும் 100 மின் மாற்றிகள் வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டு, இதுவரையில் 40 மின் மாற்றிகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவிலே மீதி 60 மின் மாற்றிகளும் அனுப்பிவைக்கப்படும். பொதுவாக தமிழகத்திலே இருக்கக்கூடிய மின் மாற்றிகள் பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள்ளாக 4000 மின் மாற்றிகளை அமைப்பது என்று மின் வாரியம் முடிவெடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

D
V21',31(P06 ... P06 . 18.3

[2006 டிசம்பர் 6

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் மாற்றிகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். குறிப்பாக துணை மின் நிலையங்கள் அமைப்பதற்காக பல்வேறு இடங்களிலே இருந்து கருத்துருக்கள் அனுப்பப்பட்டு அவை அனுமதிக்கப்பட்ட நிலையில் தொடங்கப்படாமல் இருக்கின்றன. திருவாரூர் மாவட்டத்தில் திருமக்கோட்டை என்ற இடத்திலே எரிவாயுமூலமாக மின் உற்பத்தி செய்யும் நிலையம் நடுவது தமிழக அரசின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த இடத்திலேயே 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்பது கோரிக்கை. அதற்கான அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. அதேபோல, மன்னார்குடியிலுள்ள 110 கிலோ வோல்ட் மின் நிலையத்தை 220 கிலோ வோல்ட் மின் நிலையமாக உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் இந்த ஆண்டுத் திட்டத்திலேயே நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்த ஆண்டு 60 துணை மின் நிலையங்களை தமிழகத்திலே அமைக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்து அதற்கான முயற்சிகளிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். பல இடங்களிலே துணை மின் நிலையங்கள் அமைக்க இடம் கிடைப்பதில்லை. தனியாருடைய நிலத்தைக் கேட்டால் அதிகமான விலை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவேதான், அரசுக்குச் சொந்தமான நிலம் ஏதாவது இருக்குமானால் அந்த இடத்தை முதலிலே தேர்ந்தெடுப்பது என்றும், அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் இருந்தால் அந்த இடத்திலே துணை மின் நிலையங்கள் அமைப்பது என்றும் அரசாங்கம் முடிவெடுத்து 60 துணை மின் நிலையங்களையும் அமைக்க அடுத்த மார்ச் மாதத்திற்குள்ளாக வேலைகளைத் தொடங்க வேண்டுமென்று மின் வாரியம் ஏற்பாடு செய்திருக்கிறது. விரைவிலே மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்தின் அடிப்படையிலே அங்கேயும் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மின் நிலையத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.



2006 டிசம்பர் 6]

**12—**

## குளிர்பதனக் கிடங்கு

***26—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் திராட்சை அதிகம் விளைவதால் கம்பத்தில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், கம்பம் பகுதியில் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை. எனினும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் குளிர்பதனக் கிட்டங்கி வசதியுடன் கூடிய ஒரு வணிக வளாகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம், கூடலூர், கேஜி.பட்டி, கே.எம். பட்டி, சுருளிப்பட்டி, கே.கே.பட்டி, புதுப்பட்டி, ஆனைமலையன்பட்டி ஆகிய ஊர்களில் 4,000 ஏக்கருக்கு மேலாகத் திராட்சை விவசாயம் செய்கின்றார்கள். மூவாயிரத்திற்கு மேலான விவசாயக் குடும்பத்தினர் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நேரடியாகவும், மறைமுகமாகவும் 40,000 தொழிலாளர்கள் இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். திராட்சைத் தொழில் என்பது அதிகமான செலவினம் கொண்ட தொழிலாகும். உற்பத்தித் திறன் அதிகமாக இட வேண்டிய இந்த திராட்சைத் தொழிலிலே தென் மேற்குப் பருவக் காற்று, வட கிழக்குப் பருவக் காற்றுக் காலம் மற்றும் குளிர் காலங்களில் திராட்சை விலைச் சரிவு ஏற்பட்டு, சில காலங்களில் திராட்சைப் பழத்தை வெட்டி மண்ணில் புதைக்கின்றார்கள். அந்த விவசாயிகளின் கஷ்டத்தை உணர்ந்து, அந்த விவசாயத் தொழிலாளர்களின் கஷ்டத்தை உணர்ந்து, கம்பத்தில் ஒரு குளிர்பதனக் கிட்டங்கி கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று மீண்டும் கேட்கின்றேன்.

[2006 டிசம்பர் 6

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அவர்களுடைய கம்பம் பகுதியிலே திராட்சை இரகம் உற்பத்தி செய்வது உண்மைதான். ஆனால், அந்தப் பகுதியில் பன்னீர் திராட்சைதான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதற்கு ஏற்றுமதிக்கான வாய்ப்பு குறைவாக உள்ளது. அதைக் கருத்திலேகொண்டுதான், முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு ஆலோசனை வழங்கி, தேனி மாவட்டத்திலே ஓடைப்பட்டியிலே குளிர்பதனக் கிட்டங்கி அமைக்க வேண்டுமென்று சொல்லி, அதற்காக 3.75 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டு, இப்போது அதற்கான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட்டிருக்கின்றன. ஓடைப்பட்டிக்கும் கம்பத்திற்கும் 20 கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. வேண்டுமானால் கம்பம் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் அந்த ஓடைப்பட்டியிலே அமையவிருக்கின்ற குளிர்பதனக் கிட்டங்கியில் அவர்களும் கொண்டுவந்து வைத்துக்கொள்ள வாய்ப்புண்டு. அந்த அளவிலேதான் பரிசீலிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பத்திலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் திராட்சை பயிரிடுபவர்கள் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆவார்கள். அவர்கள், அவர்களாகவும் மற்றும் சில விவசாயத் தொழிலாளர்களைப் பயன்படுத்தியும் அந்த விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். மாலை 5 மணி, 6 மணிக்கு வேலை முடித்து அங்கிருந்து ஓடைப்பட்டிக்கு, 20, 25 கிலோ மீட்டர் தள்ளியிருக்கின்ற ஓடைப்பட்டிக்குக் கொண்டு செல்வது என்பது மிகவும் கஷ்டத்திற்கும், சங்கடத்திற்கும் ஆளாக்கக்கூடிய நிலையில் இருக்கின்றது. மேலும், அங்கே ஓடைப்பட்டியைச் சுற்றியுள்ள கிராமங்களிலே விளைகின்ற திராட்சைக்கு அந்தக் குளிர்பதனக் கிட்டங்கியே சரியாக இருக்கும் என்று எனக்குத் தகவல் வந்திருக்கின்றது. எனவே, அந்த வகையில் எடுத்துக்கொண்டால், கம்பத்தில் ரிலையன்ஸ் பெட்ரோல் பங்குக்கு முன்புறமாக 7 ஏக்கர் 92 செண்ட் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு, அரசுக்குச் சொந்தமான இடம் காலியாக உள்ளது. அங்கே ஒரு சிறிய அளவில்தான் விற்பனைக் கூடம் இருக்கின்றது. மீதியுள்ள இடம் புல், புதர் மண்டித் தரிசாகக் கிடக்கின்றது. அந்தத் தரிசு நிலத்தை மேம்படுத்துகின்ற வகையிலேயும், அத்தோடு விவசாயிகள்



2006 டிசம்பர் 6]

வாழ்வில் ஒரு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற வகையிலேயும் அரசு மீண்டும் பரிசீலனை செய்து கம்பத்தில் திராட்சைக்காக ஒரு குளிர்பதனக் கிட்டங்கி கொண்டுவருவதற்கு ஆவன செய்யுமா என அறிய விழைகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திலே இருக்கின்ற கிட்டங்கியைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்கிறார். பொதுவாக, கிட்டங்கி இருந்தால் மட்டும் போதாது. அதற்கான கூலிங் செய்வதற்கான மெஷினரீஸ் அவையெல்லாம் வாங்கிப் பொருத்துகிறபோது செலவு நிறைய ஆகும். அதுதான் இப்போதுள்ள பிரச்சினை. இடத்தைப் பற்றிய பிரச்சினை இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொருளாதார ரீதியாகக் கொஞ்சம் வசதி படைத்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். வேண்டுமானால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின்மூலம் அந்தப் பகுதியிலேயும் அந்தப் பன்னீர் திராட்சையை அவர்கள் சொல்வதுபோல, அந்தப் பகுதியிலே வைத்துக்கொள்ள ஒரு குளிர்பதனக் கிட்டங்கி வைக்க வேண்டுமென்று விரும்பினால், ஜாயின்ட் வெஞ்சரிலே கூட்டுறவுத் துறையும் தனியாரும் சேர்ந்து அமைப்பதற்கு தனியார் தேவை. அதற்கு அவரே முன்வந்து நாங்கள் ஜாயின்ட் வெஞ்சரிலே சேருகிறோம், பரிசீலியுங்கள் என்று எழுதிக் கொடுப்பாரேயானால் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்குப் பதிலாக, நம்முடைய வேளாண்மைத் துறையின் சார்பாக இப்போது நடமாடும் குளிர்பதன வண்டி ஏற்பாடு செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். அப்படி அந்த வாகனத்தை வாங்குவதற்கு 10 சதவீதம் சப்சிடி தருவதாகவும், மீதி 19 இலட்சம் ரூபாயை விவசாயிகள் யாராவது முன்வந்து வாங்கினால், அந்தப் பகுதிகளில் என்ன பழங்கள் உற்பத்தி ஆகின்றனவோ, அவற்றை அந்த வண்டி வாகனங்கள் வருகின்றபோது அவற்றைப் பத்திரப்படுத்தி மறுநாள் அவர்கள் திரும்பப் பயன்படுத்த, அந்தப் பொருள்கள் அழுகிவிடாமல் இருப்பதற்கு, ஏதுவாக இருக்கும் என்று வேளாண்மைத் துறையில் ஒரு திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அது நடைமுறைக்கு வருகின்றபோது பெரும்பான்மையான மக்கள் அத்தனை ரூபாய் செலவு செய்து அதை வாங்குவதற்கு இயலாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு வேளாண்மைத் துறை

[2006 டிசம்பர் 6

அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறையின்மூலமாகவே அந்த வாகனங்களை அந்தந்தப் பகுதிகளில் இயங்கச் செய்து, அப்படி விவசாயிகள் தங்கள் பொருள்களை பாதுகாக்க வைக்கிறபோது குறைந்த அளவுக் கட்டணத்தை--அரசு சைக்கிள் ஸ்டாண்டுகளில் வசூலிப்பதைப்போல ஒரு குறைந்த கட்டணத்தை—பெற்றுக்கொண்டு அந்த விவசாயிகள், வியாபாரி மக்களின் அந்தப் பொருள்களை அழுகாமல் பாதுகாத்து, மறுநாள் அவர்களுக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா? இல்லை, அந்த வாகனத்தை நூற்றுக்கு 50 சதவிகிதம் விவசாயிகளுக்கு சப்சிடியாக, பாதித் தொகையை மானியமாகத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கம்பத்திலே குளிர்பதனக் கிட்டங்கி அமைக்க வேண்டுமென்று எழுப்பப்பட்ட வினா. அவர் சொல்வதைப்போல அப்படி ஒரு திட்டம் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

## சாகுபடி நிலங்கள்

***51—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் பெரியார் பாசனத்தின்கீழ் உள்ள ஒருபோகச் சாகுபடி நிலங்களை இருபோகச் சாகுபடி நிலங்களாக மாற்றிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது சாத்தியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.



2006 டிசம்பர் 6]

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில் முல்லைப் பெரியாறு பாசனத்திற்கு உட்பட்ட விவசாயத்திற்கு ஒருபோகச் சாகுபடியை இருபோகச் சாகுபடியாக மாற்றும் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மேலூர் தொகுதியில் விவசாயத்தை மட்டுமே நம்பி அந்தப் பகுதி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். அணை மட்டம் 136 அடியாக இருந்தது. நீண்டகாலமாக அந்தத் தொகுதியினுடைய விவசாயப் பெருமக்கள் இருபோகச் சாகுபடியாக மாற்ற வேண்டுமென்று சொல்லி பல ஆண்டுக்காலமாக கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது 136 அடியாக இருந்த காரணத்தினால் ஒருபோகச் சாகுபடியாக இருந்தது. இப்போது 142 அடியாக உயர்த்த தீர்ப்பு கிடைத்திருக்கின்றது. கூடிய விரைவிலே அது நமக்குக் கிடைக்கும் என்று நாங்கள் நம்பிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த வேளையிலே, நம்முடைய தமிழக அரசு விவசாயிகளினுடைய நலனைக் கருதி — விவசாயத்தை நம்பியே 50 இலட்சம் குடும்பங்கள் அந்த மேலூர் தொகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ மொத்தம் 45 ஆயிரம் ஏக்கர் ஒருபோகச் சாகுபடியிலே இருந்துகொண்டிருக்கிறது. அதுவும் பக்கத்திலே இருக்கின்ற சமயநல்லூர் தொகுதியிலே 40 ஆயிரம் ஏக்கர் என இந்த 85 ஆயிரம் ஏக்கர் நிலங்களை இருபோகச் சாகுபடியாக மாற்றினால் பல இலட்சம் விவசாயிகள் வாழக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். அதுமட்டுமில்லாமல், என்னுடைய மேலூர் தொகுதியிலேயே ஒருசில பகுதிகளில், ஒருசில கிராமங்களில் ஆண்டுதோறும் இருபோகம் விளைந்துகொண்டிருக்கிறது. ஒரே வீட்டிலே நான்கு பேர் இருக்கின்றபோது, மூன்று பேர் பிரியாணி சாப்பிட்டுவிட்டு, ஒரு குழந்தை பழைய சோறு சாப்பிட்டால், எப்படி அந்தக் குழந்தை ஏங்குமோ, அதேபோல் பக்கத்திலே இருக்கின்ற வயலிலே இருபோகச் சாகுபடிக்காக கதிர் அறுக்கின்றபோது, அறுத்திருக்கின்ற வயல்காரர்கள் வயலைக் காயப்போட்டு இருபோகம் விவசாயம் செய்ய முடியாமல் கவலையாக இருந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகையால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்போது நமக்கு முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையில் 142 அடி வரை உயர்த்தும் ஆணை வெற்றியாகக் கிடைத்திருக்கிறது. இந்த 142 அடி தண்ணீர் வருகின்றபோது, தண்ணீர் நமக்கு இருபோகத்திற்குப் போதிய அளவிற்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகையால், விவசாயிகளுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று இந்த அரசு, மேலூர் தொகுதியில் இருக்கின்ற 45 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும்,

பக்கத்திலே இருக்கின்ற சமயநல்லூர் தொகுதியில் இருக்கின்ற 40 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் இந்த ஆண்டிலிருந்து இருபோகம் விளையக்கூடிய வாய்ப்பை அறிவிக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ரொம்ப ஜாக்கிரதையாகச் சொன்னேன்; தற்போது சாத்தியம் இல்லை என்று சொன்னேன். இருக்கிற தண்ணீர், ஏற்கெனவே இருக்கின்ற பாசன நிலங்களுக்குத் தருவதற்குப் போதாததாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், மேலும், 136 அடிக்குமேல் தண்ணீரை நிரப்பி அந்தத் தண்ணீர் நாம் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவுக்கு வருமானால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கவனிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பவானி தொகுதிக்கு உட்பட்ட முகாசிபுதூர் ஊராட்சியில் பெரிய ஏரி சுமார் 115 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரிக்கு சித்தாறு காட்டாற்றிலிருந்து மழைக் காலங்களில் தண்ணீர் வந்து நிரம்புகின்றது. இந்த ஏரி ஆழம் இல்லாததால் சுமார் 20 ஏக்கர் நிலத்தில் மட்டும் தண்ணீர் தேக்கப்படுகின்றது. மீதமுள்ள 95 ஏக்கர் நிலம் மண்மேடாக உள்ளது. இந்த மண்மேட்டினை எடுத்து, ஏரியை அகலப்படுத்தி, ஆழப்படுத்தினால் மொத்தம் உள்ள 115 ஏக்கர் நிலங்களில் நீர்ப் பிடிப்பு ஏற்படுத்தலாம். ஆயிரக்கணக்கான ஏக்கரிலே விவசாயம் செழிப்பாக இருக்கும். அதேபோன்று கால்நடைகளுக்கும் போதிய அளவு தண்ணீர் கிடைக்கும். ஆகவே, இந்த ஏரியை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி விவசாயத்திற்கு ஏற்றவாறு இருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–50

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பெரியாறு பாசனம் பற்றியது. கேட்பது கீழ் பவானி. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவருடைய கோரிக்கையைத் தனியாக எழுதிக் கொடுத்தால், அதற்கு இயன்ற வரை அரசு நடவடிக்கை எடுக்கும்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

**நியாயவிலைக் கடை**

***981—திரு. கோ. எதிரொலி மணியன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறப்பதற்கு உள்ள நிபந்தனையான அட்டைகளின் எண்ணிக்கை 500 மற்றும் 350 என்பதை 400 மற்றும் 300 என மாற்றி ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி பிறந்தது அன்று, நல்ல பதில் கிடைத்தது இன்று என்று ஒரு பாடல் உண்டு. ஆனால், தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே பதில் கிடைத்தது அன்று எங்களுக்கு. கேள்வி வந்தது இன்று. அதாவது, கிராமப்புறத்திலே ஏழைப் பெண்கள் குறிப்பாக, கூலிக்கு வேலைக்குப் போகின்ற பெண்கள் 3 கிலோ மீட்டர் தூரம், 2 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, தங்களுடைய ரேஷன் பொருட்களை தலையிலும், இடுப்பிலும் சுமந்துகொண்டு வந்த கொடுமைகள் அகற்றப்பட வேண்டும் என்று நாங்கள் பல ஆண்டுக் காலம் வைத்த கோரிக்கை, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கடந்த கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றப்பட்டது என்கின்ற வகையிலே, நாங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதே வேளையில், இங்கு இந்தப் பகுதிநேர ரேஷன் கடைகளை விண்ணப்பித்துதான் திறக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அதிகாரிகளே கணக்கெடுத்து, எந்தெந்த கிராமங்களுக்குத் தேவையோ—2 கிலோ மீட்டருக்குள்ளாக இருக்கின்ற கிராமங்கள், 1½ கிலோ மீட்டருக்குள்ளே இருக்கின்ற கிராமங்கள், 150 அட்டைகளுக்கு மேல் இருக்கின்ற கிராமங்கள்—அங்கு ரேஷன் கடையைத் தாங்களாகவே திறக்க வேண்டும் என்கின்ற ஆணையை இந்த அரசு அறிவிக்க வேண்டும் என்கின்ற வேண்டுகோளை

வைத்து, இந்தப் பகுதிநேரக் கடைகள் திறப்பதற்கு என்னென்ன அளவுகோல் என்பதையும், தமிழ்நாட்டில் எத்தனை பகுதிநேர ரேஷன் கடைகள் இருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு கடையிலிருந்து இன்னொரு பகுதிநேரக் கடைக்கு செல்ல வேண்டும் என்று சொன்னால், *200* அட்டைகள் இருக்க வேண்டும், *2* கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும் என்ற அளவுகோல் இருந்தது. பல சட்டமன்ற உறுப்பினர்கள், பல பொது மக்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே அறிவுரையைப் பெற்று, இப்போது 1½ கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும், *150* அட்டைகள் இருந்தால் போதும் என்பது புதியதாக ஆணை *147*, *24–8–2006* அன்று பிறப்பிக்கப்பட்டது. அதன் வாயிலாக, இன்றைக்கு பல மனுக்கள் எல்லாம் பெற்று உடனுக்குடன் பரிசீலனை செய்து, இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவரே—இப்போது அரசுக்கு வர வேண்டிய அவசியம் இல்லை—மாவட்ட ஆட்சித் தலைவரே அதைப் பரிசீலனை செய்து அங்கே பகுதிநேரக் கடைகளைக் கொடுக்கலாம் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த வகையிலே, தமிழ்நாடு முழுவதும் *5,251* பகுதிநேரக் கடைகள் இப்போது துவங்கப் பட்டிருக்கின்றன. மேலும், அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள் உடனுக்குடன் கொடுத்தால், இந்த 1½ கிலோ மீட்டர் தூரம் அளவுகோல், *150* அட்டைகள் இருந்தால் போதும், அந்தந்தப் பகுதியிலே கடைகள் உடனுக்குடன் துவக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ரேஷன் அட்டைகள் கேட்டு, அது பரிசீலிக்கப்பட்டு, வட்டாட்சியர் மூலமாக, அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அங்கே மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகிக் கேட்கிறபோது, அத்தனை கார்டுகளும் சென்னையிலே print செய்துதான் அனுப்ப வேண்டும் என்ற ஒரு நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, உடனடியாகப் பரிசீலித்து வழங்க வேண்டிய ரேஷன் அட்டைகளை, யார் யாருக்கு வழங்க முடியுமோ, விரைந்து இந்த அரசு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரிலே இங்கே புதியதாக அட்டை வழங்கப்படுமா என்று பல சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டார்கள். அதனையடுத்து, அரசு ஆணை பிறப்பித்து, கிட்டத்தட்ட இன்றைக்கு தமிழ்நாட்டிலே *10* இலட்சம் மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன. அந்த மனுக்கள் எல்லாம் தலத் தணிக்கை செய்வதற்காக அனுப்பப்பட வேண்டும். *2* இலட்சம் மனுக்கள் தலத் தணிக்கை செய்யப்பட்டு, இப்போது அதற்குரிய கார்டுகள் இப்போது ELCOT–ல் print செய்யப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. இடையிலே, உள்ளாட்சித் தேர்தல் வந்துவிட்ட காரணத்தினால் மீதம் இருக்கிற *8* இலட்சம் மனுக்களை தலத் தணிக்கை செய்ய முடியவில்லை. இப்போது ஒரு வார காலமாக அந்தந்தப் பகுதியிலே தலத் தணிக்கை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏன் என்று சொன்னால், தலத் தணிக்கை செய்து கொடுத்தால்தான், முறையாக கார்டுகளை நாம் வழங்க முடியும். ஏற்கெனவே அப்படிச் செய்யாத காரணத்தினால், பல தவறான கார்டுகள் எல்லாம் வந்துவிட்ட காரணத்தினால்—அதையும் மாண்புமிகு முதல்வரிடத்திலே நாங்கள் கலந்து பேசி அவர் ஒரு அறிவுரை வழங்கினார் — எனவே, இப்பொழுது பத்து, பத்து மாவட்டங்களாகப் பிரித்து, ஆங்காங்கு ஒரு கருத்தரங்கு நடத்தி, தவறான இந்தக் கார்டுகளைக் களைந்து முறைப்படுத்த வேண்டும் என்ற கருத்தரங்கு நடைபெற்றது. அது ஒரு பகுதியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. *8* இலட்சம் மனுக்களையும் கூடிய சீக்கிரத்திலே தலத் தணிக்கை செய்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக உரிய முறையிலே கார்டுகள் வழங்கப்படும்.

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் *150* கார்டுகளும், 1½ கிலோ மீட்டர் இடைவெளியும் இருந்தால் புதிய கடைகள் அமைக்கலாம் என்று இங்கே தெரிவித்தார்கள். திருப்பூர் தொகுதியில் தமிழ்நாட்டினுடைய பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த மக்கள் தொழில் காரணமாக குடியேறியுள்ள நிலையில், சமீபத்தில் *80* ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய ரேஷன் கார்டுகள் தேர்தலுக்கு முன்னாலே வழங்கப்பட்டன. அங்குள்ள ரேஷன் கடைகளில் சுமார் *2* ஆயிரத்திலிருந்து *4* ஆயிரம் ரேஷன் கார்டுகள் வரையில் ஒரு கடையிலே

[2006 டிசம்பர் 6

பொருள் வாங்கவேண்டிய ஒரு நிலை இருக்கிறது. தேர்தல் முடிந்த பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எல்லாம் வைத்து அமைச்சர் சொன்னார் என அவர்களிடத்தில் பேசினோம். அந்தக் கடைகள் உடனடியாக இரண்டு அல்லது மூன்றாகப் பிரிக்கப்படும் என்று சொல்லி நான்கு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால், இன்றுவரையில் அதன்மீது உரிய நடவடிக்கை இல்லை. ரேஷன் பொருள் வாங்குவதற்காக செல்ல வேண்டியவர்கள் காலையில் இருந்து மாலைவரை காத்திருந்து பொருள் வாங்க முடியாமல் மீண்டும் மறுநாள் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இரண்டு நாட்கள் அவர்களுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. திருப்பூரினுடைய விசேஷமான நிலைமையைக் கணக்கில்கொண்டு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு 2,000 முதல் 4,000 கார்டுகள் வரை எல்லாம் இருக்கக்கூடிய அந்த நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற வகையிலே கூடுதலான கடைகளை உடனடியாகத் திறப்பதற்கு உரிய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மாத காலத்திற்கு முன்னால் நேரடியாகத் திருப்பூருக்கு நானே சென்று, 10 அங்காடிகளை நான் திடீர் சோதனை செய்ததிலே பல தவறுகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு தவறு செய்தவர்களை அந்த இடங்களிலே தற்காலிக வேலை நீக்கம் செய்துவிட்டு வருகிறபொழுது நானே அந்தக் கூட்டங்களைப் பார்த்தேன். வளர்மதி கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக அங்கே பெரும்பான்மையான கடைகள் நடைபெறுகின்றன. ஒரு கடையிலே இரண்டாயிரம், மூன்றாயிரம் என்கிற அடிப்படையிலே கார்டுகள் இருந்ததை நானும் நேரடியாகப் பார்த்தேன். அப்பொழுதே அதிகாரிகளை வரவழைத்து உடனுக்குடன் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், புதிய இடங்களைப் பாருங்கள், குறைந்தபட்சம் ஆயிரம் கார்டுகளை வைத்து பக்கத்துத் தெருவாக இருந்தால் அந்தந்தப் பகுதியிலே இடங்களைப் பாருங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். உள்ளாட்சித் தேர்தல் வந்துவிட்ட காரணத்தினால் கொஞ்சம் காலதாமதம் ஆனது. நேற்றையதினம்கூட அதுசம்பந்தமாக கூட்டுறவு இணைப் பதிவாளரை வரவழைத்துப் பேசியிருக்கிறோம். இன்னும் கூடியசீக்கிரத்திலே சட்டமன்ற உறுப்பினருடைய அந்தக் கோரிக்கையை ஏற்று, அந்தந்தப் பகுதியினுடைய நிலைமையை அறிந்து, ஆங்காங்கு புதியதாகக் கடைகள் துவக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.



2006 டிசம்பர் 6]

**15—**

## பஞ்சாலை சீரமைத்தல்

***3707—திரு. குத்தாலம் க. அன்பழகன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மணல்மேடு கூட்டுறவுப் பஞ்சாலையைச் சீரமைத்து மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாகை மாவட்டம், மணல்மேடு கூட்டுறவுப் பஞ்சாலையைச் சீரமைத்து மீண்டும் இயக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது தமிழக அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996—2001 கழக ஆட்சிக் காலத்தில் இன்றைக்கு அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிற கைத்தறித் துறை அமைச்சருடைய தகப்பனார் காலத்தில் சிறப்பாகச் செயல்பட்டு, வெளி மாநிலங்களுக்கும் வெளிநாட்டிற்கும் நூல் ஏற்றுமதி செய்து வந்த மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையின் நிர்வாகம் அதன் தொழிலாளிகளுக்கு தவறான ஓர் அறிவுறுத்தலைக் கொடுத்து, நீங்கள் வேலையிலிருந்து VRS பெறவில்லையென்று சொன்னால், நீங்கள் பணி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்ற தவறான அறிவுறுத்தலின் காரணமாக அன்றைக்குப் பணியாளர்கள் அனைவரும் VRS வாங்கிக் கொண்டு 30—6—2003 அன்று அந்த ஆலை மூடப்பட்டது. 300-க்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் புனர்வாழ்வு பெற்று வந்த இந்த ஆலையில் இதற்காக மத்திய அரசாங்கத்தினுடைய தொகையையும் அந்த நூற்பாலை பெற்றுக்கொண்டு வந்தது. இன்றைக்கு அது சரியான காரணங்கள் இன்றி திறக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தினால் நாகை மாவட்டத்தில், குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறந்த மாவட்டத்தில் இருக்கின்ற ஒரேயொரு கூட்டுறவு நூற்பாலை அது. அனைத்துத் தரப்பினருக்கும் மறுவாழ்வளித்து வரும் மாண்புமிகு முதல்வர் அவர்களினுடைய பொற்கால ஆட்சியில் இந்த நூற்பாலையைப

[2006 டிசம்பர் 6

புனரமைத்து மீண்டும் இயக்கினால் நேரிடையாக 500 தொழிலாளர்கள் மற்றும் சார்புத் தொழிலாகக் கொண்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் மீண்டும் ஒளிபெறும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–00

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகையில் உள்ள இந்தக் கூட்டுறவு நூற்பாலையினுடைய நிலைமை (குறுக்கீடுகள்) நாகை மாவட்டம், மணல்மேடு கூட்டுறவு நூற்பாலையினுடைய நிலைமை (குறுக்கீடுகள்) 582 பணியாளர்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது, உட்காருங்கள். அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்) வெளியில் செல்வதாக இருந்தால் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முடியாது உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** கடந்த ஆட்சியினுடைய விருப்ப ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையிலே 582 பணியாளர்கள் வெளியே சென்றிருக்கிறார்கள். அதேபோல், இந்த ஆலையினுடைய குவிந்த நட்டம் 23 கோடியே 58 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய். என்று இருக்கிறது. அதனால் இப்பொழுது தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், கடந்த ஆட்சியினுடைய திட்டத்தின் அடிப்படையிலே மூடப்பட்டிருக்கிற 13 ஆலைகளிலே எந்தெந்த ஆலைகளை நடத்த முடியும் என்கிற ஒரு செயற்குறிப்பைக் கேட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே சேலம், பேட்டை, தாராபுரம், மதுரை மிசோரியர் கூட்டுறவு நூற்பாலைகளை இயக்குகிற சூழ்நிலையை உருவாக்குவதற்கான நிலையை அரசின்மூலமாகச் செய்வதற்கு பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப் பின்னால் நாகை மாவட்டத்தில் உள்ள இந்த நூற்பாலையினைச் செயல்படுத்தக்கூடிய நிலை எப்படி இருக்கிறது என்று நம்முடைய துறையின்மூலமாகப் பார்த்து, முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அது செயல்படுத்தப்படும் என்கிற உறுதியைத் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன். (குறுக்கீடுகள்) திரு. எல். ரவிச்சந்திரன்.



2006 டிசம்பர் 6]

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்பொழுது தனியார் பஞ்சாலைகள் அதிகமாகப் பெருகி வருகின்றன. ஆனால் ஏனோ நமது தமிழகக் கூட்டுறவு நூற்பாலைகள் அனைத்தும் மூடப்பட்டு வந்துகொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக எனது தொகுதியிலேயே, கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளது. இது கிட்டத்தட்ட, சுமார் 10 வருடங்களாக மூடியே இருக்கின்றது. ஆகவே இதனைத் திறக்க அரசு ஆவன செய்யுமா? அதேபோல், தனியார் பஞ்சாலைகள் இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஏன் நமது தமிழகக் கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும் மூடப்படும் நிலை ஏற்பட்டு வருகின்றது என்பதை அமைச்சர்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை மூடுகிற திட்டத்தையே நடைமுறைப்படுத்தியது உங்களுடைய அரசுதான் என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்கள் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** நான் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, நான் சொல்கிறேன். சொல்வதற்கு விட்டால்தானே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லட்டும். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:** 31–12–2002 அன்று நடந்த, அரசு முதலீடுகளைத் திரும்பப் பெறுவதற்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு ஆலைகளில் தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தை அமல்படுத்தவும் ஆலைகளைத் தனியார்மயமாக்கவும் முடிவெடுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலேதான் 13 ஆலைகளில் தன் விருப்ப ஓய்வுத் திட்டம் அரசின்மூலமாக இங்கே அறிமுகப்படுத்தப்பட்டது என்பதும், முந்தைய அரசிலே 4 ஆலைகள் அவற்றினுடைய சூழ்நிலை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை மீண்டும் துவக்குகிற நிலை இப்போது உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கடந்த ஆட்சியினுடைய செயல்மூலமாகத்தான் 13 ஆலைகளிலே இருந்த 8,750 தொழிலாளர்களை தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்மூலமாக 99 கோடியே 79 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் கொடுத்து வீட்டிற்கு நீங்கள்தான் அனுப்பியிருக்கிறீர்கள் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2006 டிசம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 16 (குறுக்கீடு) வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு சி. கோவிந்தசாமி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

**வணிக வரி அலுவலகம்**

***5593—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் வட்ட வணிக வரி அலுவலகம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருப்பூர் நகரில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகிற வணிக வரி அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

முற்பகல் 10–05

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் செயல்பட்டு வருகிற வணிக வரி அலுவலகம், மாவட்ட வணிக வரி அலுவலகத்திற்கு இணையாக அங்கே பணிகள் கூடுதலாக இருக்கிற சூழ்நிலையில், மிகச் சிறிய குறுகலான கட்டடத்தில் அந்த அலுவலகம் செயல்பட்டு வருகிற காரணத்தினால், பல்வேறு இடையூறுகளும் சிரமங்களும் ஏற்பட்டு வருகிற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, புதிய வணிக வரிக் கட்டடம் ஒன்று திருப்பூருக்குக் கட்டித் தர, அதனுடைய தேவையைக் கருத்தில் கொண்டு, இனிமேல் அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் மொத்தம் 10 வணிக வரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அதிலே ஏழு வணிக வரி அலுவலகங்கள் சொந்தக் கட்டடங்களிலும், மூன்று வணிக வரி அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. தற்போதுள்ள நிலையில், மூன்று கட்டடங்களுக்கு இடங்கள் ஆர்ஜிதம் செய்கிற நிலை எதுவும் இல்லை. எதிர்காலத்தில் அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



006 டிசம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, மாண்புமிகு றுப்பினர் திரு. பா. வேல்துரை, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

**விளையாட்டு மையம்**

***1460—திரு. பா. வேல்துரை:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவியில் ஒரு விளையாட்டு மையம் ஏற்படுத்தித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேரன்மகாதேவி தொகுதியில் சேரன்மகாதேவியில் ஒரு விளையாட்டு மையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மகாதேவியிலே ஏழு பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. தொகுதியினுடைய பரப்பளவு மிகப் பெரியதாக இருக்கிறது. ஆனால் நடந்த ஆட்சிக் காலத்திலே அறிவித்து, சேரன்மகாதேவி தொகுதியிலே மூலச்சி என்ற ஒரு சின்ன கிராமத்திலே ஒரு விளையாட்டு மையத்தை இப்போது அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தொகுதி முழுக்க உள்ள மக்கள் அதனால் பயன்பட முடியாது. ஆகவேதான் தொகுதியினுடைய மத்தியப் பகுதியிலே ஒரு விளையாட்டு மையம் வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து ஒரு விளையாட்டு மையம் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, சேரன்மகாதேவி, அந்தப் பகுதியிலே முக்கியமான பகுதிதான். மூலச்சி என்பது சேரன்மகாதேவியிலிருந்து இரண்டு கிலோ

மீட்டர் அருகிலே இருக்கிற கல்லிடைக்குறிச்சியை ஒட்டியது—அதுவும் உறுப்பினருடைய தொகுதியைச் சார்ந்த பகுதிதான் என்பதும், கடந்த கால ஆட்சியிலே செய்யப்பட்டதற்கு நான் பொறுப்பல்ல என்பதையும், ஏற்கெனவே அது அரசின்மூலம் ஒதுக்கப்பட்டு, நிதி கொடுக்கப்பட்டு பாதி வேலை முடிந்த நிலையில், இன்று மக்களுடைய பங்கீட்டுத் தொகையாக வரக்கூடிய நிதி, வராத காரணத்தால், அந்தப் பணி நிறைவுபெறாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நானே நேரடியாகச் சென்று அந்த விளையாட்டு மைதானத்தைப் பார்வையிட்டு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமும் பேசி, அவர்களும் மக்கள் பங்களிப்புக்கான நிதிக்கு ஏற்பாடு செய்து, நானும் அதற்கான நிதியை ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லி, அந்த வேலை நடைபெற இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே அந்த நிதியைச் செலவு செய்துவிட்ட காரணத்தால், அந்த வேலை முடிக்கப்பட வேண்டும். அதற்காக உறுப்பினர் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். மீண்டும் தேவையானால் சேரன்மகாதேவியிலே அமைப்பதற்கு ஐந்து ஏக்கர் இடத்தையும், அதற்குத் தகுந்த அளவிலே மக்கள் பங்கீட்டுத் தொகையையும், 30 இலட்சத்தில் பாதியையும் அவர் கொடுப்பாரேயானால், இந்த அரசு பரிசீலிக்கும் என்றும், நெல்லை மாவட்டத்திலே அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே பாளையங்கோட்டையிலே, மாவட்ட விளையாட்டு மையம் ஒன்றும், அதே நேரத்தில் ஆலங்குளத்திலே, இதேபோல, சிறு விளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த திட்டம், அதை மாற்ற முடியவில்லை, நிதி இல்லையென்று சொல்கிறார்கள். அதற்கு நமது அரசு கண்டிப்பாக நிதியை ஒதுக்கி செய்து தர வேண்டும். அதோடு, இன்னொன்றையும் நான் உங்களிடத்திலே கேட்க விரும்புகிறேன்; ஏழு பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே இப்போது இருக்கிற மக்களுக்கு எல்லாம் 35 வயது, 40 வயதிலே அதிகப்படியான sugar, கொழுப்பு போன்ற நோய்கள் எல்லாம் வந்து, ஆயுட்காலம் குறைவாகும் சூழ்நிலை இருக்கிறது. எனவே ஒரு நவீன உடற்பயிற்சிக் கூடம் எல்லாப் பேரூராட்சி மன்றங்களிலும் அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். அப்படி ஏற்படுத்தித் தருகிறபோது, நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய பெயரிலேகூட ஒரு உடற்பயிற்சிக் கழகம் ஒவ்வொரு ஊரிலும், தொகுதிக்கு ஒரு ஐந்து சென்டரிலேயாவது வைத்தால், பொது மக்கள் எல்லாம் நல்லமுறையிலே பயன்பெறக்கூடிய ஒரு வாய்ப்பு





இருக்கிறது. கொழுப்பு, sugar நோயிலிருந்து காப்பாற்றப்படுவார்கள். எனவே அரசு நவீன உடற்பயிற்சிக் கழகம் ஏற்படுத்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லிடைக்குறிச்சியில் கட்டப்பட்டு வருகிற அந்த விளையாட்டு மைதானத்தில் அரசினுடைய பணமாக ரூ.15 இலட்சம் ஏற்கெனவே செலவு செய்யப்பட்டு பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த இடத்தில் அந்த விளையாட்டு மைதானத்தை முடிப்பதற்கான ஒத்துழைப்பையும் கொடுக்க வேண்டும். இன்னும் அதிநவீன விளையாட்டு மையம் என்று கேட்கிறார். ஒருவேளை அவர் Gym-ஐ சொல்கிறார் என்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்போடு அதுவும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டம், நாகர்கோவிலுக்கு அருகே ராஜாக்கமங்கலம் பகுதியில் சர்வதேசத் தரத்துடன் ஒரு விளையாட்டு மையம் அமைக்கும் பணி, இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்றது. ஆனால், தற்போது அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட, சமீபத்தில் நாகர்கோவிலுக்கு வந்த சமயம், இதுசம்பந்தமாக பத்திரிகைகளுக்கு விளக்கம் அளித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மீண்டும் குமரி மாவட்டத்தில் அனுமதித்த பகுதியில் விளையாட்டு மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், திரு. ராஜன் அவர்கள் தெரிவித்த அந்த தேசிய விளையாட்டு மைதானத்திற்காக ஒதுக்கப்படவேண்டியது 50 ஏக்கர் இடம். நாகர்கோவிலில் கொடுக்கப்பட்ட அந்த இடத்தை இன்றைக்கு S.A.I. என்று சொல்லக்கூடிய, மத்திய விளையாட்டு அமைப்பு ஏற்றுக்கொள்ளாத காரணத்தால், அந்த விளையாட்டு அமைப்பு வருவதற்கு வாய்ப்புகள் குறைவாக இருக்கின்றன. இன்னும் அது பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[2006 டிசம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியிலுள்ள மறைமலை நகர் நகராட்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் உருவாக்கப்பட்ட ஒரு முக்கிய நகராட்சி. 50,000 மக்கள்தொகை கொண்டுள்ள அந்த நகராட்சியில் இதுவரை விளையாட்டு மைதானம் எதுவும் அமைக்கப்படவில்லை. எனவே, அப்பகுதியில் விளையாட்டு மையம் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்கிற அந்த மாவட்டத்திலே, ஏற்கெனவே விளையாட்டு மையம் அமைக்கப்பட்டு நடைமுறையில் இருக்கிறது. அந்த நகரத்திலே அவர் சொல்கிறபடி விளையாட்டு மைதானம் அமைக்க விரும்புவாரேயானால், அந்தப் பகுதியிலே விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு 5 ஏக்கர் இடமும், அதற்காக அரசின்மூலம் ஒதுக்கப்படுகிறபோது, மக்கள் பங்களிப்பான 50 சதவீதத்தை ரூ.15 இலட்சத்தை அந்தப் பகுதியிலே இருந்து மக்கள் செலவழிக்கத் தயார் என்றால், அந்தப் பணியை அரசு செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## சத்துணவு மையம்

***1476—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுகுன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்டிக்குப்பம் கிராமத்தில் குழந்தைகள் சத்துணவு மையம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆண்டிக்குப்பம் கிராமத்தில் புதிய குழந்தைகள் சத்துணவு மையம் 15–8–2006 அன்று துவங்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது.



2006 டிசம்பர் 6]

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினராக இரண்டாவது முறையாக வெற்றிபெற்ற பிறகு, அரசுக்கு என்னுடைய கோரிக்கையை வைத்திருந்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று, தற்போது 15–8–2006–லிருந்து அந்தக் கிராமத்திலே, இந்த அங்கன்வாடி மையம் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்குச் சொந்தமாகக் கட்டடம் இல்லை. இதுபோன்று என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலே அங்கன்வாடி மையங்களுக்குச் சொந்தக் கட்டடம் இல்லை. அதனாலே, தெரு ஓரங்களிலே அல்லது பஸ் நிலையங்களிலே, பல்வேறு சிறு, சிறு இடங்களில் இருப்பதாலே குழந்தைகள் காற்றோட்டமான பகுதியிலே இல்லாமல் ஒரு சிறு அறையில் இருப்பதாலே காற்றோட்ட வசதிகூட இல்லை. அந்தக் குழந்தைகள் விளையாடுவதற்கு விளையாட்டுப் பொருள்கள் இல்லை என்ற குறையெல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் நம்முடைய அரசு பரிசீலித்து புதிய கட்டடமும், அந்தக் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களும் அளிக்குமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கருத்தினைக் கொண்டு, தற்போது நாங்கள் தமிழ்நாடு முழுவதும் எங்கெல்லாம் புதிய கட்டடங்கள் அவசியமோ, அதைப் பார்த்து ஆராய்ந்து, அதற்குரிய நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம். முக்கியமாக ஒரு விஷயம். முதல் முறையாக நபார்டு வங்கி, குழந்தைகள் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பத்தாயிரம் கோடி ரூபாய் கடன் உதவியாகத் தருவதற்குத் தயாராக உள்ளது. அதற்காக நாங்கள் நபார்டு வங்கியை அணுகியுள்ளோம். வருகின்ற காலங்களில் இந்தத் திட்டம் இன்னும் சிறப்பாகச் செயல்படும் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்.

(முற்பகல் 10–15

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கிற கட்டடங்களிலே, அங்கன்வாடி மையங்களிலே மின் விசிறி இல்லை; அதேபோன்று மின் விளக்குகளும் இல்லை என்ற குறையிருக்கிறது. அதையும் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குரிய அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

[2006 டிசம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தேர்தல் அறிக்கையிலே சொல்லியவண்ணம், வாரத்திற்கு இருமுறை முட்டை வழங்குகின்ற அற்புதமான ஏற்பாட்டினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்திருக்கின்றார்கள். நிதியுதவி பெறாத பள்ளிகளிலே சத்துணவு மையங்கள் அமைக்கப்படுவதில்லை. குறிப்பாக, தொண்டு நிறுவனங்கள், தொண்டின் காரணமாக, வியாபார நோக்கமின்றிச் செயல்படுகின்ற பள்ளிகளுக்குச் சத்துணவு மையங்கள் தரப்படுவதில்லை. குறிப்பாக, எங்களுடைய தொகுதியிலே, பாண்டரவேடு என்ற ஒரு கிராமத்திலே தனியார் பள்ளி இருக்கிறது; தொண்டு நிறுவனம் நடத்துகிறது. ஆனால், அங்கே படிக்கின்ற மாணவர்கள் ஏழையெளியவர்கள்தான். அங்கே சத்துணவு மையம் இல்லை. ஆகவே, அத்தகைய பள்ளிகளுக்குச் சத்துணவு மையங்கள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** கேள்வி, குழந்தைகள் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைப்பற்றியது. சத்துணவுத் திட்டத்தைப்பற்றித் தனிக் கேள்வியாகக் கேட்கவும்; பதில் அளிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

**கால்நடை மருத்துவமனை**

***3636—திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கோவிந்தாபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2006 டிசம்பர் 6]

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கோவிந்தாபுரம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசுத் தரப்பில் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், வேப்பிலை ஊராட்சியில் கோவிந்தாபுரம் என்ற ஒரு கிராமம்; மலைப்பகுதிக்கு அருகில் இருக்கின்ற கிராமம். இந்தப் பகுதியிலே, கொங்காரப்பட்டி, வி.மோட்டூர். வீரியன்தண்டா, மங்காணிக்காடு, கரடிக்குண்டு, கோமாளி நகர் போன்ற குக்கிராமங்கள் மலைப் பகுதிக்கு அருகிலே இருக்கின்றன. இந்தக் கிராமத்தினையொட்டி, வேப்பாடி ஆறு என்ற மிகப் பெரிய ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றுக்கு அருகிலே, தருமபுரி தொகுதியைச் சார்ந்த முத்தம்பட்டி, தண்டா, கருங்கல்லூர் போன்ற கிராமங்களும் இருக்கின்றன. இது மிக அதிகமாக ஆடு, மாடுகள் இருக்கின்ற ஒரு பகுதியாக இருக்கின்றது. இங்குள்ள ஆடு, மாடுகள் சிகிச்சைக்காகச் செல்லவேண்டுமென்று சொன்னால், 20 கி.மீ. தொலைவிலே இருக்கின்ற காடையாம்பட்டி பேரூருக்கும், தருமபுரி தொகுதியைச் சார்ந்த பொம்மிடிக்கும் செல்ல வேண்டியிருக்கின்றது. எனவே, அரசு இதைப் பரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலே இவற்றைப் பாதுகாக்கின்ற வகையிலே, ஆடு, மாடுகளுக்கென்று கால்நடை மருத்துவமனை கட்டாயமாகத் தொடங்கவேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியத்தில் ஏற்கெனவே மூன்று கால்நடை மருந்தகங்களும், இரண்டு கால்நடைக் கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறும் அந்த கோவிந்தாபுரம் குக்கிராமத்தில் கிட்டத்தட்ட 1,400 கால்நடைகள்தான் தற்சமயம் உள்ளன. அருகில் கே.என்.புதூரில் ஒரு கால்நடைக் கிளை நிலையமே செயல்பட்டு வருகிறது. அதனால் அதன்மூலம் கிடைக்கும் சிகிச்சைப் பணிகள் இந்தக் கிராமத்திற்குப் போதுமானதாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல, 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் நம்முடைய அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் அவர்கள், 10 கால்நடை மருந்தகங்களுக்கும், 30 கால்நடை கிளை நிலையங்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளார்கள். அதிலே, சேலம்

[2006 டிசம்பர் 6

மாவட்டத்திலே மிகவும் அதிகமாகத் தேவைப்படும் சங்ககிரி, சின்னக்கவுண்டனூர் கிராமத்திலும், ஏற்காடு ஒன்றியம், வாழவந்தி கிராமத்திலும், அதுபோல, தலைவாசல் வட்டாரத்தில் புத்தூரிலும், இந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் மட்டுமே 3 கால்நடை மருத்துவ நிலையங்கள் தொடங்கவுள்ளோம். அதனால் நம்முடைய உறுப்பினர் அவர்களின் கோரிக்கை வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கிறேன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சி ஒன்றியத்திலே கால்நடை மருந்தகமும், கால்நடை மருத்துவமனையும், கிட்டத்தட்ட ஐந்து இருக்கின்றன. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், முழுமையாக, எங்களுடைய தொகுதி விவசாயிகள் சார்ந்திருக்கிற தொகுதி என்கின்ற அடிப்படையிலே, அங்கே நான் அந்த உதவி இயக்குநரை அணுகிக் கேட்டபோது, மேலும் எங்களுக்கு கால்நடை மருந்தகங்கள் வர வேண்டும் என்று சொன்னபோது, அவர் ஐந்து இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார். ஆனால் அவற்றிலே இரண்டுதான் இன்றைக்கு செயல்படுகின்றன. அது நிச்சயமாக மேலும் வேண்டுமென்று சொன்னால் அரசாங்கம்தான் அந்த முடிவை எடுத்துச் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10-20*

*(திரு. பி.கே. சேகர்பாபு தன்னுடைய இருக்கையைவிட்டு எழுந்துவந்து திரு. கோ. அரி அவர்களது இருக்கைக்கு அருகில் அமர்ந்து கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் திரு. கோ. அரி இரண்டு பேரும் இங்கே பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். பேச வேண்டுமென்றால் வெளியே சென்று பேசிவிட்டு வாருங்கள். இல்லையென்றால் உங்களுடைய இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பி.கே. சேகர்பாபு, உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். உங்கள் இடத்திற்குப் போங்கள். உங்கள் இருக்கைக்குப் போங்கள். நான் அப்போதிருந்தே பார்த்துக்கொண்டே இருக்கிறேன். நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, பேச வேண்டுமென்றால் வெளியேபோய்ப் பேசிவிட்டு வாருங்கள். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிலே நீங்கள் சிரித்து



2006 டிசம்பர் 6]

விளையாடிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குப் போங்கள். உங்களுக்கு ஒதுக்கிக்கொடுத்த இருக்கை எங்கே? (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை விதி இருக்கிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது, நீங்கள் போய் உட்காருங்கள், அங்கே போய் உட்காருங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** உறுப்பினர்கள், நீங்கள் பிறகு பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இடத்திற்குப் போங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உங்கள் உறுப்பினரை அவருடைய இருக்கையில் போய் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கேள்வி-பதில் நடந்துகொண்டிருக்கிறது. அவர்கள் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) முதலில் திரு. சேகர்பாபு உங்கள் இருக்கைக்குப் போங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை ஒதுக்கியிருக்கக்கூடிய இடத்தில்தான் உட்கார வேண்டும், உங்கள் இருக்கைக்குப் போங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் பேரவைத் தலைவர் அவர்கள் யாரைக் கேள்வி கேட்க அனுமதிப்பது என்று திரும்பிப் பார்க்கிறபோது அங்கே உள்ள மேஜையிலே உள்ள அந்த ஏட்டில் எந்த இடத்தில் யார் இருக்கிறார் என்று அந்தப் பெயரைப் பார்த்துதான் பெயரை அழைக்க வேண்டும். அப்படிப் பெயரைப் பார்த்து அழைக்கிறபோது இந்தக் குறிப்பிட்ட இடத்தில் அவர் வந்து அமர்ந்திருக்கிற இடத்தில் யார் இருக்கிறாரோ அவரை அழைக்க நேரிட்டால் அப்போது தவறாகப் போய்விடும். ஆகவே, கேள்வி நேரத்தில் யாரும் இடம் மாறி அமர்வதற்கு அனுமதி இல்லை. இடம் மாறி அமர்ந்தவர் கேள்வி கேட்கிறாரா அல்லவா என்பது பிரச்சினை அல்ல. அந்த இடத்தில் இருக்க வேண்டியவர்தான், அந்த இடத்தில் இருக்க வேண்டும். ஆகவே இடம் மாறி அமர்வதை அனுமதிக்கக்கூடாது என்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடுகள்) திரு. சேகர்பாபு (குறுக்கீடு) ரைட். உங்கள் இடத்திற்குப் போங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பதில் சொல்வதுகூட அவர் இடத்திற்குப் போய்தான் பதில் சொல்லவேண்டுமே தவிர இந்த இடத்திலிருந்து பதில் சொல்லக் கூடாது.

[2006 டிசம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. டி.ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்) இதில் என்ன கேள்வி இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை இதில் என்ன பேசப்போகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அதாவது உறுப்பினருக்கு இருக்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது, எதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? அந்த இடத்தில்தான் அவர் இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) இங்கே கேள்வி பதில் நடந்து கொண்டிருக்கிறது. சிரித்து விளையாடிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** கொஞ்சம் என்னைப் பேச விடுங்கள். பிறகு பேசலாம் இருங்கள். நான் பேசி முடித்துவிடுகிறேன். பிரச்சினை என்னுடைய தொகுதி பற்றியது. உட்காருங்கள். உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள், இருக்கிற நேரத்தை விட்டுவிட்டு...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.எம். பழனிசாமி, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** ஆக, என்னுடைய தொகுதி முழுமையாக விவசாயிகள் உள்ள தொகுதி என்கின்ற காரணத்தாலே 5 இடங்களிலே கால்நடை மருந்தகங்களும் மருத்துவமனையும் இருக்கின்றன. ஆனால், இன்றைக்கு இரண்டு இடங்களில்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே என்னுடைய தொகுதிக்குட்பட்ட மொடக்குறிச்சியிலும், கொடுமுடியிலும் மேலும் கால்நடை கிளை மருந்தகங்களும், கால்நடை மருத்துவமனைகளும் தேவை என்பதை உங்கள் வாயிலாக அமைச்சர்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்கு ஏதாவது திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா? புதிதாக மருந்தகங்கள் ஏற்படுத்த வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மொடக்குறிச்சி தொகுதி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆராய்ந்து உரிய முடிவு எடுக்கும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.



2006 டிசம்பர் 6]

**20—**

## பால் பவுடர்

***704—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் நபார்டு வங்கியினுடைய நிதியுதவி கிடைத்தவுடன் செயல்படுத்தப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், விவசாயத் தொழிலைச் சார்ந்த மாவட்டம். குறிப்பாக, ஒரு நாளைக்கு 2 இலட்சத்து, 92 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்து, தமிழ்நாட்டிலே இரண்டாவது இடத்திலே இந்த மாவட்டம் இருக்கிறது. இதைவிடக் குறைந்த அளவிற்குப் பால் உற்பத்தி செய்கின்ற மாவட்டங்களிலேகூட, பால் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இங்கே இந்தக் குளிர் காலத்திலே சேகரிக்கப்படுகின்ற பாலைக் கொண்டு செல்வதற்குள்ளாகக் கெட்டுவிடுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், இந்தப் பால் பவுடர் தொழிற்சாலையை உடனடியாகத் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள திருவண்ணாமலையில், பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை, ரூ.29 கோடியே, 31 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், நபார்டு வங்கி மற்றும் தமிழக அரசின் மூலம் கடன் பெற்றுத் தொடங்குவதற்கான அரசாணை

[2006 டிசம்பர் 6

வெளியிடப்படும் நிலையில் உள்ளது. புதிதாகத் தொடங்கப்படும் பால் பவுடர் தொழிற்சாலை, நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பாலிலிருந்து 20 மெட்ரிக் டன் பால் பவுடர் தயாரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கித் திட்டத்தின்மூலம் விரைந்து தொழிற்சாலை தொடங்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில்தான், பாலுக்கு விவசாயிகளுக்குத் தரப்படுகின்ற பணத்தில், ஒரு ரூபாய் குறைத்துத் தருகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று வினவியபோது, கடந்த காலங்களிலே, ஈரோடு கூட்டுறவு ஒன்றியம், விழுப்புரம் கூட்டுறவு ஒன்றியம் ஆகியவை நஷ்டத்தில் இயங்கிய காரணத்தினாலே, அதற்காகக் கடனாக, மத்திய, மாநில அரசுகளிடமிருந்து நிதியுதவியைப் பெற்ற காரணத்தினாலே, ஒரு ரூபாய் குறைத்துக் கொடுத்து, அந்தக் கடனை ஈடுசெய்வதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பல ஆண்டுகளாக இந்தப் பிரச்சினை இருக்கின்ற காரணத்தினாலே, குடிக்கின்ற தண்ணீர் பாட்டில் 12 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், ஏழையெளிய விவசாயிகள் விற்கின்ற பாலுக்கு, 7 ரூபாய், 8 ரூபாய், 9 ரூபாய்தான் கிடைக்கிறது. அந்தப் பணத்தைத் திரும்ப வாங்குவதற்குக்கூட பல மாதங்கள் தாமதமாகின்றது. எனவே, ஈரோடு மாவட்டத்திலே, ஈரோடு ஒன்றியத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு, இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் குறைத்துக் கொடுக்கிற காரணத்தினாலே, அவர்கள் மிகவும் பாதிப்படைகிறார்கள். கருணையோடு இருக்கின்ற இந்த அரசு, இந்த நிதிநிலைமையைச் சீர்செய்து, இங்கே அமர்ந்திருக்கிற பால்மனம் கொண்டிருக்கிற தமிழக முதல்வர், கருணைக் கடலாக இருக்கிற தலைவர் கலைஞர் அவர்கள், கருணையோடு இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து, ஏழையெளிய விவசாயிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, ஈரோடு ஒன்றியம், விழுப்புரம் ஒன்றியம் போன்றவை அடங்கிய ஓரிரு மாவட்டங்களில் மட்டும் குறைத்துக் கொடுக்கப்படுகின்ற பால் விலையை மீண்டும் ஒரு ரூபாய் உயர்த்திக் கொடுத்து, விவசாயிகளை வாழ வைப்பார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 6]

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா, மூலக் கேள்விக்குத் தொடர்புடையது அல்ல. இருப்பினும்கூட, பால் உற்பத்தியாளர்களைப் பொறுத்த அளவில், பால் கொள்முதல் விலையை அதிகரிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்து, ஆலோசனை செய்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. Supplementary–க்கு supplementary கிடையாது. உட்காருங்கள். திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறியதுபோல, ஒரு லிட்டர் தண்ணீர் 12 ரூபாயிலிருந்து 15 ரூபாய்க்கு விற்கிறது. ஆனால், புல், பிண்ணாக்கு, தவிடு எல்லாம் போட்டு, செலவு செய்து, விற்கப்படும் பாலுக்கு 8 ரூபாய், 9 ரூபாய், 10 ரூபாய்தான் கிடைக்கிறது. ஆகவேதான், விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதோடு, விவசாயிகளுடைய மாடுகளுக்கு நோய்கள் ஏற்பட்டு அவை தாக்கப்படுகின்றன. அதையும் கவனித்து, பால் விலையை உயர்த்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் விலையை அதிகரிப்பது சம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களோடு ஆலோசனை செய்து பரிசீலிக்கப்படும் என்று முன்பே தெரிவித்திருக்கிறேன். அதோடு, கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், முன்பு நான்காவது முறையாக ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது, கால்நடைகளுக்காக மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. அதுபோலவே, வருகிற காலங்களிலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. உ. மதிவாணன்] [2006 டிசம்பர் 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி (குறுக்கீடு) இல்லை. உறுப்பினர் திரு. அரி நேற்று ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அதற்கான reply வந்திருக்கிறது. திரு. அரி, பேசுகிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அரி, நேற்று அறிவிப்பு ஒன்று கொடுத்திருக்கிறீர்கள், அல்லவா? அதுகுறித்துப் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) அரி, நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) பொறுமையாக இருங்கள். அரி, நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) அதெல்லாம் order நான் கொடுப்பேன், நீங்கள் உட்காருங்கள்.

முற்பகல் 10–30

அரி, நீங்கள் பேசுகிறீர்களா இல்லையா? எழுந்திருங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) அரி, நீங்கள் சொல்லுகிறபடி பேச அழைக்கவேண்டுமென்று எனக்குக் கட்டாயம் கிடையாது. நான் சொல்லுகிற ஆர்டரில் நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) அப்படியானால் உங்களுக்கு திரும்ப வாய்ப்புக் கிடையாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், சொல்லுங்கள். மைக் கொடுங்கள் (குறுக்கீடுகள்) ஜெயக்குமார், ஜெயக்குமார் (குறுக்கீடுகள்) கோவிந்தசாமி, நீங்கள் உட்காருங்கள். அவர் பேசட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது?

**திரு. டி. ஜெயக்குமார்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், அதுசம்பந்தமான வழக்கு நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது. முதலில் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன். (கூச்சல்–குழப்பம்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 டிசம்பர் 6]

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின்...

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கோர்ட்டிலே வழக்கு pending-லே இருக்கிறது. (குறுக்கீடுகள்) கோர்ட்டிலே வழக்கு pending-லே இருக்கிறது. அதனால், இப்பொழுது அதுசம்பந்தமாகப் பேசமுடியாது. (குறுக்கீடுகள்) அவர் பேசியது அத்தனையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) மாண்புமிகு உறுப்பினர் நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கு நீதிமன்றத்தில் pending–ல் இருக்கிறது. அது சம்பந்தமாக இங்கே பேசமுடியாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. என். நன்மாறன்:** **இந்த அவையின் அலுவல்களை... (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. டி. ஜெயக்குமார்:** **

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Speaker Sir, on a point of order ** அனுமதித்தது கிடையாது. தாங்களும் அனுமதிக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருகிறீர்களா? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள் அனைவரும் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அனைவரும் உட்காருகிறீர்களா, இல்லையா?

(அவையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 6

அவைக் காவலர்கள் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள், அனைவரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அனைவரையும் வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள், அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அனைவரையும் வெளியேற்றுங்கள்.

முற்பகல் 10–35

பெண் காவலர்கள், அ.இ.அ.தி.மு.க.–வைச் சேர்ந்த பெண் உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்)

(அவையில் கோஷமிட்டுக் கொண்டிருந்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பெற்றனர்.)

(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியிலிருந்து கோஷமிட்டனர்.)

அவைக் காவலர்கள் வராந்தாவில் உள்ளவர்களையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) லாபியில் இருப்பவர்களையும் வெளியேற்றுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே,...

**திரு. தி. வேல்முருகன்:** தலைவர் அவர்களே,...

**திரு. சி. கோவிந்தசாமி:** தலைவர் அவர்களே,...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாகப் பேச அனுமதி கிடையாது. (குறுக்கீடுகள்) இது சம்பந்தமாகப் பேச அனுமதி கிடையாது. (குறுக்கீடு) சரி, பீட்டர் சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி, உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) லாபியில் கோஷமிடுபவர்களை அவைக் காவலர்கள் வெளியேற்றுங்கள்.

(ம.தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** Point of order...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 டிசம்பர் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இதைத்தான் நான் முன்கூட்டியே Point of order-ல் கிளப்பினேன். ஒரு வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறபோது (குறுக்கீடு) அதை அவர்களே தொடுத்திருந்தாலும்சரி, யார் தொடுத்திருந்தாலும்சரி, அந்த வழக்கு குறித்து சட்டமன்றத்தில் பேசுவது மரபு அல்ல. அதற்கு சட்டமும் இடம் தரவில்லை. sub-judice என்பார்கள். அதனாலே, அத்தகைய செய்திகளை இந்த மன்றத்தில் விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பதுதான் சட்டமன்ற மரபு. சட்டமன்ற விதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதியிலேயும் அதுதான் இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்தால், அதுசம்பந்தமாக அவையில் பேச முடியாது.

**திரு. சி. கோவிந்தசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

முற்பகல் 10–40

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

## (ஆ) ஓமலூர், மாணவி இறந்ததையொட்டி பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளிமீது நடத்தப்பட்ட தாக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் கவனத்திற்கும், தங்கள் மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்கும் ஒரு முக்கியமான பிரச்சினையை எடுத்து வர அனுமதி தந்தமைக்கு நான் உங்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2006 டிசம்பர் 6

பாண்டிச்சேரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டுவரும் கத்தோலிக்க கிரிஸ்துவ கன்னியர் சபையான மாதா இருதய சபையைச் சார்ந்த பெண் துறவியர்கள் தமிழகம் எங்கும், புதுவை மாநிலத்திலும் பல தரமான கல்வி நிறுவனங்களை நடத்தி வருகிறார்கள். சேலம் மாவட்டம், ஓமலூரில், கடந்த 43 ஆண்டுகளாக புனித பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளியை நடத்தி வருகிறார்கள். இந்தப் பள்ளியிலே மொத்தம் 2,643 மாணவிகள் பயில்கிறார்கள். அந்த 2,643 மாணவிகளில் 2,447 மாணவியர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். 124 மாணவியர் மட்டுமே கிறிஸ்துவர்கள். 72 மாணவியர்கள் இஸ்லாமியர்கள். இந்த 2,643 மாணவிகளில், 1,198 மாணவிகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்; 883 மாணவிகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்; 542 மாணவிகள் ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்.

இவ்வாறு அந்த பிற்படுத்தப்பட்ட மாவட்டத்திலே, கடந்த 43 ஆண்டுகளாக மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்து வருகின்ற இந்த பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளியிலே, தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அருகே உள்ள தோளூரைச் சார்ந்த சண்முகம் என்பவருடைய மகள் சுகன்யா என்பவர் விடுதியிலே தங்கி 12 ஆம் வகுப்பு படித்து வந்தார். நவம்பர் மாதம் 16 ஆம் தேதி, திருத்தப்பட்ட வேதியியல் விடைத்தாளை அவர் பெற்றுக்கொண்டவுடனே—அதிலே அவர் 75-க்கு 8 மதிப்பெண்களே பெற்றிருந்தார். அவர் அங்கே உள்விடுதியிலே தங்கிப் படித்து வந்தார்—அன்று மாலையிலே விடுதியிலிருந்து காணாமல் போய்விட்டார். அவர் காணாமல் போன தகவல் தெரிந்தவுடனே, அன்றே அந்தப் பள்ளி நிர்வாகம் உடனடியாக அவரது பெற்றோருக்கும் தகவல் கொடுத்து, அன்று மாலையே அவரைக் காணவில்லை என்ற விவரத்தை சம்பந்தப்பட்ட, அருகே இருக்கின்ற காவல் நிலையத்திற்கும் புகார் செய்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணைப் பற்றி எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. 18 ஆம் தேதி காலை 5-30 மணிக்கு அந்தப் பள்ளியின் பின்புறம் உள்ள பெரிய கிணற்றில் அந்த சுகன்யாவின் சடலம் மிதந்து கொண்டிருப்பதாக பள்ளிக் காவலர் மற்றும் தோட்டக்காரர்கள்மூலம் நிர்வாகத்திற்குத் தெரியவந்து, உடனடியாக காவல் துறைக்கும் தெரிவிக்கப்பட்டது.

மாணவி சுகன்யாவின் சாவு தெரிந்ததும், ஒரு பெரும் கூட்டம் திரண்டு வந்து சாலை மறியலிலே ஈடுபட்டார்கள். வன்முறைக் கும்பல் ஒன்று பள்ளிக்குள் புகுந்து, அங்கிருந்த பள்ளிச் சிற்றுந்து, ஆட்டோ ரிக்ஷா, கணினி ஆய்வகம், அறிவியல் ஆய்வுக் கூடம், தளவாடங்கள் மற்றும்



2006 டிசம்பர் 6] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

உபகரணங்கள், பள்ளி அலுவலகம், அதன் முக்கியமான கோப்புகள் மற்றும் வகுப்பறைகளை மிகவும் பயங்கரமாக சேதப்படுத்தியது. மற்றும் சில சமூக விரோதிகள் வகுப்பறைகளில் உள்ள நோட்டுப் புத்தகங்களுக்கும், கம்ப்யூட்டர்களுக்கும், கணினி மையத்திற்கும் தீ வைத்தனர். வகுப்புக் கூடத்தை முழுமையாக அழித்தனர். கதவுகள், ஜன்னல்கள், பெஞ்சுகள், மின் விளக்குகள், மின் விசிறிகள் அனைத்தையும் அடித்து உடைத்தனர். பள்ளி நிர்வாகம் தன்னுடைய நஷ்டத்தை, தங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் 1-1/2 கோடி ரூபாய் இருக்கும் என்று சொல்லியிருக்கிறது. நம்முடைய காவல் துறை, பள்ளிக் காவலர் அருள்நாயகம் மற்றும் அலுவலக உதவியாளர் குமார் ஆகியோரைக் கைது செய்து, வழக்கு ஒன்று பதிவு செய்துள்ளனர். பள்ளி உடைமைகளைத் தங்களால் பாதுகாக்க இயலாவிட்டாலும், போலீஸார் அங்கிருந்த மாணவிகளையும், கன்னியர்களையும் பாதுகாத்தனர் என்று சேலம் கத்தோலிக்க பிஷப் மேதகு சிங்கராயர் அவர்கள் தனது அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-45

அதே நாள் 18 ஆம் தேதி மாலை 6-30 மணியளவில் ஓமலூர் அருகிலுள்ள செயின்ட் ஜோசப் மருத்துவமனையின் முகப்பிலுள்ள புனித சூசையப்பர் ஆலயத்தின் கதவுகள், கண்ணாடி ஜன்னல்கள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. அதே நாளில் ஓமலூர் வட்டத்தைச் சார்ந்த தாரமங்கலத்தை அடுத்துள்ள மாரமங்கலத்திலுள்ள கிறிஸ்துவ தேவாலயத்தின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டு, மின் விளக்குகள் உடைக்கப்பட்டு பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பள்ளியிலும், விடுதியிலும் பணி செய்யும் கன்னியர்களும், ஆசிரியர்களும், சொல்ல முடியாத வாய்கூசும் வார்த்தைகளால் தூஷிக்கப்பட்டிருக்கின்றார்கள், சிலர் மிரட்டப்பட்டிருக்கின்றார்கள். தற்போதும் நிர்வாகத்தில் இருக்கும் கன்னியர்களும், ஆசிரியர்களும் பயத்திலேயே இருக்கின்றார்கள்.

இந்த மாணவியினுடைய மரணத்திற்காக நம்முடைய இரங்கலை நாம் தெரிவித்துக்கொள்கிறோம். தங்களது மகளை இழந்து தவிக்கின்ற அந்தப் பெற்றோருக்கு ஆறுதல் சொல்ல நாம் முற்படுகிறோம். ஆனால், அந்த மரணத்தினுடைய காரணங்களை அறிந்துகொள்வதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. தற்போது பிரேதப் பரிசோதனை அறிக்கைகூட வந்திருக்கிறது. அந்த அறிக்கையினுடைய விவரங்களைப் பார்க்கிறபோது, 'நீரில் மூழ்கி இறந்ததாக', அதாவது தற்கொலை செய்து கொண்டதாகத்தான் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை தற்கொலைக்குக் காரணம் என்ன, அந்த மாணவி தற்கொலை

செய்யக்கூடிய சூழல் ஏன் ஏற்பட்டது என்பதைப்பற்றி ஒரு விசாரணை நடத்துவதை, அந்த சூழலுக்குக் காரணமாக இருந்தவர்கள் யாராக இருந்தாலும், அந்த பள்ளிக்குள்ளேயே அதற்குக் காரணமானவர்கள் இருந்தால்கூட அவர்களைத் தண்டிப்பதைப் பற்றிக்கூட யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அந்த நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுக்க வேண்டுமென்றே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இந்தப் பிரச்சினை, சேலம் மாவட்டத்திலே ஓமலூரில் நடந்திருந்தபோதிலும்கூட, தமிழகமெங்கும் இருக்கின்ற கத்தோலிக்க கிறிஸ்துவ நிறுவனங்கள், பள்ளிகள், அங்கே வேலை பார்க்கின்ற துறவியர்கள், கன்னியர்கள், குருக்கள், சகோதரர்கள் இவர்கள் மத்தியிலே ஒரு பீதியை உண்டு பண்ணியிருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்த நாட்டிலே சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள், தொண்டு நிறுவனங்களை நடத்துகின்றவர்கள், அந்த ஊரிலே ஜனப்பான்மைரீதியாக, பெரும்பான்மைரீதியாக பாதுகாப்பு தேடவும் முடியாது. அவர்கள் அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருக்கிறார்கள்; தாங்கள் சேவை செய்கின்ற சமூகத்தின் பாதுகாப்பில் இருக்கின்றார்கள். அந்தவிதமான அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கிறது. அந்த அச்ச உணர்வை நீக்க வேண்டுமென்ற கோரிக்கையினை நான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றேன். ஏனென்று சொன்னால், நம்முடைய முதலமைச்சரைப் பற்றி நாங்கள் அறியாதவர்கள் அல்ல. எங்கள் ஊரிலே ஒரு பழமொழி சொல்வார்கள், 'பஞ்சத்திற்கு ஆண்டியா? பரம்பரை ஆண்டியா?' என்று சொல்வார்கள். சிலபேர் சிறுபான்மைச் சமூகங்களை தேர்தலின்போது மட்டும்தான் தேடுவார்கள். ஆனால் நீங்கள் அப்படி அல்ல. பதவியிலே இருந்தாலும், ஆட்சியிலே இருந்தாலும், அதிகாரத்திலே இருந்தாலும், ஆட்சிக்கு உள்ளேயும், வெளியேயும், எப்போதெல்லாம் சிறுபான்மை சமூகத்திற்கு சோதனை ஏற்பட்டிருக்கிறதோ, அப்போதெல்லாம் மார்தட்டி வந்த வரலாறு உங்களுக்கு உண்டு என்பதை நாங்கள் நிச்சயமாக அறிவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை.

இப்போதுகூட, சிறுபான்மை ஆணையத்திற்குக்கூட ஒரு கத்தோலிக்கத் துறவியைத்தான் நீங்கள் தலைவராக நியமித்திருக்கிறீர்கள. அதேபோல சிறுபான்மை பொருளாதார ஆணையத்திற்குக்கூட நீங்கள் ஒரு கத்தோலிக்கத் துறவியைத்தான் நியமித்திருக்கிறீர்கள். தமிழக சரித்திரத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு இரண்டு இசுலாமியர்களுக்கு இந்த அமைச்சரவையிலே நீங்கள் இடம் கொடுத்திருக்கின்றீர்கள். ஆகவே, சிறுபான்மை மக்கள் உங்கள்மீது நம்பிக்கை வைத்திருப்பதால் நாங்கள் கேட்கிறோம், எங்களுக்கு சில





அச்சங்கள் இருக்கின்றன. தற்கொலைகள் மாணவிகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்களிலே எங்கும் நடக்காத விஷயம் அல்ல. அவை கண்டிக்கத்தக்கவை என்றாலும், வருந்தத்தக்கவை என்று சொன்னாலும், மிகப் பெரிய நிறுவனங்களிலே, மிகப் பெரிய பல்கலைக்கழகங்களிலே படிக்கின்ற மாணவிகள்கூட, மாணவர்கள்கூட விடுதியிலே தற்கொலை செய்துகொள்கிறார்கள். ஆனால், எந்தப் பள்ளியையும், ஒரு மிகப் பெரிய கூட்டம் திரண்டுபோய், அடித்து நொறுக்கியதாக சரித்திரம் இல்லை. 5,000 பேர், 6,000 பேர் பெண்கள் இருக்கின்ற பள்ளிக்குள்ளே புகுந்து அவர்களை பயமுறுத்த வேண்டிய அவசியம் என்ன என்பதைவிட, நாங்கள் இன்னும் அதிகமாக மனம் வருத்தப்படக்கூடிய சம்பவம் என்ன என்று சொன்னால், பள்ளிக்கு ஏற்பட்டிருக்கிற சேதத்தைவிட, கத்தோலிக்கத் துறவியர்கள் தங்கள் வாழ்க்கையின் புனிதநெறியாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற மனத் துறவையும், அவர்களுடைய இறையன்பையும், அவர்களுடைய அர்ப்பணிப்பையும் கொச்சைப்படுத்தக்கூடிய அளவுக்கு தினசரி பத்திரிகைகளிலே பல்வேறு தகவல்கள்; 'அது கல்விக்கூடமா அல்லது காமக் களியாட்டக் கூடமா?' என்று பொது மக்கள் சந்தேகப்படக்கூடிய அளவுக்கு, நச்சுத்தனமான செய்திகளை தினசரி பத்திரிகைகளில் போட்டு, இன்று தமிழக கத்தோலிக்கத் துறவறமே கொச்சைப்படுத்தப்பட்டு, தலைகுனியப்படுத்தப்பட்டு, அவமானப்பட்டு நிற்கிற ஒரு சூழ்நிலை நிலவி வருகிறது.

*முற்பகல் 10–50*

எனவே இந்தக் களங்கத்தைத் துடைக்கவேண்டும். உண்மையை அறியவேண்டும். இறந்துபோன அந்த மாணவி என்ன சூழ்நிலையில் இறந்தார்? பத்திரிகைகளில் செய்தி வருகிறது, கற்பழிக்கப்பட்டு இறந்தார் என்று. ஆனால், மருத்துவச் சான்று தருகிறது, கன்னித்தன்மை தவறாத, எந்தவிதமான பாலியல் பலாத்காரத்திற்கும், பாலியல் தொடர்புக்கும் உட்படுத்தப்படாத மாணவி என்று அந்த மருத்துவ அறிக்கை தகவல் தந்திருக்கிறது. எனவே உண்மை நிலையை வெளியே கொண்டுவரவேண்டும். அந்தப் பள்ளி செய்திருக்கிற சேவையைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவத் துறவிகள்மீது பூசப்பட்டிருக்கிற களங்கம் துடைக்கப்படவேண்டும். எனவேதான் சேலம் மறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயர் அவர்கள் அரசாங்கத்திடம் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். என்ன கோரிக்கை என்று சொன்னால், ஒரு நீதிபதியை வைத்து, ஒரு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து, இந்தத் தவறுக்குப் பின்னால், இந்தச் சாவுக்குப் பின்னால், மரணத்திற்குப் பின்னால் என்ன நடந்தது என்கிற உண்மையை

எல்லோரும் தெரிந்துகொள்கின்ற வகையில், இந்த மதத் துறவியர்கள்மீது பூசப்பட்டிருக்கிற களங்கத்தைத் துடைக்கவேண்டும்.

அடுத்து, இது 43 ஆண்டுகளாக சேவை செய்த பள்ளி. ஏதோ தனியார் நிறுவனமாக, ஆதாயம் பெற்று, கட்டணம் பெற்று நடத்தப்படுகின்ற பள்ளியல்ல. இந்தப் பள்ளி உருக்குலைந்து, வெறும் எலும்புக்கூடாகக் காட்சி தருகிறது. மீண்டும் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவிகளுக்கு சேவை செய்யும் அளவிற்கு அந்தப் பள்ளியினுடைய தரத்தைக் கொண்டுவரவேண்டும். அதற்காக நஷ்ட ஈட்டுத் தொகை தேவை. அந்த நஷ்ட ஈட்டுத் தொகையை உங்களிடம் அந்த நிருவாகம் கேட்க ஆசைப்படுகிறது. இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. மிகவும் பின்தங்கிய மாணவிகள் என்று நான் சொன்னேன். 2,643 மாணவிகள் படிக்கின்ற அந்தப் பள்ளியிலே சுமார் 1,200 மாணவிகள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொன்னேன். மிகச் சாதாரண குடும்பங்களிலேயிருந்து வருகின்றவர்கள். தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள். அந்தப் பள்ளியினுடைய நஷ்டத்தைச் சரிசெய்வதற்கு அரசாங்கம் தயவுசெய்து முன்வந்து, அவர்களுக்குப் போதுமான நஷ்ட ஈட்டைத் தரவேண்டும். ஏற்கெனவே நீங்கள் சிறுபான்மை ஆணையத்தினுடைய தலைவரை அங்கே போய்ப் பார்ப்பதற்காக பணித்தபோது, சிறுபான்மைக் கமிஷனுடைய ஆணையர் அருள்திரு வின்செண்ட் சின்னதுரை அவர்கள் அங்கே சென்று வந்து உங்களிடம் ஓர் அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். நீங்களும் அந்தப் பள்ளிக்கூடத்திற்கு நியாயமான நஷ்ட ஈட்டை நான் வழங்குகின்றேன் என்று உத்தரவாதம் தந்திருக்கிறீர்கள். எனவே அந்த உத்தரவாதத்தை நிறைவேற்றுகின்றவகையில் ஒரு நஷ்ட ஈட்டுத் தொகையை நீங்கள் அறிவிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, இதைப்போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதற்கான ஒரு தூண்டுகோலாக இந்தச் சம்பவம் அமைந்துவிடக் கூடாது. பள்ளிக்குள்ளே தவறுகள் நடந்தால் அந்தத் தவறுகளை நீங்கள் கேட்கக்கூடாது என்று சொல்கின்ற அளவுக்கு நான் விவரம் தெரியாதவன் அல்ல. அரசாங்க உதவி பெறுகின்ற பள்ளிகளில் ஒழுக்கமும், தரமும் நிச்சயமாக காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலே உங்களுக்கு இருக்கின்ற அக்கறை எனக்குத் தெரியும். ஆனால், ஒரு சிறிய அசம்பாவிதத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, ஒரு வன்முறைக் கும்பல் உடனடியாக ஒரு பள்ளிக்குள் நுழைந்து அங்கே இருக்கின்றவற்றையெல்லாம் அடித்து நொறுக்கி, இரண்டு நாட்களுக்கு கன்னியர்கள், ஆசிரியர்கள் யாருமே பள்ளிப் பக்கமே வராதபடி செய்ய முடியும் என்று ஒரு சம்பவம் நடப்பது, பொதுவாக தமிழகத்திலே இருக்கிற கல்விச் சூழலுக்கு நல்லதல்ல. எனவே



அந்த வன்முறையாளர்கள், சமூக விரோதிகள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது சரியான நடவடிக்கை எடுத்து, நீதியை நிலைநாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இருங்கள். ஒரு சின்ன விளக்கம். **நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையிலே இருக்கின்ற நேரத்திலே இங்கே அ.தி.மு.க. உறுப்பினர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் பேசிய அனைத்து வார்த்தைகளும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் சொன்னதும் சேர்த்துதான். என்ன, மணி, பீட்டர் சொன்னது சம்பந்தமாக பேசப்போகிறீர்களா?

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஓமலூரில் உள்ள புனித பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களைப் பொறுத்தவரை மாணவி சுகன்யாவின் இறப்பு துரதிருஷ்டவசமானது. அதேவேளையில் சுகன்யாவுக்கு இம்மாமன்றத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தப் பள்ளிக்கூடம் கத்தோலிக்க சிறுபான்மைச் சமுதாயத்தாலே நடத்தப்படக்கூடிய பள்ளிக்கூடம். கடந்த காலங்களில் எல்லோரும் பாராட்டக்கூடியவகையில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்த பள்ளிக்கூடம். அதிலும் குறிப்பாக, தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டில் ஒட்டுமொத்தமாகவே கிறிஸ்துவ சிறுபான்மைக் கல்வி நிறுவனங்கள் எங்கெல்லாம் இருக்கின்றதோ, அவை தரமான கல்வியைக் கொடுக்கக்கூடிய கல்வி நிறுவனங்களாக, ஒழுக்கத்திற்கு, கட்டுப்பாட்டிற்கு எடுத்துக்காட்டான பள்ளிக்கூடங்களாக, கல்வி நிறுவனங்களாக எல்லாக் கல்வி நிறுவனங்களும் இருப்பதை நாம் பார்த்து பெருமைப்படுகிறோம், பாராட்டி வருகிறோம். ஆக, அப்படிப் புனிதமாக இருக்கிற அந்தப் பள்ளியில் ஏற்பட்ட அசம்பாவிதம், அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் என்பதுதான் வருத்தப்படவேண்டியது.

முற்பகல் 10–55

நம்முடைய மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் சமூக விரோத சக்திகள் இங்கே உள்ளே நுழைந்து சில அசம்பாவிதங்களை, வன்முறைச் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். உள்ளபடியே நானும்கூட சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து அந்தப் பள்ளியைப் பார்வையிட்டேன். நம்முடைய மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் அவர்களும் அந்தப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பள்ளியைப் பார்வையிட்டு அந்தப் பள்ளி மீண்டும் திறக்கப்பட வேண்டும், சகஜ நிலைமை உருவாக வேண்டும் என்ற நிலையை மாவட்ட நிருவாகத்திடத்தில் வலியுறுத்தினார்கள். அதை நாங்கள் பாராட்டுகிறோம். நாங்கள் கூடச் சென்றுவிட்டு அங்கே மீண்டும் அமைதி நிலை வர வேண்டும், பள்ளி உடனடியாகத் திறக்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினை பெரிதாகக் கூடாது என்ற நிலையில் மற்றவர்களிடத்திலே, அதிகாரிகளிடத்தில், காவல் துறையிடத்திலே, பொதுமக்களிடத்திலே அறிவுரைகளை வழங்கி வந்தோம். ஆக, ஒரு நல்ல கல்வி நிறுவனம், சிறுபான்மைச் சமுதாயம் நடத்தக்கூடிய கல்வி நிறுவனத்தின்மீது களங்கம் கற்பித்துச் சில செய்திகள் வந்திருப்பது உள்ளபடியே வன்மையான கண்டனத்திற்குரியது. அதை அன்றும் நான் கண்டித்தேன். இப்பொழுதும் கண்டிக்கிறேன்.

அதேவேளையில், யார் குற்றவாளிகள் என்பதைக் கண்டறிவதற்கு, அது மட்டுமல்ல அங்கே மீண்டும் அந்தப் பள்ளியின்மீது சுமத்தப்பட்ட களங்கத்தைத் துடைப்பதற்கு, தம்மை அந்தக் கல்வி நிறுவனத்திற்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற அந்தப் புனிதத் தன்மையிலே பணியாற்றக்கூடிய சகோதரிகள் களங்கம் இல்லாமல் பாதுகாப்பாக அந்தப் பள்ளியை நடத்துவதற்கு அரசு எல்லாவகையிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன்.

அதேவேளையில், இதைத் தொடர்ந்து ஒரு செய்தி, தவறான, அவதூறான ஒரு செய்தி வந்தது. அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற மதிப்பிற்குரிய தமிழரசு அவர்கள் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர். அந்தச் சம்பவம் நடந்த நேரத்தில் தேனி மாவட்டம், கூடலூரில், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினை குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நடந்த போராட்டத்தில் எங்களோடு இருந்தார். நானும் அன்று இருந்தேன். சம்பவத்தில் இல்லாத ஒருவரை நம்முடைய மதிப்பிற்குரிய, நான் மதிக்கக்கூடிய சிறுபான்மை ஆணையம், வழக்கிலே அவரையும் சேர்த்து, அவரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்ற ஒரு செய்தியைச் சொல்லி இருக்கிறது அது மட்டுமல்ல, அவர் ஒரு பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருக்கிறார் அந்தப் பள்ளியை நடத்தக்கூடிய தமிழரசு, காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்தச் சம்பவத்திற்குத் தூண்டுதலாக இருக்கிறார் என்ற ஒரு தவறான செய்தியும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுதான் ஆழ்ந்த வேதனை. அவர் நடத்தக்கூடிய பள்ளிக்கூடத்திற்கும், இந்த பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கும் வேறுபாடு இருக்கிறது. ஒன்று ஆங்கில





வழிப் பள்ளிக்கூடம். மற்றொன்று தமிழ் வழிப் பள்ளிக்கூடம். இரண்டும் சம்பந்தமில்லாத பள்ளிக்கூடங்கள். இந்தப் பள்ளிக்கூடத்தில் இருக்கின்ற மாணவிகளை அவருடைய பள்ளிக்கூடத்திலே சேர்க்க முடியாது. உண்மை அப்படி இருந்தும்கூட இந்தப் பள்ளி மாணவிகளை அவருடைய பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்காகத் தூண்டிவிடுகிறார் என்ற செய்தி வந்திருப்பதும், அவர் கைது செய்யப்பட வேண்டும் என்று சொல்வதும் வருத்தம் அளிக்கிறது என்ற அந்த உண்மைத் தகவலை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, எப்படியிருந்தாலும் நடந்த சம்பவம் துரதிருஷ்டவசமானது. சிறுபான்மைச் சமுதாயத்தின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கிற அந்தக் களங்கத்தையும், சமூக விரோதச் செயலையும் நான் மீண்டும் ஒரு முறை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பள்ளி இப்பொழுது மீண்டும் திறக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியை அமைதியாக நடத்திட, தொடர்ந்து இப்படிப்பட்ட சம்பவங்கள் நிகழாமல் இருக்க, அரசு பாதுகாப்பு வழங்கி, உரிய நீதி விசாரணையை நடத்தி, அந்தப் பள்ளிக்கு மேலும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். மேற்கொண்டு சமூக விரோதக் கும்பலைச் சேர்ந்தோர் யாராவது அத்து மீறி நுழைவார்களேயானால், நேரடியாக, அல்லது மறைமுகமாக நுழைவார்களேயானாலும் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளை மாண்புமிகு முதலமைச்சரிடத்திலே மீண்டும் ஒரு முறை வைத்து, முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமைகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இதுசம்பந்தமாக நீங்கள் ஒன்றும் கொடுக்கவில்லையே! (குறுக்கீடு) இல்லை, இல்லை. இதுசம்பந்தமாக நீங்கள் எந்த வேண்டுகோளும் வைக்கவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஒரே ஒரு பாயின்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓமலூர் புனித பாத்திமா மகளிர் மேல்நிலைப் பள்ளியிலே மாணவி சுகன்யா மரணமுற்றது குறித்த பிரச்சினை இங்கே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சிறுபான்மைச் சமுதாயத்தால் நடத்தப்படுகிற அந்தச் சிறப்புமிக்க பள்ளிமீது பல்வேறு களங்கங்கள் சுமத்தப்பட்டுவிட்டதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார். அப்படித் தவறான பிரச்சாரம் செய்வதை நாங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே நேரத்திலே, தவறு நடந்திருக்குமானால் அதற்கு உரிய முறையிலே விசாரணை நடத்தி, தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. குறிப்பாக, இங்கே மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். விசாரணைக் கமிஷன் வைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார். அப்படி சொல்கிறபொழுதே இடையிலேயே, மாணவி சுகன்யாவினுடைய தற்கொலை என்று குறிப்பிட்டுச் சொன்னார். ஆகவே, விசாரணை வேண்டும் என்று சொல்கிறபோது ஒரு முற்றுப்பெறாத நிலையிலே, தற்கொலை என்ற வார்த்தையை பயன்படுத்துகிறபொழுது, அது விசாரணைக்கு உகந்த வார்த்தையாக இருக்குமா என்பது எனக்குரிய கருத்தாக பட்ட காரணத்தினாலே இதை நான் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். முழு விசாரணை நடைபெற வேண்டும். அதனடிப்படையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதே நேரத்திலே, சிறுபான்மையினர் நடத்துகிற இந்தக் கல்வி நிறுவனங்கள் தமிழகத்திலே மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதிலே யாருக்கும் ஆட்சேபனை இல்லை. அவர்களைக் களங்கப்படுத்துகிற முயற்சிகளில் யார் ஈடுபட்டாலும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. அதைக் கண்டிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதை இதிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபுறமும் கூருள்ள கத்தி போன்ற ஒரு பிரச்சினை குறித்து நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அருமை நண்பர் மணி அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அருமைத் தோழர் சிவபுண்ணியம் அவர்களும் தங்களுடைய கருத்துகளை எடுத்துரைத்திருக்கிறார்கள். ஏறத்தாழ நான் சொல்லுகின்ற விளக்கத்தில் அல்லது பதிலில் அந்தக் கருத்துகள்தான் இழையோடும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். இன்று, சேலம் மாவட்டத்தில் ஓமலூரில் பாத்திமா மேல்நிலைப் பள்ளி மாணவியினுடைய மரணம் குறித்து தற்கொலையா, கொலையா என்ற வினாக்குறிகள் எழுந்து அதுபற்றிய குறிப்புகளை, சேலம் மாவட்டத்திலே உள்ள அரசு அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் இவர்கள் மூலமாக நான் பெற்ற குறிப்புகளை இங்கே சொல்ல வேண்டுமேயானால்





*16–11–2006* அன்று சேலம், ஓமலூர் பாத்திமா மேல்நிலைப் பள்ளியின் ஆசிரியர், தங்கள் பள்ளியில் 12 ஆம் வகுப்பு படித்து வரும் மாணவி சுகன்யா என்பவரைக் காணவில்லை என்று காவல் நிலையத்திலே புகார் ஒன்றை அளித்தார். அதன் பின்னர், மாணவி சுகன்யாவின் தந்தை சண்முகம் என்பவர் தனது மகளைக் காணவில்லை என்று அளித்த புகாரின் அடிப்படையில், ஓமலூர் காவல் நிலைய குற்ற எண் 770/2006–ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சுகன்யாவைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் 18–11–2006 அன்று காலையில், காணாமல் போன மாணவி சுகன்யா, சடலமாக பள்ளி வளாகத்திலே உள்ள கிணற்றில் மிதப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

முற்பகல் 11–05

இதையடுத்து, காவல் ஆய்வாளர், ஓமலூர் உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினார்கள். இறந்து கிடந்த மாணவி சுகன்யா பள்ளி வளாகத்திலே கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு கிணற்றில் வீசப்பட்டிருக்கலாம் என்ற ஒரு வதந்தி பரவியதால், ஓமலூர் மற்றும் அருகேயுள்ள கிராமப் பொது மக்கள் சுமார் 10 ஆயிரம் பேர் வரையில் பள்ளியின் முன்பு குவிந்தார்கள். பள்ளி நிர்வாகத்தினர் உண்மை நிலவரத்தை பொது மக்கள் முன்னிலையில் விளக்கம் அளிக்க முன்வராததால் ஆத்திரம் அடைந்த பொது மக்கள், பள்ளிக்குள் நுழைந்து அங்குள்ள கணினி, மேஜை மற்றும் நாற்காலிகளையெல்லாம் அடித்து நொறுக்கினார்கள். பள்ளியின் ஆசிரியர்கள், பாதிரியார்கள் ஆகியோரைக் கூட்டம் தாக்காமல் இருக்க காவல் துறை நடவடிக்கை எடுத்து நிலைமையை மிகத் திறமையான முறையிலே சமாளித்தார்கள். இச்சம்பவத்தில் காவலர்களுக்குக்கூட ஓரிருவருக்குக் காயம் ஏற்பட்டது.

காவல் துறையினர் நடத்திய விசாரணையில் மேற்படி மாணவி சுகன்யா வேதியியல் பாடத்தில் குறைவான மதிப்பெண் வாங்கியதால் பள்ளித் தலைமையாசிரியை, விடுதிப் பொறுப்பாளர் மற்றும் வேதியியல் பாட ஆசிரியர் ஆகியோர் அவரைக் கடுமையாகத் திட்டினார்கள் என்றும், அப்போது அங்கிருந்த அருள்நாயகம் மற்றும் அலுவலக உதவியாளர் குமார் ஆகியோரும் அதனை ஆமோதித்து அவர்களும் சேர்ந்து திட்டினார்கள் என்றும், இதனால் மனமுடைந்த மாணவி சுகன்யா, அவமானம் தாங்காமல் பள்ளி வளாகத்தில் பாதுகாப்பு இல்லாமல் இருந்த கிணற்றிலே விழுந்து தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றும் கூறப்பட்டு, இந்த வழக்கில் 174 குற்றப் பிரிவு விசாரணை சட்டப் பிரிவிலிருந்து 306 இ.த.ச. பிரிவாக மாற்றி அருள்நாயகம் மற்றும் குமார்

ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்நிலையில் பிரேத விசாரணை அறிக்கையில் இறந்துபோன மேற்படி மாணவி நீரில் மூழ்கி இறந்துள்ளார் என்றும், அவர் இறப்பதற்கு முன்பு காயங்களோ அல்லது பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்கான அறிகுறிகளோ அல்லது வன்புணர்ச்சி செய்ததற்கான அறிகுறிகளோ இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறையினர் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து, கூட்டத்தினர், மாணவி இறந்து கிடந்த கிணற்றுக்கு அருகே செல்லவிடாமல் தடுத்து, அசம்பாவிதத்தைத் தவிர்த்தார்கள். இது அன்றைய நிகழ்ச்சி பற்றி வந்துள்ள விவரங்கள்.

இதுபற்றி வேறு சிலர்மீது பழி போடப்படுவதாக நம்முடைய நண்பர் மணி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சிறுபான்மைச் சமுதாயத்தை இன்றைக்கு ஒரு பகையாகக் கருதுகின்ற அளவிற்கு, அவர்கள்மீது ஒரு வெறுப்பை உமிழ்கின்ற அளவிற்கு பொது மக்கள் தூண்டிவிடப்படுகிறார்கள் என்ற கருத்தை பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். சிறுபான்மைச் சமுதாயத்திற்கும் இந்த அரசுக்கும் உள்ள உறவு எத்தகையது என்பதை நீங்கள் எல்லோரும் மிக நன்றாக அறிவீர்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த அரசுகூட சிறுபான்மை அரசு என்று இதே அவையிலே பல பேர் பேசுவதை நீங்கள் கேட்பதிலிருந்தே அவர்களெல்லாம்கூட இது சிறுபான்மைக்காக இருக்கின்ற அரசுதான் என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்திருக்கின்றார்கள் என்பதையும் நான் மிக நன்றாக அறிவேன்.

அந்த வட்டாரத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த தமிழரசுமீது வீண் பழியைப் போடுவதாகவும் மணி சொன்னார். எந்தக் காரியமாக இருந்தாலும் தமிழரசு மீது பழி போடுவது (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வழக்கமாகிவிட்ட காரணத்தால் இந்தத் 'தமிழரசு' மிச்சப்படவில்லை என்றே நான் கருதுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி இந்தத் 'தமிழரசு'-க்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று மணி அவர்கள் சொன்னார்களோ, அதைப் போல, இந்தத் தமிழரசைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையிலே மிகுந்த அனுதாபத்தோடு, மிகுந்த அவசரத்தோடு, விரைவோடு நடவடிக்கை எடுத்து காரியங்களை ஆற்றியிருக்கின்றது. ஏனென்றால், சிறு பொறி பெரும் தீ என்று ஆகிவிடக் கூடாது. ஏதோ சிறுபான்மையினர் பிரச்சினை, ஓமலூரில் நடைபெற்ற பிரச்சினை, சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற பிரச்சினை என்று விட்டுவிட்டால், இது ஒரு பெரிய மத மோதலுக்கு, எந்த





மதமாச்சரியங்கள், மத வேறுபாடுகள், மத மோதல்கள் இந்தியாவிலே ஏற்படக் கூடாது என்று கருதுகிறோமோ அதற்கு, வித்திட்டதாக ஆகிவிடுமோ என்ற அந்த எச்சரிக்கை உணர்வோடு அரசு செயல்பட்டிருக்கிறது; இப்போதும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திற்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அங்கே அவர்களுக்குத் தரப்பட வேண்டிய நஷ்டஈடு குறித்தெல்லாம் நம்முடைய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது பற்றி சிறுபான்மையினர் ஆணையக் குழு அதனுடைய தலைவர் சின்னதுரை தலைமையிலே அந்த இடத்திற்குச் சென்று விசாரித்து வந்து என்னிடத்திலே பல விளக்கங்களை அளித்திருக்கின்றார்கள். ஒரு நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எத்தகைய முறையிலே, எந்த அடிப்படையிலே அந்த விசாரணையை நடத்தலாம் என்பதை எல்லோரையும் கலந்து பேசி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், இன்றைக்கு அந்தப் பள்ளி நிம்மதியான முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. நடைபெற்ற சில விவகாரங்களுக்குத் தீர்வு காண வேண்டும். அதற்கான தண்டனை அளிக்கப்படவேண்டும் என்பது வேறு விஷயம். அதற்கான உண்மை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விசாரணை நடைபெறும்.

முற்பகல் 11-10

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் அரசும், அமைச்சர்களும் எந்த அளவுக்கு அக்கறையோடு இதிலே பாடுபட்டார்கள் என்பதற்கு உதாரணமாக, பாதிரியார் அருளப்பர் அவர்களே, பத்திரிகையிலே, சேலத்திலிருந்து வெளி வருகின்ற பத்திரிகையில் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் தம்பி வீரபாண்டி அவர்களைப் பாராட்டி மீண்டும் ஓமலூர் பாத்திமா பள்ளியைத் திறக்க உதவிய அமைச்சருக்கு நன்றி என்ற தலைப்பில் பாதிரியார் அருளப்பர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்கள். "மூடப்பட்ட ஓமலூர் பாத்திமா பள்ளி, அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகத்தின் பெருமுயற்சியால் டிசம்பர் 1 ஆம் தேதி திறக்கப்பட்டது. அதற்கு சேலம் மறை மாவட்ட கிறிஸ்துவ மக்கள் சார்பிலும், சேலம் கத்தோலிக்க ஆயர் சிங்கராயர் மற்றும் பொது மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்" என்று அந்த அறிக்கையிலே அவர் கூறி இருக்கிறார். ஆகவே இது யாரோ சிறுபான்மையோரின் பிரச்சினை என்று இல்லாமல், சிறுபான்மையோரும்

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 டிசம்பர் 6

பெரும்பான்மையோரில் அடக்கம்தான் என்ற அந்த உணர்வோடு செயல்படுகின்ற இந்த அரசு, இந்தப் பிரச்சினையிலே அலட்சியம் காட்டாது; அக்கறை இல்லாமல் இருந்துவிடாது என்பதை இந்த மாமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையை எழுப்பி இங்கே உரையாற்றிய நம்முடைய நண்பர் பீட்டர் அல்போன்ஸ், மணி, சிவபுண்ணியம் ஆகியோருக்குத் தெரிவித்து, ஒத்திவைத்து இதைப் பேசவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தலைவர் அவர்களுக்கு எடுத்துக் கூறி, ஆனாலும், இந்தப் பிரச்சினையை இந்த அளவோடு விட்டுவிடாமல், ஒத்திவைக்காமல், என்னைப் பொறுத்தவரையில் என்ன விசாரணை நடைபெற வேண்டுமோ அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்குத் தர வேண்டிய இழப்பீட்டுத் தொகை போதுமானதாக இல்லை என்பதை அந்தக் குழுவிலே தெரிவித்து இருக்கிறார்கள். பீட்டர் அல்போன்சும் தெரிவித்திருக்கிறார். அதை எந்த அளவுக்குத் தந்தால் போதுமானதாக இருக்கும் என்பதையும் ஆலோசித்து அதுவும் வழங்கப்படும் என்று தெரிவித்து அமைகின்றேன், வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## (இ) காவல் துறைப் பணியிடங்களை நிரப்ப வயது வரம்பைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேல்முருகன், வேறு சப்ஜெக்டா? சொல்லுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் சமூக நீதிக்கு ஒரு பங்கம் ஏற்பட்டு இருப்பதை நம்முடைய முத்தமிழ் அறிஞர் சமூக நீதிக் காவலர் அய்யா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு இந்த நேரத்திலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், இதுபோன்ற பணிகளுக்குத் தேர்வு செய்கிறபோது மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் அவர்கள் அந்த இடங்களைப் பெறவேண்டும் என்பதற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய அரசு 3 ஆண்டுகள் வயது வரம்பைத் தளர்த்தி ஆணையிட்டு இருந்தார்கள். அதன் அடிப்படையில் கிராமப்புறங்களில் இருக்கின்ற நூற்றுக்கணக்கான பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள், காவலர்களாக, உதவி ஆய்வாளர்களாக, பல்வேறு பதவிகளில் அவர்கள் வருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு இருந்தது. ஆனால் சமூக நீதி காத்த வீராங்கனை என்று



2006 டிசம்பர் 6] [திரு. தி. வேல்முருகன்]

தன்னைப் பறைசாற்றிக் கொண்ட அம்மையாரினுடைய அரசு பிற்காலங்களில் அந்த 3 ஆண்டுகள் வயது வரம்பு தளர்த்தப்பட்டு இருந்ததை நீக்கம் செய்து, ஒரு சமூக அநீதி அந்த மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், தங்கள் ஆட்சியில் அறிவித்திருந்த இந்தப் பணிகளுக்கு தேர்வு செய்கிறபோது அந்த 3 ஆண்டுகள் வயது வரம்புத் தளர்வு என்பது நீங்கள் இந்த ஆட்சியிலும் தொடர்ந்து நீடிப்பதற்கு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்று ஒரு சிறிய வேண்டுகோளை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல் கடந்த கூட்டத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள், காவலர்கள் முதற்கொண்டு அனைத்து உயர் அதிகாரிகளுக்கான பதவி உயர்வுகளில் அந்த வயது வரம்பு ரத்து செய்யப்படுகிறது என்று அறிவித்தார். ஆனால் ஆய்வாளர்கள் என்று சொல்லக்கூடிய இன்ஸ்பெக்டர் பதவியில் இருந்து டி.எஸ்.பி. பதவி உயர்வுக்கு அந்த விதி பொருந்தாத ஒரு சூழல் இருப்பதாக ஆய்வாளர்களாகப் பல ஆண்டுகளாக இருந்துவருபவர்கள் 'நாங்கள் மட்டும் ஏன் விதி விலக்கு? எங்களை விட்டுவிட்டார்கள்' என்று ஆதங்கங்களை என்னிடத்தில் தெரிவித்து இருக்கிறார்கள். அந்த சிறு தவறுகளையும் களைந்து அதற்கான உத்தரவையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இடவேண்டும் என்று இந்த நேரத்திலே முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல், இந்த நாட்டில் அனைத்துச் சாதி மக்களுக்குமான நல்ல பல திட்டங்களை அறிவிக்கின்ற முதல்வர் அவர்கள், குறிப்பாகக் கடலூர் மாவட்டத்தில் இருக்கிற ஒரு பெரும்பான்மை சமூகமாக இருக்கிற வன்னியர் சமுதாயத்தைச் சார்ந்த காவலர்கள் முதற்கொண்டு எந்தப் பதவியைச் சார்ந்தவர்களும் அந்த மாவட்டத்திலே உதவி ஆய்வாளருக்கு மேல், யாராக இருந்தாலும் அங்கு அவர்கள் பணி செய்யக்கூடாது. தமிழ்நாட்டில் இருக்கிற 30 மாவட்டங்களில் எந்தச் சமுகத்தைச் சார்ந்தவர், எந்த மாவட்டத்தில் வேண்டுமானாலும் பணி செய்யலாம் என்ற நிலை இருக்கின்றபோது, சமூக நீதியினுடைய தலைவராக இருக்கின்ற முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கடலூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் அங்கு குழந்தைகளோடு, தங்கள் குடும்பத்தோடு, தங்கள் உறவுகளோடு, தங்கள் பணிகளைச் செய்து கொண்டு அந்த மக்களோடு சந்தோஷமாக வாழக்கூடிய ஒரு சூழல் இல்லாமல், அந்த ஒரு சமுதாய மக்கள் மட்டும், பல மைல்கள் தூரம் தங்களுடைய குடும்பங்களைத் துறந்து வெளியூர்களிலே பணி செய்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அதுபற்றி

[திரு. தி. வேல்முருகன்] [2006 டிசம்பர் 6

அரசு அதிகாரிகளை அணுகிக் கேட்கின்றபோது ஒரு வாய்மொழி உத்தரவு இருக்கிறது, குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் அங்கு உயர் பதவியில் இருக்கக் கூடாது என்று சொல்கிற ஒரு நிலை இருக்கிறது. எல்லா சாதிக்கும் ஒரு நீதி, ஆனால் ஒரு சாதிக்கு மட்டும் ஒரு நீதியா என்கின்ற நிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எடுத்து அந்த நிலையிலிருந்து மாற்றுவதற்கு நீங்கள் உத்தரவிட வேண்டுமென்று கேட்டு இதுபோன்ற சிறு பிரச்சினைகள் காரணமாக அந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளும், பதவி உயர்வுகளும் பறிக்கப்பட்டிருக்கிறது கடந்த கால ஆட்சியிலே. அதை நீங்கள் சரியாக அரசு அதிகாரிகள் மூலமாக அந்த உத்தரவுகளைப் பிறப்பித்து அந்த மக்களுக்கு உரிமைகள் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே பேரவைத் தலைவர் வாயிலாக முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இருக்கின்ற உரிமைகளைப் பறித்தாலும் அல்லது பறிக்க முனைந்தாலும் இந்த அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'இந்தச் சிறிய வேண்டுகோளை' என்று சொன்னார். இது சிறிய வேண்டுகோள் அல்ல, பெரிய பிரச்சினைக்கான வேண்டுகோள், நிச்சயமாகக் கவனிக்கப்படும்.

### (ஈ) சென்னை விமான நிலைய விரிவாக்க அறிவிப்பு காரணமாக மக்களுக்கு எழுந்துள்ள அச்சம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், என்ன மேட்டர் சொல்லுங்கள் (குறுக்கீடு) இல்லை, நிறைய வேலைகள் இருக்கின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே சென்னை சர்வதேச விமான நிலைய விரிவாக்கத்திற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. இதுகுறித்து அந்தப் பகுதியிலே வாழ்ந்து



2006 டிசம்பர் 6] [திரு. வை. சிவபுண்ணியம்]

கொண்டிருக்கக்கூடிய மக்கள் பெரிய அச்சத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். கடந்த 4 ஆம் தேதியிலிருந்து அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற, பொழிச்சலூர், அனகாபுத்தூர், கவுல்பஜார், பம்மல் போன்ற அந்த கிராமங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்கள் உண்ணாவிரதப் போராட்டம் போன்றவற்றிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அந்தக் கிராமங்களுடைய வீடுகள், மற்றவை பாதிக்கப்படும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. நான் ஏற்கெனவே இந்த அவையிலேயே சென்ற முறை நமது பட்ஜெட் கூட்டத் தொடரிலே சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு உரிய விளக்கத்தைத் தந்து நம்பிக்கையை ஏற்படுத்தினார்கள். ஆனால் இப்பொழுது வருகிற செய்தி என்பது மீண்டும் பழைய நிலையிலேயே அந்தக் கட்டடங்களை இடிக்கிற பணிகள் தொடர்ந்துவிடும் என்ற அச்சம் அங்கே ஏற்பட்டிருக்கிறது. சுமார் 4,629 வீடுகள் பாதிக்கப்படும் என்று அந்தப் பகுதியிலிருந்து கருத்துகள் வருகின்றன. இந்துக் கோயில்கள் 23, சர்ச்சுகள் 2, பள்ளிக்கூடங்கள் 14, குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் 9, ரேஷன் கடை 1, அரசுக் கட்டடங்கள் 8 என்ற அடிப்படையிலே கட்டடங்கள் பாதிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த சென்னை விமான நிலைய விரிவாக்கம் அந்தக் குடியிருப்பு பகுதிகளுக்கு பாதிப்பு இல்லாதவகையிலே குறைந்த எண்ணிக்கையிலே பாதிப்புகள் வருகிற பகுதியாக அதற்கு அருகிலேயே தேர்வு செய்யலாம் என்ற கருத்து இருக்கிறது. அதைச் செய்வதற்கான முயற்சிகளை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக அறிவார்கள். எந்த ஒரு நல்ல காரியம் மக்களுக்கு விரிவாகச் செய்ய முற்பட்டாலும் அந்த நல்ல காரியத்தைச் செய்யும்பொழுது சிலர் பாதிக்கப்படத்தான் செய்வார்கள். அதைப்போல இந்த விமான நிலையத்தை விரிவாக்குகிற நேரத்தில் சிலருக்கு பாதிப்பு ஏற்படலாம். அப்படி பாதிக்கப்படுகின்றவர்கள் யார், எத்தகையோர், நலிந்தவர்களா, மெலிந்தவர்களா, ஏழைபாழைகளா என்பதை எல்லாம் பார்த்துத்தான், ஆராய்ந்துதான் அரசு முடிவுகளை எடுக்கும். பொதுவாக, சென்னையிலே விமான நிலையத்தை விரிவாக்குவதற்கு இப்பொழுதுள்ள இந்த இடம்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்ற உரைக்கு பிரச்சாரம் பலமாகச் செய்யப்படுகிறது. சிவபுண்ணியம் அவர்களே சொன்னார்கள், பீதி கிளப்பப்படுகிறது என்று. இப்படித்தான் கேரளாவிலேகூட முல்லைப் பெரியாறு அணை திறந்து விடப்பட்டால் 136 அடி 142 அடிக்கு மேல்

திறந்து விடப்பட்டால் 3 லட்சம் மக்கள், 30 லட்சம் மக்கள் இறந்து விடுவார்கள் என்றெல்லாம் பீதியைக் கிளப்பியிருக்கிறார்கள். அது எப்படி அர்த்தமற்ற பீதியோ, அதைப்போலத்தான் இதுவும். விமான நிலைய விஸ்தரிப்பினால் இத்தகைய சூழ்நிலைகள் எல்லாம் ஏற்படும் என்கின்ற பீதியை யாரும் நம்ப வேண்டாம். நாங்கள் விமான நிலையத்தையே வேறு இடத்திலே அமைக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கின்றோம். இப்பொழுதுள்ள இடத்தை விரிவாக்குவதை விட வேறு இடத்திலேயே, இன்னும் கொஞ்சம் தொலை தூரத்திற்குச் சென்று விடலாமா என்பதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கிடையிலே யாரோ பிழைப்பு தேடுகின்றவர்கள், இடைத் தரகர்கள், இருக்கின்ற ஏழை மக்களைக் கிளப்பி விட்டு இதிலே கொஞ்சம் சம்பாதிக்கலாம் என்று எண்ணிக்கொண்டு இத்தகைய ஏமாற்று வேலைகளில், பிரச்சாரங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதை சிவபுண்ணியம் உட்பட யாரும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

*முற்பகல் 11-20*

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) அலுவல் வரிசையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள வரிசையை மாற்றுதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 12-ல் குறிப்பிடப்பட்டுள்ள 'அரசினர் தனித் தீர்மானம்' இனம் 4-ஆக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும், ஏனைய இனங்கள் ஏற்கெனவே அறிவித்துள்ளபடி தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.





## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது முதல் ஆறாவது வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(முற்பகல் 11–25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.





## 7. அரசினர் தனித் தீர்மானம்

### சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழை அறிமுகப்படுத்த ஒப்புதல் வழங்குமாறு மேதகு குடியரசுத் தலைவரைக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம் முன்மொழிதல். மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1)–வது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப்பிரிவு 7–ன்படி, உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயல்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதென இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்தீர்மானத்தின்மீது கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் பேசலாம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழைப் பொறுத்தவரையிலே சீர்திருத்தம், மாற்றங்கள், புரட்சிகள் என்று தமிழக முதல்வர் அவர்கள் செய்ததை யாரும் மறந்திட இயலாது. திரைப்பட வரலாற்றை எடுத்துக்கொண்டால்கூட, ஒரு காலத்திலே புராணங்கள், அரசன், அரசி என்ற அளவிலே இருந்த ஆதிக்கத்தை சமூக சீர்திருத்தக் கொள்கைகளுக்குப் பயன்படுகின்ற வகையிலே மாற்றியமைத்த பெருமை நம்முடைய முதல்வருக்கு உண்டு என்பதனை நான் ஆழமாகப் பதிவு செய்கின்றேன்.

பொதுவாக, வசனக் கவிதை என்று வருகின்றபோதுகூட, தமிழக்கு ஒரு புதிய வடிவம் என்ற வகையிலே அது ஏற்றுக்கொள்ளப்படுமா, படாதா என்ற ஐயப்பாடு தமிழ்ப் புலவர்கள் மத்தியில் இருந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எழுதிய வசனக் கவிதைப் புத்தகத்திற்குத் தலைப்பே 'கவிதை அல்ல' என்று வைத்தார்கள் என்று நான் நினைவுகூர்கின்றேன். 'கவிதை அல்ல' என்று அவர்கள் வைத்தால்கூட நடைமுறையிலே அவர் வகுத்த அந்தக் கவிதை நடை இன்றைக்கும் போற்றப்படுகிறது, வாழ்த்தப்படுகிறது. ஹைக்கூ போன்ற நவீனக் கவிதைகள் அதை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ளன. அந்த வகையிலே, தமிழுக்குச் சிறப்புச் சேர்க்கின்ற வகையிலே அவர்கள் தன்னுடைய ஆட்சிக் காலங்களிலே செய்த சாதனைகள் ஏராளம் என்பதை நான் நினைவுகூர விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–30*

நான் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது, கலைவாணர் அரங்கத்திலே நடைபெற்ற ஒரு விழாவினை நான் நினைவுகூர்கின்றேன். அகர முதலியைத் தொகுக்கின்ற பணியினைத் தேவநேயப் பாவாணர் அவர்கள் செய்ய வேண்டுமென்று அவர்கள் மனதார வாழ்த்தினார்கள். தேவநேயப் பாவாணர் அவர்கள் 100 ஆண்டுகள் வாழ வேண்டும்; 100 ஆண்டுகள் வாழ்ந்து இந்த அகரமுதலியைத் தொகுக்கின்ற பணியினை அவர்கள் செய்ய வேண்டும் என்று அன்றைக்கு முதல்வராக இருந்த, இன்றைக்கும் முதல்வராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் மனதார வாழ்த்திப் பேசினார்கள்.

நான் இதை ஒரு பொற்காலப் புரட்சியாகக் காண்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழுக்கு அந்தஸ்தைப் பெற்றுத் தருவது அல்லது சிறப்பைப் பெற்றுத் தருவது என்பது எல்லோராலும் செய்ய முடியாதது. நிபுணத்துவம் அல்லது புலமை பெற்றவர்கள்தான் செய்ய முடியும். அந்த அளவிற்கு புலமை பெற்ற நம்முடைய தமிழ் அறிஞர், முத்தமிழ் அறிஞர்,





கலைஞர் அவர்கள் இன்றைக்கு நீதிமன்றத்திலே தமிழை வழக்கு மொழியாக ஆக்குவதற்கான தீர்மானத்தை முன்மொழிந்திருக்கின்றார்கள். இது வரலாற்றுச் சிறப்புடைய முன்மொழிவு.

அறிவியல் தமிழைப் பொறுத்தவரையிலேகூட, அறிவியல் தமிழிலே சில பேர் ஐயப்பாடு கொண்டார்கள். அறிவியலைத் தமிழாக்க முடியுமா, மருத்துவத்தைத் தமிழாக்க முடியுமா என்றெல்லாம் பல பேர் அச்சப்பட்டார்கள். ஆனால், அது நிதர்சனமான உண்மையாக்கப்பட்டு பல்வேறு விஞ்ஞானங்கள், எல்லா வகையிலும், மென்பொருள் உட்பட அனைத்திலுமே, இன்றைக்கு வந்திருக்கின்ற நோக்கியா நிறுவனத்தினுடைய செல்போன் உட்பட, அதாவது நம்முடைய கைபேசி என்று சொல்லப்படுகின்ற அந்தக் கருவி உட்பட அனைத்திலும் தமிழ் வருகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தமிழை உயர்த்துவதிலும், தமிழை வாழ வைப்பதிலும், தமிழர்களுக்கு எல்லாம் துணையாக இருப்பதிலும் இன்றைய தமிழக அரசு முனைப்பாக இருக்கிறது. அதற்கு நம்முடைய தமிழறிஞர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் துணையாக இருக்கின்றார்கள்; வழிவகை செய்திருக்கின்றார்கள்.

நீதிமன்றத்தினுடைய நடவடிக்கைகள் தமிழிலே அமைகின்றபோது, இது எப்படி உச்ச நீதிமன்றத்திற்கு உகந்ததாக இருக்கும் என்று ஒரு பத்திரிகை ஆசிரியர் தன்னுடைய பத்திரிகையில் எழுதியிருக்கின்றார். நான் அதை விமர்சனமாக எடுத்துக்கொள்கின்றேன். -ஜப்பானில் இருக்கின்றவர்கள் ஜப்பானிய மொழியில் பேசுகின்றபோது, எழுதுகின்றபோது, தமிழ்நாட்டிலே பிறந்தவர்கள், தமிழ்நாட்டிலே வாழ்கின்றவர்கள் தமிழிலே பேசி, எழுதி, வாசித்து ஏன் வாதிட முடியாது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, பிறருடைய சத்தில்லாத வாதங்களைப் புறக்கணித்துவிட்டு, இன்றைக்கு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானம், மிகச் சிறப்பான தீர்மானம். வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்மானம். இந்தத் தீர்மானத்தைக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக— 'தமிழ்நாடு' என்று பெயர் வந்ததே, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி என்ற அந்தப் பெயரில்தான் 'தமிழ்நாடு' என்று முதன்முதலில் வந்தது—அந்த வகையிலே, தேசியத்தின் வழியாக வந்த, தமிழை வளர்க்கின்ற வழியாக வந்த, இந்தத் தீர்மானத்தை நான் மனதார வாழ்த்தி வரவேற்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினத் தலைவர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், முத்தமிழறிஞர்

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 6

அவருடைய வாய்மொழியால் அவருடைய தீர்மானம் முன்மொழிவால், வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமாக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அவரே முன்மொழிந்த இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்றமுகத்தான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவராக இருக்கிற சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலேயும் மனதார வரவேற்று, பாராட்டுகிறேன், பாராட்டுகிறேன்; பாராட்டிக்கொண்டே இருக்கலாம் என்ற எண்ணம் எங்களுக்குத் தோன்றுகிறது. ஏனென்று சொன்னால், தமிழாய்ந்த தலைமகன், தமிழினத்தினுடைய தலைவராக இருந்து, தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற வேளையில், இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது என்ற எண்ணத்தை எண்ணிப் பார்த்து, ஒட்டுமொத்தமாக, பாட்டாளி மக்கள் கட்சி மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழ் மக்களும், தமிழ்நாட்டு மக்களும், உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களெல்லாம் பாராட்டக்கூடிய தீர்மானம் என்பதை நான் இங்கே முதலிலே பாராட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானத்திலே, நாம் ஆழ்ந்து பார்ப்போம் என்று சொன்னால், தமிழுக்குச் செய்ய வேண்டிய முக்கியத்துவத்தை, தமிழுக்கு ஆற்றிவந்தத் தொண்டின் ஒரு பகுதியாக, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்த்துப் பெருமைப்படுகிறோம். ஆகவே, தமிழுக்கு இருக்கிற சிறப்புகள் அவருக்குத் தெரியாதது அல்ல.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'

என்று சொன்னார் பாரதியார். அதுமட்டுமா?

'தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!
தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!'

என்றெல்லாம் உலகில் இருக்கிற மொழிகளிலே தலைசிறந்த மொழியான, பழம்பெருமை வாய்ந்த மொழியாக இருக்கிற நம்முடைய தமிழுக்கு இருக்கின்ற சிறப்பை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தின் வாயிலாக நிறைவேற்றிப் பெருமைப்படுத்தி யிருக்கிறார்கள். ஆகவே, கடந்த காலங்களில் ஒருசிலர் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று சொல்லி நிறைவேற்ற முடியாமல் அதைக் கோட்டைவிட்டு, இந்த மாமன்றத்திலே கொச்சைப்படுத்திவந்த நிகழ்வுகளையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, இப்பொழுது நிறைவேற்றியிருப்பது பெருமைக்குரியது.



2006 டிசம்பர் 6] [திரு. ஜி.கே. மணி]

முற்பகல் 11–35

அதிலும் குறிப்பாக, இதுபற்றி கடந்த காலங்களில் பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவராக இருக்கிற மருத்துவர் அய்யா அவர்கள் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார்கள். வெளியிலே, மாநாடுகளிலே தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் வாயிலாகப் போராட்டத்தை நடத்தினார்கள். தமிழ்ப் பாதுகாப்பு இயக்கம் தொடர்ந்து இந்தப் பிரச்சினையை முன் எடுத்துச் சென்றது. மருத்துவர் அய்யா அவர்கள், மதிப்பிற்குரிய சகோதரர் திரு. தொல். திருமாவளவன் போன்றவர்கள் எல்லாம், தமிழ் அறிஞர்கள் எல்லாம், இதற்குத் தொடர்ந்து குரல் கொடுத்தார்கள்.

சமீபத்திலே, நவம்பர் மாதம் முதல் தேதி அன்று இந்திய நாட்டின் மொழிவழி மாநிலங்கள் பிரிந்து 50–வது ஆண்டு பொன் விழா நடைபெற்றது. அந்தப் பொன் விழாவிலே பங்கேற்ற மருத்துவர் அய்யா அவர்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்தார்கள். இந்த விழாவை நீங்கள் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். தமிழுக்கு, தமிழ்நாட்டு மக்களுக்கு உங்களால்தான் செய்ய முடியும். உங்களை விட்டால், யாரும் செய்ய முடியாது என்று முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோளை வைத்து, வரக் கூடிய சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, தமிழுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையில், உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் என்ற சட்டமுன்வடிவினைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வேண்டுகோளை இங்கே நிறைவேற்றி இருக்கிற பெருமைக்குரிய முதலமைச்சர் அவர்களை மீண்டும் ஒரு முறை நான் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.

இதற்கு முன்னாலேகூட அலகாபாத் நீதிமன்றத்திலே இந்த நடைமுறை இருந்து வந்திருக்கிறது. அதைத்தான் நாங்கள்கூட சுட்டிக்காட்டினோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது இந்த நீதிமன்றத்திலே மாநில மொழியாக இருக்கின்ற தமிழைக் கொண்டு வந்திருப்பது, இந்திய நாட்டிற்கு வழிகாட்டுதலாக இருக்கிறது. இதைப்போல மற்ற மாநிலங்களிலேயும் வருவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. ஆகவே, பல்வேறு நிலைகளிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தியத் திருநாட்டிலுள்ள மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிற நிலையில்தான் இதிலும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள் என்பதை மீண்டும் ஒரு முறை நான் இங்கே பாராட்டிச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 6

இப்படித் தமிழுக்குப் பெருமை சேர்த்திருப்பது நீங்கள். சென்னை உயர் நீதிமன்றத்தில், மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வாதாடுதல், தீர்ப்பளித்தல். அதே நேரத்தில் நடைமுறை நீதிமன்ற அலுவல்கள் அத்தனையும் தமிழிலேயே இருக்கும் என்ற ஒரு நிலை இதனாலே உருவாக்கப்படுகிறது. இது உருவாகின்ற நேரத்தில், தமிழ்நாட்டிலே இருக்கிற ஏழை எளிய சாதாரண, கிராமத்திலே பிறந்த, அதிலும் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வழக்கறிஞர்கள் எல்லாம் எங்களுக்கு சமூக நீதி கிடைத்திருக்கிறது என்று பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். பெருமையாகச் சொல்லப்படுகிறது. நீதிமன்றத்திலே ஒரு சிலர்தான் வாதாட முடியும் என்ற நிலை எல்லாம் மாறி இப்பொழுது பிற்படுத்தப்பட்டவன், மிகப் பிற்படுத்தப்பட்டவன், தாழ்த்தப்பட்டவன் என்று எல்லோரும் வாதாடுவதற்கு, ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஆங்கிலத்தைவிட தன்னுடைய தாய் மொழியில் சிந்திப்பதற்கு, சிந்தித்ததை எடுத்துச் சொல்வதற்கு, வாதாடுவதற்கு, எல்லாம் உரிய தாய் மொழியிலே வாதிடுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வாய்ப்பளித்து இருக்கிறார்கள் என்ற பெருமை எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. அது பெருமைப்படக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

எல்லா வகையிலும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிற நீங்கள், உயர் நீதிமன்றங்களிலே தமிழை நடைமுறையாக்கி இருக்கிற தாங்கள், இன்னும் சிலவற்றைச் செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே நான் முன்வைக்க விரும்புகிறேன். இங்கே நீதிமன்றங்களில் தமிழ் கொண்டு வந்திருக்கிறீர்கள். பயிற்று மொழியாகத் தமிழைக் கொண்டு வந்து, இந்த ஆண்டிலிருந்து 1 ஆம் வகுப்பு முதல் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறீர்கள். அதை நாங்கள் ஏற்கெனவே பாராட்டியிருக்கிறோம். இருந்தாலும்கூட, 1 ஆம் வகுப்பு என்று சொன்னால், 12 ஆம் வகுப்பு முடிக்கிற வரையிலே 12 ஆண்டுகள் ஆகிவிடும். ஆகவே, அதற்குள்ளாக இந்த 1 ஆம் வகுப்பு பாடத்தைக்கூட ஒரு 8 ஆம் வகுப்பு 10 ஆம் வகுப்பு பாடம் வரையிலே, மெட்ரிகுலேஷன் பள்ளிகளில், ஆங்கிலோ இந்தியன் பள்ளிக்கூடங்களிலேயும் தமிழை முதல் பாடமாக அறிமுகப்படுத்தினால் அந்த மாணவன் 12 ஆம் வகுப்பு முடித்துச் செல்லும்போது தமிழ் எழுதப் படிக்க கற்றுக் கொண்டாவது செல்வான். ஆகவே, அவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் அதையும் நீங்கள் கொண்டுவர வேண்டும் என்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 6] [திரு. ஜி.கே. மணி]

முற்பகல் 11–40

நம்முடைய தமிழகத்தில் ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்கிறது. பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டினுடைய எல்லா அலுவலகங்களிலும் இன்னும் நடைமுறையில் ஆங்கிலம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, கடிதப் போக்குவரத்தாக இருந்தாலும், சுற்றறிக்கையாக இருந்தாலும், ஆணைகளாக இருந்தாலும், எல்லாம் தமிழிலேயே வருவதற்கு நீங்கள் ஆவன செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல கோவில்களிலே தமிழில் அர்ச்சனை செய்வதற்குத் தாங்கள் ஆணை வழங்கியிருக்கிறீர்கள் நாங்கள் வரவேற்றோம், பாராட்டினோம். ஆனாலும்கூட, அங்கே கோவில்களிலே எழுதப்பட்டிருக்கிற பலகையிலே 'தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும்' என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. பிற மொழிகளிலே அர்ச்சனை செய்ய வேண்டுபவர்களுக்கு செய்து கொடுக்கட்டும்; நாம் வேண்டாம் என்று சொல்லவில்லை. எந்த மொழியிலே அர்ச்சனை செய்பவர்கள் வந்தாலும் செய்துகொடுக்கலாம். ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கிற கோவில்களிலே, தமிழர்கள் வழிபடுகின்ற கோவில்களில், இன்னும் தமிழ் அல்லாமல் அர்ச்சனை செய்யப்படுகிறது. ஆகவே, தாய் மொழி தமிழிலே அர்ச்சனை செய்கின்ற வகையில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும். பிற மொழிகளிலும் கேட்டால் அர்ச்சனை செய்யப்படும் என்ற அந்த வாசகங்கள் அடங்கிய பலகைகளை அங்கே வைக்கலாம். அதற்கு ஆவன செய்யவேண்டும். எல்லாக் கோவில்களிலும் தமிழிலேயே அர்ச்சனை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் இங்கே வேண்டிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல திருமணங்களிலேகூட, அது அவரவர்கள் விருப்பமாக இருந்தாலும்கூட, நடைமுறையிலே நாம் ஒரு விளம்பரமாக மக்கள் மத்தியிலே அரசே வெளிப்படுத்துவதற்கு, விழிப்புணர்ச்சியை உண்டாக்குவதற்கு தமிழ் முறைத் திருமணங்கள்—தந்தை பெரியார் காட்டிய வழியிலே தாங்கள் அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள் அது எல்லோரையும் சென்றடைவதற்கு, தமிழ் முறைத் திருமணம் வருவதற்கு உரிய விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும் என்று நான் இங்கே வேண்டிக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த முறை தாங்கள் 1996 முதல் 2001 வரையில் இருந்த ஆட்சிக் காலத்தில் கடை வளாகங்களில், வணிக வளாகங்களில் பெயர்ப் பலகைகள், விளம்பரப் பலகைகள், விலைப் பட்டியல்கள் எல்லாம் தமிழிலே இருக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தீர்கள். மீண்டும்

[திரு. ஜி.கே. மணி] [2006 டிசம்பர் 6

சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், அந்த ஆணையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. 'தமிழர் தெருக்களில் தமிழ்தான் இல்லை' என்று சொன்னார்களே அதைப்போல் இன்னும் தமிழ்நாடு முழுவதும், சென்னை மாநகரத்திலே இருக்கிற வணிக வளாகங்களிலே, எல்லாக் கடைகளிலும், எங்கு பார்த்தாலும் ஆங்கில விளம்பரப் பெயர்ப் பலகைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதுகூட பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, மருத்துவர் அய்யா அவர்கள் ஒரு போராட்டத்தை அறிவித்த நேரத்தில் தாங்கள் சொன்னீர்கள், 'நீங்கள் ஆளை அனுப்பாதீர்கள், நான் ஆணையை அனுப்புகிறேன்' என்று சொன்னீர்கள், மகிழ்ச்சி கொள்கிறோம். ஆனால், அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு நீங்கள் மேலும் அதை விரைவுபடுத்தவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் இன்னும், பேச்சு வழக்கிலே, ஊடகங்களிலே தமிழ் மேலும் செம்மைப்படுவதற்கு, செழுமை அடைவதற்கு தங்கள் காலத்தைவிட்டால் வேறு காலத்தில் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தமுடியாது. பல ஆட்சிகளை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துவிட்டார்கள். ஆகவே, எந்த ஆட்சி வந்தாலும்கூட தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டும், தமிழுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய பணிகள், ஆணைகள் நிறைவேற்றப்படவேண்டும் என்று சொன்னால் அது முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலத்தைத் தவிர வேறு எந்தக் காலத்திலும் நடக்காது என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள், தமிழ்நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதை வேறு யார் வந்தாலும் நடைமுறைப்படுத்தமுடியாது. ஆகவே, எங்கும் தமிழ், எதிலும் தமிழ், எல்லா நிலைகளிலும் தமிழ் என்ற நிலையைத் தமிழ்நாட்டிலே உருவாக்குவதற்கு மேலும் தாங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, நிறைவேற்றவேண்டும் என்ற வேண்டுகோளைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் சார்பிலே மீண்டும் ஒரு முறை வைத்து, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை, தமிழ்நாட்டு மக்கள் உயிர் உள்ளளவும் நினைத்துப் போற்றுகிற இந்தத் தீர்மானத்தை, இந்த மாமன்றத்திலே கொண்டு வந்த தங்களை மீண்டும் ஒரு முறை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே பாராட்டி இந்தத் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்.



2006 டிசம்பர் 6]

***திரு. ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் 10 கோடி தமிழ் மக்களுடைய ஒப்பற்ற தலைவர், 'மணம் கமழும் தமிழே. மனம் கவரும் தாயே, இன்ப மொழியே, அன்பு விழியே, உயிரான தமிழே, உலகில் உயர்வான மொழியே உனைப் போற்றி புகழ்வதேயன்றி வேறு பணி எனக்கு இல்லையே' என்ற உணர்வோடு தமிழ்ப் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞர், எங்கள் ஆருயிர் அண்ணன் முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் இந்தத் தீர்மானம் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் அவரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11-45

தாய்த் தமிழுக்கு அணி சேர்க்கின்ற பணிகளிலே அவர் யாருக்கும் சளைத்தவர் அல்ல. இருபதாம் நூற்றாண்டில் பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பிறகு இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள்தான் தமிழ் மொழியினுடைய ஒப்பற்ற பாதுகாவலர் என்பதைப் பல்வேறு காலகட்டங்களிலே நிரூபித்திருக்கிறார்கள். தமிழைப் பற்றிச் சொல்கின்றபோது, தமிழே, உன்னைத் தமிழே என்று அழைப்பதிலே உள்ள இன்பம் வேறு எந்தச் சொல்லிலும் இல்லை என்று சொல்வார்கள். எங்கள் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களை நாங்கள் எத்தனையோ அடைமொழிகளையும் சிறப்புப் பட்டங்களையும் நூற்றுக்கணக்கிலே பயன்படுத்தி அழைக்கத் தோன்றினாலும், ஆனால் உங்களை 'தலைவர் கலைஞரே' என்று அழைப்பதிலே உள்ள இன்பம், நெருக்கம் எந்தப் பெயரிலும், பட்டத்திலும், அடைமொழியிலும் இல்லை, இல்லவே இல்லை. அப்படிப்பட்ட தாங்கள் இன்றைக்குத் தமிழ் மக்களுடைய உணர்வுகளை, தமிழ்நாட்டு மக்களுடைய ஒட்டுமொத்த உணர்வுகளை, வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானமாக இந்த மாமன்றத்திலே கொண்டு வந்திருக்கிறீர்கள்.

தாய் மண், தமிழ் மண்ணில் உயர் நீதிமன்றத்தில் தமிழில் பேச, தமிழில் வாதாட, தமிழில் தீர்ப்பு நல்க இதுவரை நம்மால் முடியாத நிலை. அதற்குத் தடைக் கல்லாகப் பல பேர் இருந்தது ஒரு துயர் நிலை. இன்றைக்கு அந்தத் துயர் துடைக்கப்படுகிறது. ஆம், அதற்கு ஒரு தமிழர், இங்கே சட்டமன்றத்திலே முதல்வராக வர வேண்டும் என்ற நியதி இருந்த காரணத்தினால், இன்றைக்கு அந்தத் தமிழருடைய தலைமையிலே அந்தத் துயர் துடைக்கப்படுகிறது. இந்த நியதிக்கு பரிவட்டம் கட்டப்பட்டு, இந்த மன்றத்தின்மூலம் தமிழுக்கு மரியாதை செய்யப்படுகிறது. உயர் நீதிமன்றத்தில் இனி அதன் நடவடிக்கைகளும்,

அதையொட்டிய தீர்ப்புகளும் செம்மாந்து நிற்கும் செம்மொழியாம் தமிழிலே இருக்க, தமிழிலே தணியாத தாகம் கொண்ட தலைவராம் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய நல்லாட்சியிலே அதற்கு அவையில் இன்று பந்தக்கால் நாட்டப்பட்டிருக்கிறது. மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் முறையான ஒப்புதல் பெற்ற பின்னால், விரைவிலே நம் உயர் நீதிமன்றத்திலே தமிழுக்குக் கெட்டிமேளம். அப்படிப்பட்ட ஒரு சிறப்பான நிகழ்ச்சியை, இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்தியாவில் இருக்கிற மாநிலங்களில் இராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில், அங்குள்ள உயர் நீதிமன்றங்களில் அனைத்து நடவடிக்கைகளும் இந்தியிலே இருக்கிறது என்பதை நாம் அறிவோம். எத்தனை ஆண்டுகளாக? ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நடவடிக்கை. ஆனால், நம்முடைய தமிழ்நாட்டிலே இன்றைக்கு வந்திருக்கிறது என்று சொன்னால், எத்தனையோ தடைக் கற்கள். எத்தனையோ துயரங்கள். இதைக் கொண்டு வருவதற்கு தைரியமும், தன்னம்பிக்கையும் வேண்டுமென்ற அடிப்படையிலே, அந்த முடிவை, ஒரு திடமான முடிவை, ஒரு தைரியமான முடிவை, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்து, இன்றைக்கு நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. உயர் நீதிமன்றத்தில் நம் மொழியை நடைமுறைப்படுத்துவதில் குறுக்குசால் ஓட்டியவர்கள் பல பேர் உண்டு. நீதிமன்றத்திலே வழக்கு வந்தபோது, அதற்கு அதிகாரம் இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டபோது, கனத்த இதயத்தோடு நாம் இருந்தோம். ஆனால், அதற்கு முடிவாக இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு மிகப் பெரிய மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தீர்மானத்தின்மூலம் நமக்குத் தந்திருக்கிறார்கள்.

சீரிளமைத் திறம் வாய்ந்த தமிழ், கல்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த தமிழ், கன்னித் தமிழ், கலைஞர் கையால் சீர்பட வேண்டும் என்ற விதியால், அதே சமயம் நமக்கென்று ஒரு இந்திய அரசமைப்புச் சட்டம் இருக்கிறது. அதற்கென்று ஒரு விதி இருக்கிறது. அந்த விதியின்கீழ், நம் அரசமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டப் பிரிவு 7-இன்படி நம் உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் மாநில ஆட்சி மொழியிலே இருக்க ஒரு தீர்மானம் இங்கே கொண்டு வரப்பட்டுள்ளது. மாநிலத்தின் கீழ்க் கோர்ட்டுகளில் ஏற்கெனவே தீர்ப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் இருந்தாலும், தமிழகத் தலைநகர் சென்னையிலே அதைக் கொண்டுவர இவ்வளவு காலம்





தேவைப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் காலதேவனின் கண்ணிமை திறக்க கலைஞர்தாம் வர வேண்டும் என்றால், அதை யாரால் மாற்ற இயலும்? இதுவும் அதே காலதேவனின் கட்டாயம் என்பதைக் கருதிக்கொண்டுதான் இந்த அவையிலே கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை அகமகிழ்ந்து, அனைவர் சார்பாகவும் உளமார நான் வரவேற்கிறேன். இந்தத் தீர்மானத்தை நம்முடைய வழக்கறிஞர்களும் வரவேற்றுள்ளார்கள். உயர் நீதிமன்ற நடவடிக்கைகளில் இதுவரை வழக்கு மொழியாக இருந்த தமிழ் இன்றைக்கு வழக்கு மொழியாக வருகிறதே என்ற அளவிலா மகிழ்ச்சி இன்றைக்கு நம்முடைய வழக்கறிஞர்களுக்கு.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து' என்ற குறளை நன்றாய்ந்து செய்த தலைவரே, தலைவர் கலைஞர் அவர்களே, தமிழினக் காவலர் அவர்களே, உங்களால் தமிழ்த் தாய் இன்று தன் நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறாள். அவள் திருமேனியில் அலங்கரித்துக் கொண்டிருக்கும் ஐம்பெருங்காப்பியங்களைவிட, இன்று நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற உயர் நீதிமன்றங்களில் இனி தமிழில் நடவடிக்கைகள் என்ற தீர்மானம்தான் அவள் கழுத்திலே முத்து மாலையாக விளங்குகிறது. இதுவெல்லாம் அந்த முத்துவேலர் பெற்றெடுத்த தங்கப் புதல்வனின் சாதனை என்ற அளவிலே இந்தத் தீர்மானத்தை வரவேற்று, தமிழகச் சட்டமன்றத்தின் வரலாற்றுக்கு இன்று குடமுழுக்கு நாள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–50*

ஒரு கவிஞன் சொன்னான்; பெரியாரைப் பற்றிச் சொல்கிறபோது, பெரியார் வல்லினம் என்று சொன்னான்; பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றிச் சொல்கிறபோது மெல்லினம் என்று சொன்னான்; நம் தலைவர் கலைஞர் அவர்களைப்பற்றிச் சொல்கின்றபொழுது, அவர் இறுகினால் வல்லினம், இளகினால் மெல்லினம், இரண்டும் கலந்த இடையினம். ஆகவே, அவரைப் போற்ற மறக்காது தமிழினம் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை, பத்து கோடி தமிழ் மக்களின் தலைவர், கலைஞர் அவர்களுடைய தீர்மானத்தை, வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

[2006 டிசம்பர் 6

***திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை உயர் நீதிமன்றத்தில் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் நம்முடைய தாய் மொழியான தமிழ் மொழியிலேயே நடைபெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், தமிழின்மீது மிகுந்த பற்றும் தமிழ் வளர்ச்சியில் மிகுந்த அக்கறையும் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்களால் இன்று முன்மொழியப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

நீண்ட நெடுங்காலமாக தமிழ்நாட்டின் பல்வேறு அமைப்புகளால், தமிழ் ஆர்வலர்களால் தமிழ்நாட்டு மக்களால், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற எண்ணற்ற அமைப்புகளால் இந்தக் கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தாலும்கூட, இதுவரையில் அக்கோரிக்கை நிறைவேறுகிற வாய்ப்பு கிட்டவில்லை. ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் இங்கே முன்மொழியப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்தின்மூலம் நம்முடைய உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும், நிர்வாக நடவடிக்கையானாலும், வழக்குகள் நடத்துகிற நடவடிக்கைகளானாலும், அனைத்தும் இனி தமிழ் மொழியிலேயே நடைபெறும் என்பதை தமிழ்நாட்டு மக்களுக்குக் கிடைத்திருக்கிற பெரும் வரப்பிரசாதமாகவே கருதுகிறோம்.

வழக்குகளிலே சிக்கி நீதிமன்றத்திற்கு வரக்கூடிய சாதாரண மக்கள், அங்கு தனக்காக வாதாடுகிற வழக்கறிஞர் என்ன பேசுகிறார், நமக்கு ஆதரவாகப் பேசுகிறாரா அல்லது எதிரிக்கு ஆதரவாகப் பேசுகிறாரா என்கிற விவரத்தைக்கூட அறிந்துகொள்ள முடியாத அளவிலேதான் இருக்கிறார்கள். ஆகவே, ஆங்கிலம் தெரியாதவர்கள், தமிழ் மொழி மட்டுமே கற்றிருக்கக்கூடியவர்கள் அந்த நீதிமன்றத்தில் நடக்கிற நிகழ்வுகளை நேரிலே பார்த்தாலும் என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியாத ஒரு அவல நிலைமை தொடர்ந்து நீடித்து வந்தது. அவற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிறவகையிலே இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் தமிழ் மொழியிலேயே இந்த நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுகிறபோது, தன்னுடைய வழக்கில் தன்னுடைய வழக்கறிஞர் எப்படி வாதாடுகிறார், தனக்காக எப்படிக் குரல் கொடுக்கிறார் என்பதையெல்லாம் நேரடியாக அவர்கள் அறிந்துகொள்வதற்கு ஒரு வாய்ப்பு இந்தத் தாய் மொழியான தமிழ் மொழியிலே இந்த நீதிமன்ற நடவடிக்கைகள் நடைபெறுவதன்மூலம் கிடைத்திருக்கிறது. ஆகவே, அதற்காக நான் மீண்டும் ஒரு முறை பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2006 டிசம்பர் 6] [திரு. சி. கோவிந்தசாமி]

இந்த நடவடிக்கைகள் 1963 ஆம் ஆண்டிலேயே இந்திய அரசமைப்புச் சட்டத்திலே அதற்கான வாய்ப்புகள் இருந்தும்கூட, இவ்வளவு காலம் அதற்கான முயற்சிகள் தமிழ்நாட்டிலே நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிற இந்தப் பெரு முயற்சியின்மூலமாக உயர் நீதிமன்றத்திலே தமிழிலே அனைத்து நடவடிக்கைகளும் நடைபெறுவது என்பது வரவேற்கத்தக்க ஒரு நல்ல நிகழ்வாகும்.

அதேபோல இந்த நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறுவதற்கு நீதிமன்றத்திற்கு சில அடிப்படையான வசதிகள் அங்கே தேவைப்படுகின்றன. உடனுக்குடன் மொழிபெயர்ப்பதற்குரிய கருவிகள், அதற்கான ஊழியர்கள், இதுபோன்ற பல அடிப்படையான வசதிகளும் தேவைப்படுகின்றன. அவற்றையும் உரிய காலத்திலே நிறைவேற்றினால் தமிழ் மொழியில் நீதிமன்ற நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக நடைபெறுவதற்கும், தமிழ்நாட்டு மக்கள் அதன்மூலம் பலன் அடைவதற்கும் வாய்ப்பாக அமையும். அந்த வகையில் இந்தத் தீர்மானத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கின்றேன்.

அதேபோல, இன்றைக்கு தமிழ்நாட்டிலே அரசினுடைய பல்வேறு உத்தரவுகள், அரசாங்கத்தினுடைய சில கடிதங்கள் இவைகூட ஆங்கிலத்திலே வந்துகொண்டிருக்கின்ற நிலைமைகளைப் பார்க்க முடிகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், நீதிமன்றத்திலேயே தமிழ் மொழி ஆட்சி நடத்துகிற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற தாங்கள், தமிழக அரசின் சார்பாக வெளியிடுகிற அனைத்து உத்தரவுகளும், தமிழ்நாட்டிற்குள்ளே நடைபெறுகிற கடிதப் போக்குவரத்துகள் எல்லாம் தமிழ் மொழியிலேயே இருக்க வழிவகை செய்யக்கூடிய வகையிலே, தாங்கள் ஒரு உத்தரவிட வேண்டுமென்ற விருப்பத்தையும் இந்த நேரத்திலே கேட்டு, இந்தத் தனித் தீர்மானத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கின்றேன். வணக்கம்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. குணசேகரன்.

***திரு. க. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நமது தமிழக முதல்வர் அவர்கள் இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே முழுமனதோடு

நாங்கள் வரவேற்கிறோம். தமிழ் மொழியைச் செம்மொழியாக உருவாக்கித் தந்த நமது முதல்வர் அவர்கள், தமிழ் மொழியை உயர் நீதிமன்றத்திலும் இன்றைக்கு வழக்கு மொழியாகக் கொண்டுவந்திருக்கிற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். அதை ஒரு பொருத்தமான நிகழ்வாக நாங்கள் கருதுகிறோம்.

இந்த ஆண்டு, தமிழ் மொழிக்காக தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து மறைந்த மாபெரும் தலைவர் ஜீவா அவர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், தமிழ் மொழிக்கு ஒரு உயர்வான அந்தஸ்தை நமது தமிழக முதல்வர் அவர்கள் பெற்றுத் தந்திருப்பது என்பது, ஒரு காலப் பொருத்தமாக நாங்கள் கருதுகிறோம்.

எனக்கு முன்னால் பேசிய சில மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியதுபோல, தமிழ் மொழி ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில்கூட, இணைப்பு மொழியாக இருக்கிற, தொடர்பு மொழியாக இருக்கிற ஆங்கிலம், பல்வேறு இடங்களிலே தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்திக் கொண்டிருக்கிறது என்ற ஒரு சூழ்நிலையையும் இந்த நேரத்தில் நாம் மாற்றுவதற்கு ஒரு உறுதியான நிலைப்பாட்டை, கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும்; அதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் தமிழை நாம் வழக்கு மொழியாக்க இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிற நேரத்தில், அதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லையென்ற ஒரு கூக்குரலும் ஒரு பகுதியிலேயிருந்து எழுந்து, இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில், இந்தத் தீர்மானம் நடைமுறைக்கு வருவதற்கு காலதாமதம் ஆவதற்கான சில செயல்களையும், அதற்கான நிலைப்பாடுகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் நமது முதல்வர் அவர்கள் அறிந்திருப்பார்கள். எனவே, அந்த அடிப்படையில், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிற அதேநேரத்தில், அந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருகிற நடவடிக்கைகளையும் இணைந்து எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, இந்தச் சிறப்பான தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே மீண்டும் வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில், வரலாற்றுச் சிறப்புமிக்க, பொன் எழுத்துக்களால் பொறிக்கக்கூடிய ஒரு தீர்மானத்தை, நம்முடைய



முதல்வர் முத்தமிழ் அறிஞர் அவர்கள் இந்த அவையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். இதை விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக வரவேற்கிறோம்; நெஞ்சாரப் பாராட்டுகிறோம்; நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஏற்கெனவே நாங்கள் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தை ஏற்படுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் பொதுச் செயலாளர், அண்ணன் திருமாவளவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட அந்தத் தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்திலே, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர், மருத்துவர் அய்யா தமிழ்குடிதாங்கி அவர்களும் சேர்ந்து, மிகப்பெரிய போராட்டங்களை எடுத்தோம். கடந்த ஆட்சியிலே, அந்தப் போராட்டங்களை எடுத்து, தமிழை ஆட்சி மொழியாக்கவேண்டும், தமிழை நீதிமன்றங்களிலே வாதாடுகின்ற மொழியாக்கவேண்டுமென்று போராடுகின்றபொழுது, காவலர்களை ஏவி விட்டு, எங்களைக் கைது செய்து, சிறையிலே அடைத்தார்கள். ஆனால், 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று நாம் கேட்டிருந்தாலும், கேட்காமலேயே கொடுக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உயர் நீதிமன்றத்தில்கூட, நம்முடைய தலைமை நீதிபதி இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதோடு தமிழில் மொழியாக்கம் செய்யும் கட்டமைப்பை உருவாக்கவேண்டுமென்ற ஒரு கேள்வியும் அங்கே எழுகிறது. ஆங்கிலத்தில் எப்படி இலத்தீன் சொற்களை இன்றும் சட்டத்தில் பயன்படுத்துகிறார்களோ, அதேபோன்று நம்முடைய தமிழை சட்ட கலைச் சொற்கள் கொண்டதாக நாம் மாற்றவேண்டும்.

நண்பகல் 12–00

நான்கு திசைகளிலிருந்து ஏற்கெனவே, தமிழ்ப் பாதுகாப்பு இயக்கத்தின் மூலம் ஊர்திப் பயணங்கள் மேற்கொண்டு, அதன் பயனாக எவ்வளவு மனுக்கள் கொடுத்தும், எவ்வளவு போராட்டங்கள் நடத்தியும், கடந்த அரசு செவி சாய்க்காமல், தமிழுக்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால், நம்முடைய முத்தமிழறிஞர் முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருவதை மனதாரப் பாராட்டுகின்றோம்; நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு)

[2006 டிசம்பர் 6

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

*(மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் தண்ணீர் அருந்தினார்கள்.)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** முல்லைப் பெரியாறு தண்ணீரா? *(சிரிப்பு)*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மாபெரும் தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற இந்தத் தருணத்தில், இந்த அமைச்சரவையில் ஒருவனாக நான் இருக்கிறேன்; இந்த அவையில் இருந்து நிறைவேற்றுகிறேன் என்ற பெருமையோடு, எங்கள் அமைச்சரவையின் சார்பில் மாண்புமிகு முதல்வருக்கு நன்றி தெரிவித்து *(மேசையைத் தட்டும் ஒலி)* என்னுடைய உணர்வுகளை நான் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். ஒரு வழக்கறிஞன் என்ற முறையிலும் நான் பெருமைப்படுகிறேன்; அதற்காகவும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதல்வராக இருக்கிற காலத்தில் எல்லாம், வரலாற்றுச் சிறப்புமிக்க காரியங்களைச் செய்து, வரலாற்றுப் புகழ் பெற்றிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஒருவர் எவ்வளவு காலம் வாழ்கிறார் என்பதைவிட, வாழ்கிற காலத்தில் எப்படி வாழ்ந்தார் என்பதுதான் பெருமை. அதைப்போல், ஒருவர் எவ்வளவு காலம் ஆட்சியில் இருந்தார் என்பதைவிட, இருக்கிற காலத்தில் என்ன வரலாற்றுச் சிறப்புமிக்க காரியங்களைச் செய்தார் என்பதுதான் பெருமை. அந்தவகையில், இன்றைக்கு அவர் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம், ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டிருக்கிற ஒருசில இனத்து மக்களுக்குக்கூட, ஒரு விடிவெள்ளியாக வந்திருக்கிறது.

இந்த மன்றத்தில் எத்தனையோ வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்த நாட்டிற்கு 'தமிழ்நாடு' என்று பெயரிட்ட நேரத்தில், நான் இந்த அவையில் இல்லை; மாடத்திலிருந்து பார்த்திருக்கிறேன். ஆனால், என்னுடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பதவியேற்ற நேரத்தில் எல்லாம், பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றியபோது, நான் அவரோடு இருந்து பங்கு பெற்றிருக்கிறேன் என்பதிலே எனக்கு மட்டற்ற பெருமை. இந்த



2006 டிசம்பர் 6] [திரு. துரைமுருகன்]

'சென்னை' என்பது, 'மதராஸ் சிட்டி', 'மதராஸ் சிட்டி' என்று அழைக்கப்பட்டிருந்த நேரத்தில், 'சென்னை' என்ற பெயரை, இந்தத் திருநகரத்திற்குக் கொண்டு வந்து மாற்றிக் காட்டினார்கள். அதுவும் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமைதான்.

செம்மொழி என்றால் என்ன என்றே பல பேருக்குத் தெரியாது; Classical language என்பார்கள். பரிதிமாற்கலைஞர் ஒரு நூற்றாண்டிற்கு முன்னாலேயே, அதைச் சொன்னதைக்கூட மறந்துவிட்டார்கள். அதை ஏறெடுத்துப் பார்ப்பவரில்லை; அப்படி அந்தக் கோணத்திலே சிந்திப்பவர்கள் இல்லை. இந்தியத் திருநாட்டில் ஏதோ ஓரிரு மொழிகளுக்கே Classical language என்று அறிவிக்கப்பட்ட அந்தஸ்து; அது என்றைக்கு வந்தது என்று அவர்களுக்கும் தெரியாது; கொடுத்தவர்களுக்கும் தெரியாது. ஆனால், இந்தியத் திருநாட்டையே சிந்திக்க வைத்து, தமிழனுக்கு இப்படியொரு நிலை, மொழி உண்டு என்பதை அறிவித்து, என்னுடைய தமிழ் செம்மொழியாக இருக்கவேண்டும் என்று வாதாடி, தமிழை உயர்நெறிச் செம்மொழி என்று அறிவித்த பெருமை, வரலாற்றுச் சிறப்புமிக்க பெருமை அதுவும் கலைஞர் அவர்களாலேதான் ஏற்பட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–05*

அதுமட்டுமல்ல தமிழ்வழியிலே படிக்க வேண்டும். Tamil Medium என்பது ஒரு காலத்தில் ஏளனம் செய்யப்பட்டது. Tamil Medium என்ற நிலையைக் கொண்டுவந்து தமிழ்வழியிலே படிக்கலாம் என்பதை நிலைநாட்டிய பெருமை பெற்றவரும், வரலாற்றுச் சிறப்புமிக்க காரியத்தைச் செய்தவரும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான். அரசு ஊழியர்கள் தாம் எழுதுகிற கோப்பில் இறுதியாகத் தமிழில்தான் கையெழுத்துப் போட வேண்டுமென்று அரசு ஆணையிட்டு G.O. கொண்டுவந்து நிறைவேற்றியவரும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான்.

அதேபோன்றுதான், இங்கே தமிழ் அறிஞர்களுடைய நூல்கள் எல்லாம் காலப்போக்கிலே மறைந்துகொண்டிருந்த காலத்தில் அந்தத் தமிழ் அறிஞர்களுடைய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்கி, அவர்கள் இருந்தாலும் சரி, அவர்களுடைய வாரிசுகள் இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் நிதியை வழங்கி அந்தக் குடும்பங்களை வாழ வைத்த பெருமையும் கலைஞர் அவர்களைத்தான் சாரும், முதலமைச்சர் அவர்களைத்தான் சேரும். அதேபோன்று தமிழ் அறிஞர்களுடைய நினைவுகள் இருக்க வேண்டுமென்பதற்கு நினைவு மண்டபங்களை உருவாக்கியவரும் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள்தான்.

தமிழ்நாடு என்று சொல்லுகிறோம்; தமிழ்நாட்டின் எல்லை குமரி கடைசியிலே என்கிறோம். அந்தக் குமரி எல்லை நம்முடைய தமிழகத்தில் பாரத நாட்டில், ஒரு புண்ணிய பூமியாகக் கருதப்படுகிறது. அதற்காக வடநாட்டில் இருப்பவர்கள் வருகிறார்கள். ஆனால், தமிழ்க் கலாச்சாரத்தின் எடுத்துக்காட்டு, தமிழ்மொழியை உணர்த்துகின்ற பெருமை, எந்தச் சின்னமும் அங்கே இல்லை. விவேகானந்தர் அவர்கள் எப்பொழுதோ அந்தப் பகுதிக்கு வந்தார் என்பதற்காக அவருக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்கப்பட்டது. நான் அதைக் குறை சொல்லமாட்டேன். அந்த மண்டபம் அமைப்பதற்கும் நம்முடைய முதல்வர் அவர்கள்தான் நிதியும் கொடுத்து, அனுமதியும் கொடுத்து அதைக் கட்டுவதற்கு உதவினார்கள். ஆனால், வருகிறவர்கள் பார்க்கிறபோது அதில் வடநாட்டுக் கலாச்சாரம் இருக்குமே தவிர தமிழ்நாட்டுக் கலாச்சாரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு இல்லை. ஆனால், பார்க்கிறபோதே ஒரே ஒரு சிலை இருக்க வேண்டும், அந்தச் சிலையிலேயே தமிழ் இருக்க வேண்டும், தமிழன் பெருமை இருக்க வேண்டும், தமிழ் உலகம் போற்றுகிற திருக்குறள் இருக்க வேண்டும், தமிழ்க் கலாச்சாரம் இருக்க வேண்டும், தமிழன் என்ற பெயரை உச்சரிக்க வேண்டும், தமிழ் என்ற பெருமை பரவ வேண்டும் என்பதற்காக அங்கே வள்ளுவர் சிலையைக் கொண்டு வந்து வைத்த பெருமை நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களுக்குத்தான் உண்டு. இப்படி எத்தனையோ பெருமைகள். இங்கே திருக்கோயில்களிலே தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்பதற்கும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்தான் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதுமட்டுமல்ல, பெயர் தமிழ்நாடு; ஆனால், தமிழ்நாட்டில் தமிழ் படிக்காமலேயே ஒருவன் கல்வி பயிலலாம் என்றால், இதைவிட ஒரு அவமானம் வேறு இருக்க முடியாது. அதனால், யாராக இருந்தாலும் சரி, நீ எந்த மொழி படித்தாலும் சரி, எந்தப் பிரிவினர், எந்த இனம் இங்கே வாழ்ந்தாலும் அவர்களுக்கு உரிமை தருகிறேன். ஆனால், தமிழ்நாட்டிலே படிக்கிற மாணவன் தமிழ் படித்தாக வேணடும் என்ற கட்டாயத்தை உருவாக்கி ஒரு வரலாற்றுப் பெருமையைச் செய்தவரும் நம்முடைய முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுகிறபோது எவ்வளவு நாட்கள் ஆண்டோம் என்பதல்ல முக்கியம். இவ்வாறு வரலாற்றிலே சிறப்புமிக்க காரியங்கள், அதிலும் தமிழ் இனத்திற்கு, தமிழ் மொழிக்குப் பெருமை சேர்க்கின்ற காரியங்களை நம்முடைய முதல்வர் அவர்கள் அடுக்கடுக்காகச் செய்திருக்கிறார்கள். இன்றைக்கு உயர் நீதிமன்றத்தில் தமிழிலேயே வழக்காடலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வழக்கறிஞருக்குப் படித்தவன். சிறிதுகாலம்





உயர் நீதிமன்றத்திலே வழக்கறிஞராக இருந்தவன். போட்டி போட முடியவில்லை. நாம் 'ஆ' பார்; 'ஆடு' பார்; 'மரம்' பார் என்று படித்துவிட்டு வந்தவர்கள். நாங்கள் தோட்டமும் கிணறும் சேர்ந்து விலை என்று தமிழிலேயே கணக்குப் படித்தவர்கள். ஆனால், ஆங்கிலத்தில் படிப்பது என்பது—படிக்க முடியும், மனப்பாடம் செய்ய முடியும். ஆனால், உச்சரித்துப் பேசுவதற்கு கிராமத்தில் இருக்கிற எங்களுக்குக் கொஞ்சம் கடினம். உயர் நீதிமன்றத்திலே நின்று ஆங்கிலத்திலே உரையாற்றுகிறபோது தப்பு கண்டுபிடிப்பார்களோ என்ற அச்சத்திலே பாதி வக்கீல்கள் இந்தத் தொழில் வேண்டாம் என்று போய்விட்டார்கள்.

என் அப்பனுக்கு ஆங்கிலம் தெரியாது, என் அம்மாவுக்குத் தெரியாது. என் பாட்டனுக்குத் தெரியாது. ஆனால், பாட்டனுக்குப் பாட்டன், முப்பாட்டன், முப்பாட்டன், வழிவழியாக ஆங்கிலம் படித்த குடும்பத்திலே வந்தவன், அவன் போடுகிற அரட்டலைப் பார்த்தே தமிழன் ஓடிவிட்டான். இல்லை. இனி உச்ச நீதிமன்றத்தில், அடடா, எவனும் கிட்ட நெருங்க முடியாது. தமிழிலே வழக்காடலாம் என்கிறபோது (குறுக்கீடு) உயர் நீதிமன்றத்தில்—உச்ச நீதிமன்றத்திற்கும் ஒருகாலத்தில் வரும்—உயர் நீதிமன்றத்திலே நின்று தமிழிலே வழக்காடலாம் என்கிற ஒரு பெருமையைச் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்குத்தான் இந்தத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, கிராமத்திலே புறக்கணிக்கப்பட்ட, ஏதோ தப்பித் தவறிப் படித்து வந்திருக்கிறானே, அவனெல்லாம் தலை நிமிர்ந்து உச்ச நீதிமன்றத்திலே (குறுக்கீடு) உயர் நீதிமன்றத்திலே, I am sorry, உயர் நீதிமன்றத்தில் நின்று வழக்காடுவதற்கு, அந்தப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் முதுகெலும்பை வலுவேற்றிய பெருமை, கலைஞருக்கே! இந்தச் சமுதாயம் என்றென்றும் இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட இல்லங்களிலெல்லாம் உங்கள் பெயர் இருக்கும். பெயர் இருந்தால்தான் நன்றியுள்ள சமுதாயமாக இது இருக்கும். எனினும், நன்றியை எதிர்பார்த்து நீங்கள் செய்வதில்லை.

*பிற்பகல் 12–10*

ஒருமுறை சொன்னீர்கள். நிலத்தில் பயிரிடுவதற்கு மேகம் மழையைக் கொட்டும். "ஐயோ, நான் பயிரிடுவதற்கு எனக்கு மழையைத் தந்திருக்கிறது இந்த மேகம்" என்று நன்றி சொல்வதற்கு மேலே பார்த்தால், பொழிந்த மேகம் கலைந்து போயிருக்கும். அதைப்போல்தான், நன்றி சொல்வதை எதிர்பார்த்து நீங்கள் செய்யவில்லை. நன்றி சொல்கிற சமுதாயமும் அல்ல இந்தச் சமுதாயம். இது தமிழ்ச் சமுதாயம். எல்லாம் அறிந்த சமுதாயத்தில் நன்றியை மட்டும் அறியாத சமுதாயம். ஆனால்,

அந்தச் சமுதாயம் ஏன் இருக்கிறது என்றால், பிற்படுத்தப்பட்ட சமுதாயம் அப்படித்தான் இருக்கும் என்பதற்காக, இப்படிப்பட்டதொரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிற தலைவர் அவர்களே, அந்தச் சமுதாயத்திலே பிறந்தவன் என்ற காரணத்தால், வக்கீல் தொழிலுக்குப் படித்தவன் என்ற காரணத்தால், உங்களோடு 46 ஆண்டு காலத்திற்கும் மேலாக, உங்கள் சுண்டு விரலைப் பிடித்துக்கொண்டே நடந்தவன் என்ற காரணத்தால், நீங்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை, அமைச்சரவையிலேயிருந்து, எங்கள் தோழர்களோடு ஆதரிக்கின்ற பெருமையையும், இந்த அவையிலேயிருந்து ஆதரிக்கின்ற பெருமையையும் பெற்றுள்ளோம்; (மேசையைத் தட்டும் ஒலி) புளகாங்கிதம் அடைகிறோம், பூரிப்படைகிறோம், பெருமைப்படுகிறோம். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது, இந்த அவையில் இருந்தோம், அமைச்சரவையிலே இருந்தோம் என்பதே யாம் பெற்ற பேறு. இனி எங்களுக்கு வேறு பேறு அமையப்போவதில்லை. என்றென்றும் எங்கள் பரம்பரைகள், பின்னாலே சொல்லும், "எங்கள் தாத்தா இருந்தார், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது இந்த அவையிலே இருந்தார்" என்று. இது ஒன்றே போதும். பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு நீங்கள் வாழவேண்டுமென்று வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணர்ச்சிமயமான, எழுச்சி நிறைந்த, நம்முடைய இதயத்தையெல்லாம் நனையச் செய்கின்ற அளவிற்குப் பெருமிதம் கொள்ளக்கூடிய ஒரு தீர்மானத்தை இந்த அவை இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது. இங்கே எல்லா தலைவர்களும் பேசிய பிறகு, எனக்கு முன் பேசிய பொதுப் பணித் துறை அமைச்சர், தம்பி துரைமுருகன், அவராகவே அமைச்சர் பெருமக்களுக்கு வக்காலத்து வாங்கி, என்னை வாழ்த்தியிருக்கின்றார். நான், நானாக இல்லாமல், வேறொரு முதலமைச்சராக இருந்தால், அவர் என்னைப் பற்றிப் பாராட்டிய பெருமைகளனைத்தையும் நானே சூட்டிக்கொண்டிருப்பேன். அவர் சொல்வதிலேயிருந்து, நான் சொல்லித்தான் பேசினாரோ என்று யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. என்னோடு பல்லாண்டு காலம் பழகிய அந்தப் பாச உணர்வு, இந்த ஆட்சியை நடத்துகின்ற இயக்கத்தில், இளமைப் பருவம் முதல், அவர் கொண்டுள்ள உறவு, அதன் காரணமாக தன்னுடைய உள்ளத்திலே பொங்கியெழுந்த கருத்துகளையெல்லாம், உணர்வுகளையெல்லாம் இங்கே வெளிப்படுத்த வேண்டுமென்று வெளிப்படுத்தியிருக்கிறார்.



பிற்பகல் 12–15

ஒன்று சொன்னார், இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில் நான் இந்த அவையிலே இருந்தேன் என்ற பெருமையை எதிர்காலம் பேசும் என்று சொன்னார். என்னுடைய தாத்தா, பாட்டன் இந்த அவையிலே இருந்தபொழுது அந்தத் தீர்மானம் நிறைவேறியது என்று எதிர்காலத்திலே பேரப் பிள்ளைகள் பேசும் என்று சொன்னார். இந்தப் பெருமையெல்லாம் இந்த அவையிலே இருந்த சிலபேருக்குத் தேவைப்படாத காரணத்தால், இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்திலே அவர்கள் இல்லையே என்ற வருத்தம்தான் எனக்கு.

இந்தத் தீர்மானம் இன்றைய குறிப்பில், வரிசைக் குறிப்பில் (Agenda) கடைசியாகத்தான் இடம் பெற்றிருந்தது. நானும், நம்முடைய பேராசிரியர் அவர்களும், நம்முடைய வீராசாமி அவர்களும் கலந்து பேசி, இந்தத் தீர்மானம் வருகிற நாளில், பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள் டில்லிக்கு தனி விமானத்திலே, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையைத் திறக்கின்ற விழாவிலே கலந்துகொள்ள செல்ல இருக்கின்றார்கள். அவர்கள் தனி விமானத்திலே செல்லுகின்ற காரணத்தால், முற்பகல் சட்டமன்ற நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள மாட்டார்கள். பிற்பகல் அவர்கள் விமானத்தில் ஏறிவிடுவார்கள். அவர்கள் கலந்து கொள்ளுகின்ற நேரம் கொஞ்சம் நேரம்தான் முற்பகலிலே இருக்கும் என்பதால், அவர்கள் இருக்கும்பொழுதே இந்தத் தீர்மானத்தை எடுத்து நிறைவேற்றினால், அவையிலே உள்ள அனைவரும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தோம் என்ற பெருமை, தீர்மானத்திற்கும் கிடைக்கும், இருந்தவர்களுக்கும் கிடைக்கும் என்று சொன்னதன்பேரில், உங்களுக்குத் தெரியும், இங்கே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் சில முன்னறிவிப்புகள், தீர்மானங்கள், இவை எல்லாம் இங்கே பேசி முடித்த பிறகு எழுந்து, இந்த வரிசையை மாற்றி இந்தத் தீர்மானத்தை முன்னால் எடுத்துக்கொள்கின்ற வழிவகைகளை, தலைவர் அவர்களே, உங்கள்மூலம் கண்டார்கள். அப்படி வசதி வாய்ப்பை அளித்திருந்தும்கூட, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில், கலந்து கொள்ளக்கூடாது என்று கருதியோ, கலந்து கொள்ளத் தேவை இல்லையென்று கருதியோ, பிரதான எதிர்க்கட்சி—அதிலே மாத்திரம் எனக்கு வருத்தம் இல்லை, அந்த எதிர்க்கட்சியினுடைய தோழமைக் கட்சியான ம.தி.மு.க. உட்பட——அவர்கள் அவையிலே இல்லாதது எனக்கு பெரும் குறை.

இதை நான் சொல்வதற்குக் காரணம் ஒரு கட்சியைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காக அல்ல. இந்த மிக முக்கியமான, பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய தீர்மானம் என்றெல்லாம்

குறிப்பிட்டார்களே, இந்தத் தீர்மானம் நிறைவேறுகிற நேரத்தில், எல்லோரும் இதற்குக்கூட ஒன்றாக இருந்தோம் என்ற நிலையை தமிழகத்திலே ஏற்படுத்த முடியவில்லையே, நாமா முல்லைப் பெரியாறில் ஒன்றாக இருக்கப்போகிறோம் என்கின்ற சந்தேகத்தை நமக்கு எழுப்புகின்றது.

இதைச் சொல்வதற்குக் காரணம், இந்தத் தீர்மானத்திலே அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதற்கு உதாரணமே இருக்கிறது. இதை, இந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் அல்ல, நம்முடைய மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், மருத்துவர் அய்யா ராமதாஸ் அவர்கள் எத்தனையோ கூட்டங்களிலே கூறியிருக்கிறார்கள். புலவர் பெருமக்கள், வழக்கறிஞர் பெருமக்கள் எத்தனையோ முறை இந்தக் கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். இன்றைக்குத்தான் இது அரசின் சார்பிலே அவையிலே ஒரு தீர்மானமாக முன்மொழியப்பட்டு, உங்களுடைய ஆதரவோடு நிறைவேற இருக்கின்றது.

இதற்கு முன்பே, 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் அமைத்திருக்கின்ற தமிழ் மன்றத்தின் சார்பாக, 2001 செப்டம்பர் திங்கள் W.P.எண் 16939/2001 என்ற ஒரு ரிட் மனு சென்னை உயர் நீதிமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டது. அந்த ரிட் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. அது என்ன ரிட் மனு என்றால், அரசு உயர் நீதிமன்றங்களில் தமிழை வழக்கு மொழியாக உருவாக்க வேண்டும் என்பது. அந்த ரிட் மனுவினுடைய தாத்பரியம், பொழிப்புரை. அதை உயர் நீதிமன்றம் உத்தரவின்மூலமாக செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள்.

*பிற்பகல் 12–20*

அந்த மனுவை, ரிட் மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டு, தள்ளுபடி செய்தபொழுது என்ன காரணம் சொன்னது என்றால், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 348(2)-ன்கீழ் ஆணை பிறப்பிக்கக்கூடிய அதிகாரம் ஆளுநருக்கு மாத்திரம்தான் உண்டு; எனவே, அவர் அந்த ஆணை பிறப்பிக்கவேண்டுமேதவிர, இங்கே நீதிமன்றத்திலே வந்து வாதாடிப் பயனில்லை என்று தள்ளிவிட்டார்கள்.

நீங்கள் தாத்பரியத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அதற்கு என்ன அர்த்தம். நீதிமன்றத்திலே வழக்காடினால், எங்களால் ஒன்றும் உத்தரவிட முடியாது. ஆளுநர்தான் அதற்கு உத்தரவிட வேண்டும். ஆளுநர் உத்தரவு என்றால், அரசாங்கத்தினுடைய உத்தரவு. அரசாங்கத்திலே ஒரு



தீர்மானம் நிறைவேற்றிக் கொண்டுபோனால், ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளித்தால், பின்னர் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்து, பிறகு நீதிமன்றத்திலே தமிழ் வழக்கு மொழியாகலாம் என்று சொல்லி, உயர் நீதிமன்றம் 2001–ல் வழக்கறிஞர்கள் கொடுத்த அந்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

அப்போது நாம் ஆட்சியிலே இருந்திருந்தால், அப்படியா, உயர் நீதிமன்றமே வழிகாட்டியிருக்கிறது; அவர்களால் முடியாதாம், ஆளுநர்தான் செய்யவேண்டுமாம் என்று உடனே தீர்மானத்தை நிறைவேற்றி, ஆளுநரிடத்திலே கொண்டுபோய்க் கொடுத்து நிறைவேற்றியிருப்போம். அப்போதே தமிழ் உயர் நீதிமன்ற மொழியாக ஆகியிருக்கும். ஆனால், முன்பிருந்த அரசு இதைச் செய்யவில்லை. இதுதானா அவர்களுக்கு வேலை. இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிற நேரத்திலேகூட, அவர்களால் இருந்து நிறைவேற்றித்தர, ஒப்புதல் அளிக்க, முடியவில்லையென்கிறபோது, நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன்.

தமிழர்கள் எல்லோரும் ஒருசேர அமர்ந்து, இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தால் இன்னும் பெருமைதான். அந்தப் பெருமையை அளிக்க வேண்டாமென்றோ அல்லது விவகாரம் செய்ய வேண்டுமென்றோ, தீர்மானம் நிறைவேறுகிற நாளில் ஒரு பெரிய கலவரத்தைச் செய்ய வேண்டுமென்றோ, திட்டமிட்டு வந்தவர்களை நாம் எப்படித் திருத்த முடியும்? எனவே, எத்தனை புயல் வீசினாலும், எத்தனை சூறாவளி வீசினாலும், அதையெல்லாம் பொருட்படுத்தாமல், தமிழ் நின்று நிலைக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வாழும் என்பதற்கு அடையாளமாக, இன்றையதினம் இந்தத் தீர்மானத்தை நான் உங்கள் முன்னால் மீண்டும் ஒரு முறை படித்து, முன்மொழிந்து நிறைவேற்ற விரும்புகின்றேன்:

"சென்னை உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்திலும் இதுவரையில் ஆங்கில மொழியே வழக்கு மொழியாக இருந்து வருகிறது. இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 348 (1)–வது பிரிவின்படி உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் ஆங்கில மொழியிலேயே அனைத்து நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. எனினும், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348, உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7–ன்படி, உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலைப் பெற்று, மாநில ஆட்சி மொழியிலேயே நடத்த மாநில அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் தமிழிலேயே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், அரசமைப்புச் சட்டப் பிரிவு 348 உட்பிரிவு (2) உடன் இணைந்த 1963 ஆம் ஆண்டு ஆட்சி மொழிச் சட்டப் பிரிவு 7-ன்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புகள், தீர்ப்பாணைகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் நமது மாநில ஆட்சி மொழியாகிய தமிழை அறிமுகப்படுத்திட தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய இம்முடிவினைச் செயல்படுத்த விரைவில் ஒப்புதல் வழங்க வேண்டுமென மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வதென இந்தச் சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக இத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-25

இதிலே நம்முடைய நண்பர் திரு. கோவிந்தசாமி அவர்களும், திரு. குணசேகரன் அவர்களும் ஒரு ஐயப்பாட்டை எடுத்துச் சொன்னார்கள். சென்னை உயர் நீதிமன்றத்தினுடைய மாண்புமிகு தலைமை நீதிபதி அவர்கள் எனக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கின்றார்கள். அந்தக் கடிதம் வருவதற்கு முன்பு அதை பத்திரிகைகளிலும் சொல்லியிருக்கிறார்கள், ஏடுகளிலும் அவர் பேசியது வெளிவந்திருக்கிறது. இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற விருப்பத்தை அவர் தெரிவித்துவிட்டு, அதற்கு என்னென்ன செய்ய வேண்டுமென்ற வழிமுறைகளையும் அவர்கள் சொல்லி இருக்கின்றார்கள்.

இதை ஆதரிப்பது மாத்திரமல்ல, நமக்கு ஆக்கபூர்வமான உதவிகளையும் செய்வதற்கு ஒப்பாகும் என்ற முறையிலே நான் அவருக்கு நன்றி தெரிவித்திருக்கின்றேன். அவர்கள் குறிப்பிடுவது நீதிமன்றத் தீர்ப்பு மற்றும் நடவடிக்கை குறித்து தமிழில் மொழியாக்கம் செய்வதற்கு திறமைவாய்ந்த மொழிபெயர்ப்பாளர்கள், அதாவது தமிழிலேயிருந்து ஆங்கிலத்திலும், ஆங்கிலத்திலிருந்து தமிழிலும் மொழிபெயர்ப்பதற்கு புலமை வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு, தீர்ப்பு வழங்கும்போது அதை உடனடியாக குறிப்பெடுக்க தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் நன்றாக பயிற்சி பெற்ற சுருக்கெழுத்தாளர்கள் அவசியம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். தற்போது உயர் நீதிமன்றத்தை நவீனப்படுத்துவதன்கீழ் கணினி பெருமளவில் பயன்படுத்தப்படுவதால், தமிழில் தீர்ப்புகளைச் செயல்படுத்த, அதற்கான மென்பொருள் வசதி ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்.





தீர்ப்பு திரட்டு என்ற தமிழ் சட்ட இதழில் குறைவான அளவே சட்ட மொழிபெயர்ப்புகள் வெளியாவதால், முழுமையான அளவில் மொழியாக்கம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், இந்த இதழினை அதிக அளவில், அனைத்துத் தரப்பினருக்கும் பயன்படும் வகையில் செயல்படுத்த கூடுதல் பணியாளர்கள் தேவை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ் சட்டப் புத்தகங்கள் மற்றும் குறிப்புகள் வாங்கி வைத்திடும் வகையில் தனியாக நூலகம் ஒன்றை ஏற்படுத்தவும். அதற்கான இட வசதி செய்ய வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கின்றார். அந்த நூலகத்திற்கு பெருமளவில் சட்ட மொழிபெயர்ப்புக்கு சொல்லகராதிகள் வாங்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். நான் அவருக்கு எழுதிய பதிலில் தங்களுடைய யோசனைகள் அனைத்தும் இந்த அரசால் பின்பற்றப்படும், உடனடியாக நிறைவேற்றப்படும் என்று தலைமை நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இந்த வசதி வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு, நீதிமன்ற வழக்கு மொழியாக தமிழ் ஒளிவிட ஒல்லும் வகையெல்லாம் இந்த அரசு உழைத்திடும், பாடுபடும், பணியாற்றும். உங்களுடைய வாழ்த்துகளோடு என்று குறிப்பிட்டு, இந்த அளவில் அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, உயர் நீதிமன்ற வழக்கு மொழியாகத் தமிழை அறிமுகப்படுத்திய தமிழக முதல்வர் அவர்களுக்குப் பேரவை உறுப்பினர்கள் சார்பாகவும், என் சார்பாகவும் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2006 டிசம்பர் 6

## 8. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 2006–2007, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதி நிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2006–2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கின்றேன். துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை● இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூபாய் 1,157.95 கோடி அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூபாய் 495.15 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 662.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

பிற்பகல் 12–30

2. 2006 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 22 ஆம் நாளன்று 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு–செலவுத் திட்டம் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று "புதுப் பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த பின்னர், தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக இவ்வரசு மேற்கொண்ட சில புதிய செலவுப் பொறுப்புகளுக்காக, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறும் பொருட்டும் இவை தாக்கல் செய்யப்படுகின்றன. மாநில வரி வருவாயில் ஏற்படும் உயர் வளர்ச்சி மற்றும் வருவாய்க் கணக்கில் செலவினங்களை சிறந்த முறையில் நிருவாகம் செய்தல் ஆகியவற்றின்மூலம் இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்ட கூடுதல் செலவு ஈடு செய்யப்படும்.

---

● 213 முதல் 215 வரையிலான பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளன.



2006 டிசம்பர் 6] [பேராசிரியர் க. அன்பழகன்]

3. மீன்பிடித் தொழில் அதிகம் இல்லாத மாதங்களில் 1,02,993 மீனவ மகளிருக்கு உதவித் தொகை வழங்குவதற்காக அரசு ரூபாய் 12.36 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூபாய் 12.36 கோடி வழங்கப்பட்டுள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 7–கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம்' என்பதன்கீழ் இத்தொகை துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ்த் திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டதால் உள்ளாட்சியமைப்புகளுக்கு ஏற்படும் இழப்பை ஈடுகட்ட அரசு முடிவு செய்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 11–வணிகவரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள்' என்பதன்கீழ் ரூபாய் 30.00 கோடி துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. ஏழைக் குடும்பங்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புகள் மற்றும் அடுப்புகள் வழங்குவதற்காக அரசு ரூபாய் 60.00 கோடி அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 60.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

6. விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கடனாக ரூ.200.00 கோடி வழங்குவதற்கு அரசு அனுமதித்துள்ளது. 'மானியக் கோரிக்கை எண் 13–கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 200.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பங்கு மூலதன உதவி வழங்குவதற்காக ரூபாய் 150.00 கோடி 'மானியக் கோரிக்கை எண் 14–எரிசக்தித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. கரும்புக்கான உயர்த்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூபாய் 89.02 கோடி நிதி உதவி வழங்குவதற்காக

[பேராசிரியர் க. அன்பழகன்] [2006 டிசம்பர் 6

'மானியக் கோரிக்கை எண் 27-தொழில் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. அடிப்படை வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு தன்விருப்ப மானியமாக அரசு ரூபாய் 56.51 கோடி அனுமதியளித்துள்ளது. மேலும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதிக்கான ஒதுக்கீட்டை ரூபாய் 1.00 கோடியிலிருந்து ரூபாய் 1.20 கோடியாக அரசு உயர்த்தியுள்ளது. 'கோரிக்கை எண் 42-ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் ரூபாய் 103.51 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

10. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பெண்களின் திருமண நிதி உதவிக்கான கூடுதல் ஒதுக்கீடாக, 'மானியக் கோரிக்கை எண் 45-சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை' என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் கூடுதலாக ரூபாய் 10.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

11. மாணவர்களுக்கான பயண அனுமதிக்குரிய பேருந்துக் கட்டணத்தை மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு அளிப்பதற்காக 'மானியக் கோரிக்கை எண் 48-போக்குவரத்துத் துறை' என்பதன்கீழ் ரூபாய் 100.00 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

12. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.



06 டிசம்பர் 6]

(210ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

**2006-2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

(ரூபாய் ஆயிரத்தில்)

| | கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|---|
| 1 | மாநிலச் சட்டமன்றம் | 48,00 | .. | .. |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 56,38 | .. | .. |
| 3 | நீதி நிருவாகம் | 20,00 | .. | .. |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 52,51 | 1 | .. |
| 5 | வேளாண்மைத் துறை | 78,39 | 1 | 2,55,20 |
| 6 | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு | 85,91 | .. | .. |
| 7 | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை-மீன்வளம் | 13,23,99 | 2,10,00 | .. |
| 8 | கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை-பால் வளம் | 67,62 | .. | .. |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 9,49,41 | .. | .. |
| 10 | வணிக வரி மற்றும் பதிவுத் துறை-வணிக வரிகள் | 30,13,25 | .. | .. |
| 11 | வணிக வரி மற்றும் பதிவுத் துறை-முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 1 | .. | .. |
| 12 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-கூட்டுறவு | 10,81,90 | .. | .. |
| 13 | கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை-உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 60,00,03 | .. | 200,00,00 |

[2006 டிசம்பர் 6

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 14 எரிசக்தித் துறை | .. | 150,00,00 | .. |
| 15 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 2,07,63 | .. | .. |
| 17 கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை கைத்தறி மற்றும் துணி நூல் | .. | .. | 16,48 |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,23,85 | .. | .. |
| 20 உயர் கல்வித் துறை | 9,53,35 | .. | .. |
| 21 நெடுஞ்சாலைகள் துறை | 6,22,93 | 7 | .. |
| 22 உள் துறை-காவல் | 6,50,65 | .. | .. |
| 23 உள் துறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 2 | 98,82 | .. |
| 24 உள் துறை-சிறைச்சாலைகள் | 1,02,66 | 10,00,00 | .. |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 51,69,64 | 23,90,00 | .. |
| 27 தொழில் துறை | .. | .. | 89,12,79 |
| 28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை செய்தி மற்றும் விளம்பரம் | 65,00 | .. | .. |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை சுற்றுலா | 15,00 | .. | .. |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 19,36 | .. | .. |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 5,89,73 | 1,60,57 | .. |
| 33 சட்டத் துறை | 24,00 | .. | .. |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 8 | 55,34,20 | 68,84,50 |



2006 டிசம்பர் 6]

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
|---|---|---|---|
| | வருவாய் | மூலதனம் | கடன் |
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 48,49 | .. | .. |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 6,03,91 | .. | .. |
| 38 பொதுத் துறை | 8,52,64 | 2,00,00 | .. |
| 39 பொதுப் பணித் துறை-கட்டடங்கள் | 1,03,00 | 2,63,09 | .. |
| 40 பொதுப் பணித் துறை-பாசனம் | 68,87 | 10,56 | .. |
| 41 வருவாய்த் துறை | 9,85,13 | .. | .. |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 121,60,89 | 47,00,00 | .. |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 1,28,88 | .. | .. |
| 44 சிறு தொழில்கள் துறை | 1 | .. | .. |
| 45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 21,37,39 | 1,59,10 | .. |
| 46 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 1,69,62 | .. | .. |
| 47 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 48,99 | .. | .. |
| 48 போக்குவரத்துத் துறை | 101,00,00 | .. | .. |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,18,51 | .. | .. |
| **பெருமொத்தம்** | **493,47,63** | **297,26,43** | **360,68,97** |

பிற்பகல் 12–35

## 9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997–1998, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997–1998 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1997–1998 ஆம் ஆண்டில், சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அந்த ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. இத்தகைய மிகைச் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1997–1998 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை பொதுக் கணக்குக் குழு ஆய்வு செய்ததில், சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு, 1997–1998 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மானியத்தின்கீழும் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்திற்கு மேல் செய்யப்பட்ட செலவுகளுக்கு ஒப்புதல் பெறுவதற்காக, சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கைகள் வைக்கப்படலாம் என்று பொதுக் கணக்குக் குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறே, 1997–1998 ஆம் ஆண்டு தொடர்பான ரூ.299.42 கோடி மிகைச் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கான மானியக் கோரிக்கைகள் அவையில் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. 1997–1998 ஆம் ஆண்டில் "மக்கள் நல்வாழ்வு", "வேளாண்மை" மற்றும் "சாலைகளும் பாலங்களும்" ஆகிய இனங்களின்கீழ் பெருமளவு மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது.

4. மத்திய அரசிடமிருந்து பெறப்படும் பண்டங்களின் விலை விவரம் நிதியாண்டு முடிந்த பிறகே கிடைக்கப்பெற்றதாலும், ஊதிய நிர்ணய நிலுவைத் தொகை வழங்கப்பட்டதாலும், மேலும் சில காலிப் பணியிடங்களை நிரப்பியதாலும் "மக்கள் நல்வாழ்வு" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.





5. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குரிய மின் கட்டண இழப்பீடுகளின்கீழ் அனாமத்து சீட்டுகளின் அடிப்படையில், மாநிலக் கணக்குத் தலைவர் செய்த மாற்றுப் பதிவுகள் காரணமாகவும், செலவினங்களைத் தவறாக வகைப்படுத்திய காரணத்தினாலும் "வேளாண்மை" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. வெள்ள நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாலும், முந்தைய ஆண்டுகள் தொடர்பான நிறுத்தி வைக்கப்பட்ட தொகைகளை அனாமத்துக் கணக்குத் தலைப்பிலிருந்து மாநிலக் கணக்கிற்கு மாற்றியதாலும், ஊதியக் குழு நிலுவைத் தொகைகளை வழங்கியதாலும் "சாலைகளும் பாலங்களும்" என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

7. 1997–1998 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான இம்மானியக் கோரிக்கைகளுக்கு ஒப்புதல் அளிக்குமாறு இப்பேரவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

### 1997–1998 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

| | கோரிக்கை | ரூபாய் |
|---|---|---|
| | **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 19 | மக்கள் நல்வாழ்வு | 35,91,85,359 |
| 20 | வேளாண்மை | 84,06,95,479 |
| 23 | கூட்டுறவு | 21,33,789 |
| 26 | கதர்–கிராமத் தொழில்கள் | 1,236 |
| 35 | பாசனம் | 124,48,55,226 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 45,67,32,760 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 8,54,85,430 |
| | **மொத்தம் – அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **298,90,89,279** |
| | **பெரு மொத்தம்** | **298,90,89,279** |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006-2007, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006–2007 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the demands for further grants for the year 2006–2007."

## 10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2006–2007, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006–2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006–2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 6–12–2006 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 2006–2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.





### நிறைவேற்றப்பெற்ற 2006–2007 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 1 மாநிலச் சட்டமன்றம் | 48,00 | .. | .. |
| 2 ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 56,38 | .. | .. |
| 3 நீதி நிருவாகம் | 20,00 | .. | .. |
| 4 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 52,51 | 1 | .. |
| 5 வேளாண்மைத் துறை | 78,39 | 1 | 2,55,20 |
| 6 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு | 85,91 | .. | .. |
| 7 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–மீன்வளம் | 13,23,99 | 2,10,00 | .. |
| 8 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை–பால் வளம் | 67,62 | .. | .. |
| 9 பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 9,49,41 | .. | .. |
| 10 வணிக வரி மற்றும் பதிவுத் துறை–வணிக வரிகள் | 30,13,25 | .. | .. |
| 11 வணிக வரி மற்றும் பதிவுத் துறை–முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 1 | .. | .. |
| 12 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–கூட்டுறவு | 10,81,90 | .. | .. |
| 13 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 60,00,03 | .. | 200,00,00 |
| 14 எரிசக்தித் துறை | .. | 150,00,00 | .. |

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 15 சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 2,07,63 | .. | .. |
| 17 கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் | .. | .. | 16,48 |
| 19 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 6,23,85 | .. | .. |
| 20 உயர் கல்வித் துறை | 9,53,35 | .. | .. |
| 21 நெடுஞ்சாலைகள் துறை | 6,22,93 | 7 | .. |
| 22 உள் துறை-காவல் | 6,50,65 | .. | .. |
| 23 உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 2 | 98,82 | .. |
| 24 உள் துறை-சிறைச்சாலைகள் | 1,02,66 | 10,00,00 | .. |
| 26 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 51,69,64 | 23,90,00 | .. |
| 27 தொழில் துறை | .. | .. | 89,12,79 |
| 28 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 65,00 | .. | .. |
| 29 செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 15,00 | .. | .. |
| 31 தகவல் தொழில்நுட்பவியல் துறை | 19,36 | .. | .. |
| 32 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | 5,89,73 | 1,60,57 | .. |
| 33 சட்டத் துறை | 24,00 | .. | .. |
| 34 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 8 | 55,34,20 | 68,84,50 |



(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | வருவாய் | மூலதனம் | கடன் |
|---|---|---|---|
| 35 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 48,49 | .. | .. |
| 36 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | 6,03,91 | .. | .. |
| 38 பொதுத் துறை | 8,52,64 | 2,00,00 | .. |
| 39 பொதுப் பணித் துறை-கட்டடங்கள் | 1,03,00 | 2,63,09 | .. |
| 40 பொதுப் பணித் துறை-பாசனம் | 68,87 | 10,56 | .. |
| 41 வருவாய்த் துறை | 9,85,13 | .. | .. |
| 42 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | 121,60,89 | 47,00,00 | .. |
| 43 பள்ளிக் கல்வித் துறை | 1,28,88 | .. | .. |
| 44 சிறு தொழில்கள் துறை | 1 | .. | .. |
| 45 சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | 21,37,39 | 1,59,10 | .. |
| 46 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி-பண்பாடு | 1,69,62 | .. | .. |
| 47 தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 48,99 | .. | .. |
| 48 போக்குவரத்துத் துறை | 101,00,00 | .. | .. |
| 49 இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 1,18,51 | .. | .. |
| **பெருமொத்தம்** | **493,47,63** | **297,26,43** | **360,68,97** |

பிற்பகல் 12–40

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (உ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க.

(ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997-1998, பேரவையில் முன்மொழிவது குறித்து (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1997-1998 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

“In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1997–1998 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year.”

## 11. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1997–1998, வாக்கெடுப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1997–98 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“1997–1998 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 6–12–2006 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1997–1998 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

**நிறைவேற்றப்பெற்ற 1997–1998 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்**

| | கோரிக்கை | ரூபாய் |
|---|---|---|
| | **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 19 | மக்கள் நல்வாழ்வு | 35,91,85,359 |
| 20 | வேளாண்மை | 84,06,95,479 |
| 23 | கூட்டுறவு | 21,33,789 |
| 26 | கதர்–கிராமத் தொழில்கள் | 1,236 |
| 35 | பாசனம் | 124,48,55,226 |
| 38 | சாலைகளும் பாலங்களும் | 45,67,32,760 |
| 45 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 8,54,85,430 |
| | **மொத்தம் – அ. வருவாய்க் கணக்கில் செலவு** | **298,90,89,279** |
| | **பெரு மொத்தம்** | **298,90,89,279** |

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2006 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.



## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 3. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2006 டிசம்பர் 6

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2006); 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2006); 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2006) மற்றும் 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2006) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 12-45

# 12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

## (அ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2006), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2006 டிசம்பர் 6] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2006) © ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் எனறு கருதுகிறேன.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

© 6-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2006), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2006)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், சொல்லுங்கள்.

@ 6-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்கல்வி படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு இந்தப் பொது நுழைவுத் தேர்வினை நீக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பு மக்களிடமிருந்து வந்த கோரிக்கைகளை ஏற்று, பல்வேறு கட்சிகள் விடுத்திருக்கிற கோரிக்கைகளை எல்லாம் ஏற்று, தமிழக அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக காங்கிரஸ் கட்சி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் ஆளுநர் உரையிலேயே இந்தக் கருத்தை வலியுறுத்தி இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அரசால் அறிவிக்கப்பட்டது.

தமிழக அரசு ஏற்கெனவே இப்படிப்பட்ட ஒரு முயற்சியை எடுத்து அந்த வழக்கு உயர் நீதிமன்றத்திற்குச் சென்று, பிறகு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்று அங்கே நாம் இயற்றிய இந்தச் சட்டம் செல்லாது என்று ஏற்கெனவே அவர்கள் ஒரு தீர்ப்பினை வழங்கி இருக்கிறார்கள். Education, கல்வி என்பது மாநில அரசால் நிர்வகிக்கப்படுகிற State List–லும் இருக்கிறது—அதாவது இங்கேயும் இருக்கிறது—அதேபோல, மத்திய அரசு அதற்கான அனுமதியை கொடுக்கலாம் என்கிறவகையில் Concurrent List–லும் இருந்து கொண்டிருக்கிறது. இரண்டு அரசுகளும் இங்கே கல்வி நிறுவனங்களை நடத்துவதற்கு அனுமதிகளை வழங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே பல்வேறுபட்ட குழுமங்கள் இந்த இடத்திலே பல்வேறு வகையான படிப்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு State Board என்று ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல, மத்திய அரசு CBSE என்கிற ஒரு சிஸ்டத்தில் அவர்களும் அனுமதி அளித்து, அப்படிப்பட்ட பள்ளிகளும் நம்முடைய தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருவேறுபட்ட கல்வி, இருவகையான படிப்புகள் இருக்குமேயானால் அதாவது State Board and CBSE போன்ற இரண்டு வகையான சிஸ்டம், இரண்டு வகையான படிப்புகள் தமிழகத்திலே நிலவுமேயானால் நிச்சயமாக இப்படி பொதுத் தேர்வு இருந்தால்தான் அவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும் என்கிற ஒரு கருத்தினைச் சொல்லித்தான் உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பினை அளித்து, பிறகு அந்தச் சட்டம் செயல்படாமல் போய்விட்டது.

பிற்பகல் 12–50

இப்பொழுது இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, இங்கே அண்ணா பல்கலைக்கழகத்தினுடைய முன்னாள் துணை வேந்தர் திரு. அனந்தகிருஷ்ணன் அவர்களை வைத்து ஒரு ஆய்வினை நடத்தி பல்வேறு கூறுகளையும் ஆராய்ந்து நம்முடைய அரசு இப்பொழுது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

[திரு. சி. ஞானசேகரன்] [2006 டிசம்பர் 6

பொதுவாக State Board-லே 100 மார்க் வாங்கியவர்கள் மதிப்பெண்ணை 100 என்று வைத்துக்கொண்டால், C.B.S.E.-யிலே வாங்குகிறவர்கள் 90 மார்க்தான் அங்கே அதிகபட்சமான மார்க்கே வாங்கியிருந்தால் அது நூற்றுக்கு இணையானது. அது சரிசமப்படும், equalisation என்று வைத்து அப்படியொரு முறையை கடைப்பிடித்து இந்தப் பொதுத் தேர்வை நீக்கலாம் என்ற கருத்தை இந்த அரசு இந்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறது. ஆனால், நம்முடைய சட்டமன்ற வரலாற்றைப் பார்த்தோம் என்று சொன்னால், சட்டம் இயற்றுவதற்குள்ள அதிகாரம் நமக்குத்தான் இருக்கிறது. நாம்தான் அந்த வகையில் supreme என்று நாம் சட்டத்தை இயற்றுகிறோம். ஆனால், உயர் நீதிமன்றம் திடீரென்று இந்த ஒவ்வொரு வழக்கும்—அதாவது C.M.D.A. சட்டம்—ஏற்கெனவே, இதை முன்மொழிந்திருக்கிற நம்முடைய கல்வி அமைச்சர் முன்பு, உங்கள் ஆட்சியிலே, 1996 ஆட்சியிலே பார்த்தோம் என்று சொன்னால், கட்டடங்களையெல்லாம் வரைமுறைப்படுத்தக்கூடிய வகையில், C.M.D.A.-வின் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கெல்லாம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். பிறகு, அந்தச் சட்டம் உச்ச நீதிமன்றம் சென்று, அங்கு என்ன சொல்கிறார்கள், நமக்குச் சட்டம் இயற்றுகிற அதிகாரம் இருந்து கட்டணத்தையெல்லாம் வசூல் செய்துவிட்டு, கட்டடங்களை வரைமுறை செய்வதற்கான நடவடிக்கையெல்லாம் எடுத்த பிறகும்கூட, வாங்கிய அந்தப் பணத்தையெல்லாம் deposit-ல் போடுங்கள், கட்டடத்தை இடியுங்கள் என்று இப்போது உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து ஒரு குழப்பத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறது.

அதே போல, இங்கேயும் நீங்கள் இப்படி equalisation என்று கொண்டு வருகிறீர்கள். ஏற்கெனவே, உச்ச நீதிமன்றம் இருவேறுபட்ட படிப்புகள் இருக்குமேயானால், நிச்சயமாக இதை நடைமுறைப்படுத்த முடியாது என்று சொல்லிவிட்ட பிறகு இப்போது நாம் ஒரு equalisation என்ற முறையைக் கொண்டு வந்து, இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோதும் இப்படிப்பட்ட பிரச்சினை வருமோ என்கிற அச்சம் இருக்கிறது. ஏனென்று சொன்னால், நானேகூட இந்தச் சட்டம் முன்பு வருகிறபோது ஒரு கருத்தைச் சொன்னேன். அதாவது, எத்தனை வகையான படிப்புகள் தமிழகத்திலே இருக்கிறதோ அவற்றை, அந்தந்தப் படிப்புகளில் எவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் கணக்கிட்டு நீங்கள் State Board மாணவர்கள் அதிகமாக இருந்தால் அவர்களுக்கு இவ்வளவு percentage, பொதுத் தேர்வு இல்லாமல், அதாவது, பிளஸ் 2 மார்க்கை வைத்துக்கொண்டே அவர்கள் அப்படியே அனுமதிக்கப்படலாம் என்று வைத்துக்கொள்ளலாம்.



2006 டிசம்பர் 6] [திரு. சி. ஞானசேகரன்]

அதேபோல, C.B.S.E.-க்கு எவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கென்று ஒரு quota-வை நீங்கள் ஒதுக்கிவிட்டு அப்படிப்பட்ட முறையை அமல்படுத்தினால் வேண்டுமானால் இப்படிப்பட்ட சிக்கல் இல்லாமல் தவிர்க்கலாம். ஏனென்றால், equalisation mark என்று வருகிறபோது எப்படிப்பட்ட கோணத்தில் அது எப்படிப் பரிணமிக்கும் என்று நமக்குத் தெரியவில்லை. ஆகவே, C.B.S.E.-க்கு என்றும், அதேபோல் வேறு படிப்புகள் இருக்குமானால்கூட அதற்கு இத்தனை per cent quota என்றும் நாம் அதற்கு இடத்தைத் தனியாக ஒதுக்கிவிட்டு மார்க்கினுடைய அடிப்படையிலே அப்படியே அவர்களுக்கு அனுமதி அளிக்கக்கூடிய வாய்ப்பினை உருவாக்கினால் சாலப்பொருத்தமான ஒன்றாக இருக்குமென்பது எங்களுடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையிலே நீங்கள் செயல்படுவீர்களானால் நல்லது. ஏனென்றால், சென்ற முறை இப்படித்தான் ஒரு சட்டத்தைக் கொண்டு வருகிறபோது மாணவர்கள் ரொம்ப திருப்தியாக—கிராமப்புற மாணவர்கள்—நமக்குத் தேர்வே இல்லையென்று மகிழ்ச்சியோடு இருந்தார்கள். பிறகு, திடீரென்று பார்த்தால் தேர்வு எழுத வைத்துவிட்டோம். இப்போதும் அதே மாதிரி மாணவர்கள் கடைசியாக வருடத்தின் fag end-க்கு வந்துவிட்டார்கள். டிசம்பர் மாதம் வந்துவிட்டது இப்போது. மாணவர்கள் எல்லாம் தயார் பண்ணிவிட்டார்கள். நாம் இப்போது தேர்வே இல்லையென்று ஒரு சட்டத்தை இயற்றுகிறோம். நாளைக்கு நீதிமன்றம் சென்ற பிறகு, அவர்கள் சட்டத்தைத் திரும்ப strike down பண்ணி 'நீங்கள் மீண்டும் பொதுத் தேர்வு வைக்க வேண்டும்' என்று சொல்லிவிட்டால், பாவம் மாணவர்கள் பாடு ரொம்பச் சிரமமாகிப் போய்விடும். இனி பொதுத் தேர்வு இல்லையென்கிற ஒரு நிலையை நாம் உருவாக்கினாலும் நீதிமன்றம் நாம் இயற்றும் இந்தச் சட்டத்திற்கு எதிராகத் தீர்ப்பு அளிக்கக்கூடும். ஏனென்றால் நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் நமக்கு இல்லை. கேட்டால் அவர்கள், அவர்கள் supreme என்கிறார்கள். நாம், நாம்தான் supreme என்கிறோம். ஆனால், மாணவர்கள் இந்தச் சட்டத்தை இயற்றிய பிறகு மீண்டும்—மாணவர்கள் நிறைய பேர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சார், உண்மையிலே நுழைவுத் தேர்வு இருக்குமா இருக்காதா, இருக்குமா இருக்காதா என்று. எங்களால் பதில் சொல்வதற்கு முடியவில்லை.

சட்டம் கொண்டு வருகிறோம்; நம்முடைய கோர்ட் நம்மை விட்டு வைத்தால் ஆயிற்று. Court strike down பண்ணினால் திரும்பவும் பரீட்சை எழுதித்தான் ஆக வேண்டும். அதற்கு என்ன பண்ண முடியும் என்று தெரியவில்லை என்கிற நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு

ஒரு நல்ல முடிவினைக் காண வேண்டும். ஏனென்று சொன்னால், இதை இப்படி எடுத்துக்கொண்டாலும் சரி அல்லது C.B.S.E. மாணவர்கள் எவ்வளவு என்று கணக்கிட்டு அவர்களுக்கு ஒரு quota–வை அரசு கொடுத்துவிட்டுக்கூட அவர்கள் யாரும் நீதிமன்றம் போகாதபடி செய்யலாம். ஏனென்றால், தொழிற்கல்வியிலே நீதிமன்றத்திற்குப் போகாதபடி நம்முடைய அமைச்சர் பெருமுயற்சி எடுத்து 65 சதவிகிதம் இடங்கள் அரசு quota-விற்கு கொடுத்துவிட வேண்டும், மற்றவற்றை நிர்வாகம் எடுத்துக்கொள்ளலாம் என்றுகூடச் சொன்னார்கள். அதே மாதிரி, இதிலும் மாணவர்களை அழைத்துப் பேசிக்கூட எப்படியாவது நீதிமன்றத்திற்கு அவர்கள் போகாதவண்ணம், அவர்களுக்குக் குறை ஏற்படாத வகையில் ஏதாவது முயற்சியினை நாம் எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இங்கே 8–வது Section–லே, அதேபோல 9–லே சில வழிமுறைகள் உள்ளன. அதாவது பிரிவு 8–லே "நிதி உதவி பெறாத தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக் குறித்த ஏதேனும் குற்றச்சாட்டுகள், உரிய அதிகார அமைப்பினால் விசாரணை செய்யப்பட வேண்டும். அவ்வமைப்பு, குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரம் மற்றும் தொடர்புடைய உதவிபெறாத தொழிற்கல்வி நிறுவன மேலாண்மையின் விளக்கம் ஆகியவற்றை பெற்று, பொருத்தமான பரிந்துரைகளுடன் அரசுக்கு மேலனுப்ப வேண்டும்." என்று உள்ளது. பிரிவு 9(1)-லே "இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளை மீறுகிற எவரொருவரும், குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஐந்து இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்." என்று இங்கே சேர்த்திருக்கிறீர்கள். இதிலே இந்தச் சட்டத்தில். பொதுவாக இது penal provision.

நீங்கள் ஏதாவது ஒரு சட்டத்தில் கொண்டு போய்தான் இதனைக் குறிப்பிட முடியும். அரசாங்கம் வேண்டுமானால், அபராதம் போட்டு penalty வசூல் பண்ணலாம். ஏனென்று சொன்னால், ஒரு medical seat 25 இலட்சம் ரூபாய்க்குப் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் ஐந்து இலட்சம் ரூபாய் அபராதம் போட்டு என்ன பண்ணப் போகிறீர்கள், ஒன்றும் புரியவில்லை எங்களுக்கு. ஏனென்று சொன்னால், ரூ.25 இலட்சம் இல்லாமல் இன்றைக்கு ஒரு Medical Seat, Private college-ல் வாங்கமுடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. கடைசியாக நாம் அரசாங்கத்திலே ஏதாவது கேட்டோம் என்று சொன்னால், எங்களுக்கு புகார் வரவில்லை; புகார் வந்தால் நாங்கள் விசாரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதாவது Prevention of Capitation Fee Act என்றே ஒன்று இருக்கிறது. ஆனால், Capitation Fee எல்லோரும் வாங்கிக்கொண்டுதான்





இருக்கிறார்கள். ஆனால், இதிலே ஏதாவது புகார் வந்தால் நீங்கள் ரூ. 5 இலட்சம் அபராதமாக வசூலிப்போம் என்று சொல்வது பொருத்தமான ஒன்றாகத் தெரியவில்லை. அதற்கும் நாம் தனியாக Act கொண்டு வந்துகூட அல்லது இந்த Act–லே, யார் தவறு செய்கிறார்களோ அவர்களுக்கு நீதிமன்றத்தின்மூலமாக ஒரு தண்டனை என்றெல்லாம் வைத்தால்தான், வரைமுறையெல்லாம் மீறாமல் இருக்கக்கூடிய ஒரு சூழல் இருக்கும். அதையும் பரிசீலனை செய்யவேண்டும்.

பிற்பகல் 12–55

அதேபோல், Capitation fee, Engineering Colleges பொறுத்தவரையில். இப்போது பார்த்தால் நிறைய சீட்டுகள் காலியாக இருக்கின்றன. ஏனென்றால், 240 பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் திறந்திருக்கிறார்கள். 80,000 பேருக்கு மேல் ஓர் ஆண்டிற்கு என்று மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். நிறைய இடங்கள் காலியாக இருக்கிறபோது, இந்தப் பொதுத் தேர்வு பிரச்சினை அவ்வளவாக வருவதில்லை. ஆனால், மெடிக்கல் காலேஜ் என்று பார்த்தால், அது ரொம்பக் குறைவு தமிழ்நாட்டில். இப்போது தமிழ்நாட்டு மக்கள் ஆந்திராவிலேயும், கர்நாடகத்திலேயும் நிறைய மெடிக்கல் காலேஜ்கள் இருப்பதால் அங்கே கொண்டுபோய் பணத்தைக் கொட்டுகிறார்கள். அங்கே கொட்டிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வருகிறது. போட்டா போட்டி அதிகமாக வருகிற காரணமே மருத்துவக் கல்லூரிகள் இங்கே குறைவாக இருப்பதுதான். மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரியை இங்கே துவங்கப் போகிறோம் என்று ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. அந்த வகையிலே ஒன்று தனியாரானாலும் சரி அல்லது அரசேகூட மருத்துவக் கல்லூரியை நாம் அதிகப்படுத்துவோம் என்று சொன்னால், இப்படிப்பட்ட போட்டிக்கு இடமே இல்லாமல் போய்விடும்.

இரண்டாவது, பொறியியல் கல்லூரிக்கும், மருத்துவக் கல்லூரிக்கும், விவசாயக் கல்லூரிக்கும் மட்டுமேதான் இதிலே வழிவகை கண்டிருக்கிறார்களேயொழிய, இந்த அரசு சட்டக் கல்லூரி என்பதை ஏனோ விட்டுவிட்டது. அதுவும் தொழிற்கல்விதான். சட்டக் கல்லூரியும் இதில் வந்திருக்க வேண்டும். அதை neglected sector என்று சொல்லியோ என்னவோ விட்டுவிட்டீர்கள் போல் இருக்கிறது இதிலே. சட்டக் கல்லூரிக்கு மட்டும் பொதுத் தேர்வு—இந்தமாதிரித் தேர்வு வரப் போகிறதா இல்லையா என்று ஓர் அச்சம் இருக்கிறது. அதற்குத் தனியாக ஒரு சட்டம் கொண்டு வருகிறீர்களா? ஆகவே, அரசு அதையும் விளக்கவேண்டும். ஏனென்று சொன்னால், தொழில் கல்வி என்று வந்தபோது விவசாயம், பொறியியல், மருத்துவம் என்று வந்தபிறகு,

[திரு. சி. ஞானசேகரன்] [2006 டிசம்பர் 6

பேரவைத் தலைவரே ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே நிறைய வக்கீல்கள் இங்கே இருக்கிற காரணத்தினாலும்கூட, நாம் இந்தச் சட்டப் படிப்பை மட்டும் இப்படியே விட்டு ஏனோ, அதற்கு மட்டும் பொதுத் தேர்வு இருக்கிறது என்கிற ஒரு மனப்போக்கோ அல்லது எண்ணமோ வந்துவிடக்கூடாது என்பதற்காக அதையும் அரசு விளக்கி, அதற்கும் பொதுத் தேர்வை எடுத்துவிட்டு, அதற்கு எப்படிச் செய்யப் போகிறீர்கள், C.B.S.E-யில் வருபவர்களுக்கு எப்படி, State Board-ல் வரப்போகிறவர்களுக்கு எப்படி என்கிற கருத்தையும் இதிலே நீங்கள் தெளிவாகச் சொல்லி, இந்தச் சட்டத்தை இயற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களாலே தொழிற்கல்விக்கான மாணவர் சேர்க்கை குறித்து கொண்டுவரப்பட்டுள்ள சட்டமுன்வடிவு குறித்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்ப நிலையில் தமிழக அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேருதவியோடு நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையிலே, நீங்கள் எவ்வளவு ஆழ்ந்த சிந்தனையோடு, உயர்ந்த நோக்கத்தோடு நல்ல இலட்சியத்தோடு கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்பதை நான் உணர்ந்து பாராட்டுகிறேன்.

இந்த உணர்வுக்கு என்ன காரணம் என்று சொன்னால், இந்த நாட்டிலே இருக்கிற ஒடுக்கப்பட்ட மக்கள், கிராமப்புறத்திலே வாழக்கூடிய மக்களுடைய குழந்தைகள் உயர் கல்வி பெற முடியாத சூழ்நிலையிலே வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்க வேண்டும். ஏழையெளியவனுக்கும், சாமானியனுக்கும் உயர் கல்வி கிடைக்கவேண்டும் என்ற அந்த உயர்ந்த நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது இந்தச் சட்டம். அதை எங்களாலே உணர முடிகிறது. ஆனால், இந்தச் சட்டம் கொண்டுவந்த பிறகு, நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதிலே நீங்கள் உறுதியாக இருக்க வேண்டும். எந்தவகையிலும் நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் என்ற உறுதித்தன்மையை நிலைநாட்டவேண்டும் என்ற



2006 டிசம்பர் 6] [திரு. ஜி.கே. மணி]

வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன். காரணம், நுழைவுத் தேர்வு இரத்து செய்யப்பட வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், எங்களுடைய இயக்கம் தொடங்கிய காலத்தில் இருந்தே சொல்லி வருகிறார்கள். அமரர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த நுழைவுத் தேர்வு முறையை அறிமுகப்படுத்திய நேரத்திலிருந்து சொல்லி வருகிறோம். அதிலும் குறிப்பாகக் கடந்த 5 ஆண்டுகாலம் தொடர்ந்து போராடினோம். சட்டமன்றத்திற்குள் இந்த நுழைவுத் தேர்வைப் பற்றிப் பேசினால் எங்களுக்கு மிகப் பெரிய அவமானம் ஏற்படும். சட்டமன்றத்திற்கு வெளியில் எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள் தலைமையில் பலமுறை போராடினோம். மாதம் ஒருமுறை என்ற வீதத்திலேகூடப் போராடினோம். போராடினால் அரசுத் தரப்பிலிருந்து வரக்கூடிய பதில் அறிக்கைகள் எல்லாம் எங்களுக்கு எரிச்சலூட்டுகிற மாதிரி எதிர்ப்பான அறிக்கைகளாகவே வந்துகொண்டிருந்தன.

பிற்பகல் 1-00

இன்றைய சட்டமன்ற நாட்களை எண்ணிப் பார்க்கின்றபொழுது நாங்கள் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நீண்டநாள் கோரிக்கையான உயர் நீதிமன்றத்தில் தமிழ் என்பது நிறைவேறியிருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. அதைச் சேர்த்துப் பேசவில்லை என்று சொன்னாலும்கூட, அதைத் தொடர்ந்து வரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவு, அதைவிட இன்னும் மகிழ்ச்சி. இப்படித் தொடர்ந்து நம்முடைய சட்டமன்றத்திலே கடந்த 5, 6 மாதங்களாக பார்க்கின்றபொழுது, மக்களுக்கான பிரச்சினைகளுக்குத் தீர்வாக நல்ல திட்டங்கள் எல்லாம் வரவேற்கக்கூடிய ஒரு நல்ல முன்னேற்றத்தைக் காட்டுகிற காரணத்தினாலேதான் தொடர்ந்து பாராட்டுகிற நிலையிலே நாம் உருவாகிக் கொண்டிருக்கிறோம். ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஆட்சிக் காலம் முடிவடைகிற நேரத்தில் நுழைவுத் தேர்வு இரத்து என்று தேர்தலுக்காக ஒரு நாடகத்தை அரங்கேற்றம் செய்வதற்காக அறிவித்தார்கள். அப்படி இரண்டு முறை சொல்லிவிட்டு இந்த இரத்து என்ற அறிவிப்பு கோட்டை விட்டதாகவே அமைந்துவிட்டது. நடைமுறைப்படுத்தவில்லை. உயர் நீதிமன்றத்தைக் காரணம் காட்டி தட்டிக் கழித்துவிட்டார்கள். ஆனால், இப்பொழுது இருக்கிற அரசுக்கு அந்த உணர்வு இல்லை என்பது எங்களுக்குப் புரியும். உள்ளபடியே இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உறுதியான நம்பிக்கையோடு நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

இதனைக் கொண்டு வந்திருக்கிற இந்த வேளையில் இந்த அவசியத் தன்மைகளைப் பற்றியும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். காரணம், இந்த நுழைவுத் தேர்வு இருக்கின்ற நேரத்தில் 10 ஆம் வகுப்பு, 11 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்பு படிக்கக்கூடிய மாணவர்கள் எல்லாம் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டுமென்று சொன்னால், பொறியியல் படிப்பு படிக்க வேண்டுமென்று சொன்னால், தாங்கள் விரும்புகிற அந்த உரிய பாடத்திலே மட்டும் கவனம் செலுத்தி அதைப் படித்துவிட்டு மற்ற பாடங்களைப் படிப்பதற்கு நாட்டம் இல்லாமல் போய் விடுகிறார்கள். ஆக, கல்வி மற்றும் அறிவு வளர்ச்சிக்கு உகந்ததாக இல்லையென்ற நிலையை இந்த நுழைவுத் தேர்வு காட்டுகிறது. எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும், கல்வி அறிவு பெற வேண்டுமென்ற நிலை இல்லாமல் இந்தத் தொழிற்கல்வி படிப்பதற்கு அந்தப் பாடத்தை மட்டும் படிக்க வேண்டும், அதை வகுப்பிலே படிக்கவில்லை என்றாலும் பரவாயில்லை, வெளியிலேபோய் தனி வகுப்பு வைத்து, சிறப்பு வகுப்புகளாக அல்லது பயிற்சி நிறுவனங்களிலே சேர்ந்து அதன்மூலம் அந்தப் பாடத்தை, உரிய பாடத்தைப் படித்து மதிப்பெண் பெற்றுவிடலாம் என்ற நிலை மட்டுமே இருந்தது. ஒட்டுமொத்தமாக இந்த நுழைவுத் தேர்வு என்பது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அறிவு வளர்ச்சிக்குத் தடையாகவே இருந்தது என்ற ஒரு காரணத்தை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொரு உதாரணம். ஒரு ஆண்டுக்கு 12 ஆம் வகுப்பு எழுதக்கூடிய மாணவர்கள் 5 இலட்சம், 5½ இலட்சம்கூட வருகிறது. கடந்தகாலங்களில் 5 இலட்சம் எழுதினார்கள். அந்த 5 இலட்சத்திலே தமிழ் வழிக் கல்வி பயின்றவர்கள் 2½ இலட்சம். 2½ இலட்சத்திற்குமேல் தமிழ் வழி. 1 இலட்சம் மாணவர்கள் ஆங்கில வழிக் கல்வி, மீதி மற்ற பாடத் திட்டங்களிலே படித்தவர்கள். இந்த 2½ இலட்சம் மாணவர்கள் தமிழ் வழிக் கல்வியில் பயின்றவர்கள், அவர்கள் கிராமப்புறத்துக் குழந்தைகள். இவர்களிலே நுழைவுத் தேர்வுக்குச் சென்றவர்கள், நுழைவுத் தேர்வு எழுதியவர்கள் மட்டும் வெறும் 30,000 பேர். எண்ணிப் பார்க்க வேண்டும். இப்போது 2½ இலட்சம் பேர் எழுதி, நுழைவுத் தேர்வுக்குப் போனவர்கள் 30,000 பேர். ஆனால், இந்த 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்விலே இவர்கள் எல்லாம் அதிக மதிப்பெண்கள் பெற்றிருக்கிறார்கள். பெற்றிருந்தும்கூட, நுழைவுத் தேர்வுக்குச் சென்றவர்கள் வெறும் 30,000 பேர் மட்டுமே. ஆனால், ஆங்கில வழிக் கல்வியில் பயின்ற மாணவர்கள் 1 இலட்சம் பேர். இதிலே நுழைவுத் தேர்வுக்குச் சென்றவர்கள் 80,000 பேர். 2½ இலட்சத்திற்கு 30,000 பேர்தான் போயிருக்கிறார்கள்; 1 இலட்சத்திற்கு 80,000 பேர்





போயிருக்கிறார்கள். இதிலே ஆங்கில வழிக் கல்வி பயின்றவர்களுக்கு தொழிற்கல்வி நிறுவனங்களில் இடம் அதிக அளவில் கிடைத்திருக்கிறது. இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆக, கிராமப்புற மாணவர்கள் இதிலே செல்லமுடியாத நிலை இருக்கிறது. நகர்ப்புறத்திலே இருந்தாலும்கூட, ஏழையெளிய மாணவர்கள் செல்ல முடியவில்லை. ஆக, ஒட்டுமொத்தமாக ஏழையெளிய மாணவர்கள், கிராமப்புறத்து மாணவர்கள், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகள் உயர் கல்வி பெறுவதற்கு தொழிற்கல்விக்கு செல்லமுடியாத ஒரு நிலை.

மூன்றாவதாக நாம் இந்த 12 ஆம் வகுப்புத் தேர்விலே பார்க்கின்றபொழுது பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகள் 90, 95 சதவிகிதம் பெறுகிறார்கள். இவர்கள் நுழைவுத் தேர்விலே பெறக்கூடிய மதிப்பெண்கள் வெறும் 30 விழுக்காடு, 40 விழுக்காடுதான். இன்னும் உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், கடந்த ஆண்டுகூட எங்களுடைய கட்சியைச் சார்ந்த ஜெயராமன்—எங்கள் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர்—அவருடைய மகன் பெற்ற மதிப்பெண் வேதியியல் பாடத்திலே 200-க்கு 200; உயிரியல் பாடத்திலே 200-க்கு 199; இயற்பியல் பாடத்திலே 200-க்கு 199. அதாவது, 200-க்கு 200, 200-க்கு 199, 200-க்கு 199 பெற்றும்கூட மருத்துவப் படிப்புக்கு இடம் கிடைக்கவில்லை. நுழைவுத் தேர்விலே குறைவான மதிப்பெண் பெற்ற காரணத்தினால் செல்ல முடியவில்லை. இப்போது உதாரணம் ஒன்றுதான் சொன்னேன். நிறைய மாணவர்களை இப்படிப் பட்டியல் போட்டு கடந்த ஆண்டுகளில் நாங்கள் சொன்னோம். ஆக, இப்படி ஒட்டுமொத்தமாக பாதிப்பு என்பது பரவலாக இருக்கிறது, அது கிராமப்புறத்து மாணவர்களுககு இருக்கிறது என்கிற நிலையை நீங்கள் உணர வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆக, சில மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு இந்த நுழைவுத் தேர்வு தடையாக இருக்கிறது. இது மூன்றாவது.

பிற்பகல் 1-05

நான்காவதாக, இப்போது மாணவர் சேர்க்கை சம்பந்தமாக நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். நுழைவுத் தேர்வு இரத்து என்ற சட்டத்தைக் கொண்டு வருகிறோம். இரத்து என்று நாம் சொன்னாலும்கூட, அரசு நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தாலும்கூட, சமூக நீதிக்கு எதிரான, மக்கள் நலனுக்கு விரோதமான சில சமூக விரோத சக்திகள் இந்த நாட்டிலே இருந்துகொண்டுதான் இருக்கின்றன. அப்படிப்பட்ட சக்திகள்

நீதிமன்றத்திற்குச் சென்று ஏதாவது தடை பெற்று விடலாம். இந்தச் சட்டத்தை நிறைவேற்றக் கூடாது என்ற நிலையிலே சிலர் கங்கணம் கட்டியிருக்கிற நிலையை நாம் தொடர்ந்து பார்த்து வருகிறோம். ஆகவே, அப்படிப்பட்ட நிலை வராமல் இருப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரசு என்ன செய்யப்போகிறது என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தச் சட்டத்தை அப்படியே கொண்டுவந்தாலும்கூட, இந்தச் சட்டத்தை ஜனவரி மாதத்திற்குள்ளாக நடைமுறைப்படுத்துவதற்கு நாம் முன்வர வேண்டும். ஜனவரிக்குப் பின்னால் தேர்வு, அதற்குப் பின்னால் அரசு மாணவர் சேர்க்கைக்குத் தயாராக வேண்டும். இப்போதே டிசம்பர் மாதம் ஆகிவிட்டது. ஆகவே, இதை விரைவாக முடிக்க வேண்டிய காலகட்டம் என்பதையும் நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறுவதற்கு மத்திய அரசின் கல்வித் துறையின் பரிந்துரையோடு செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, விரைவாக இந்தச் சட்டத்தை இங்கே நிறைவேற்றிய பிறகு, தீர்மானம் நிறைவேற்றிய பிறகு, மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தை அணுகி, கையில் எடுத்துச் சென்றாவது, மத்திய அரசின் பரிந்துரையைப் பெற்று, நேரடியாக குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றாலொழிய, இந்த ஆண்டு நடைமுறைப்படுத்த முடியாது. ஆகவே, விரைவான நடவடிக்கை தேவை. இல்லை என்று சொன்னால், இந்த ஆண்டும் ஏமாந்துவிட்டால், நடைமுறைப்படுத்தவில்லை என்று சொன்னால், மக்கள் மிகப் பெரிய ஆத்திரத்திற்கும், கோபத்திற்கும் ஆளாவார்கள். ஏற்கேனவே இரண்டு முறை கோட்டைவிட்டாகிவிட்டது. நல்ல அரசு, நம்முடைய அரசு, மக்கள் நலன் காக்கும் அரசு என்று சொல்கிற அரசுகூட இதை நடைமுறைப்படுத்தவில்லையே என்ற ஏக்கத்திற்கும், கோபத்திற்கும் மக்கள் ஆளாகிவிடுவார்கள். எச்சரிக்கையோடு இருந்து, இதை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதேநேரத்தில், நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மாணவர்கள் சேர்க்கையின்போது கடைப்பிடிக்கப்படுகிற நடைமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். உதாரணத்திற்கு, பல்வேறு பாடத் திட்டங்கள் இருக்கின்றன. இந்தப் பாடத் திட்டங்களில் மதிப்பெண்களை சமத்துவப்படுத்தும் முறையைச் சொல்லியிருக்கிறார்கள். ஓரிரு உதாரணங்களைச் சொல்லியும் சொல்லியிருக்கிறார்கள். இது எந்த அளவுக்குச் சாத்தியப்படும் என்பது எங்களுக்குத் தெரியவில்லை.





அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டும். விளக்கிச் சொன்னாலும்கூட, அப்படி சமத்துவப்படுத்துகின்ற நேரத்தில் கிராமப்புறத்துக் குழந்தைகள், ஏழையெளிய குழந்தைகள், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகள் எக்காரணம் கொண்டும் பாதிக்கப்படக் கூடாது. அதிலே அரசு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்ற அந்த வேண்டுகோளையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இந்த நோக்கம் நல்ல நோக்கம். வரவேற்கக்கூடிய சட்டமுன்வடிவு. இப்படி இருந்தாலும்கூட, இதற்குத் தடையாக இருப்பவர்கள் பல நேரங்களிலே இருக்கின்ற காரணத்தினால்தான், நாம் மேற்கொண்டும சில காரியங்களைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் அரசுக்கும் நான் மீண்டும் ஒரு வேண்டுகோளாக வைப்பது இந்தச் சட்டமுன்வடிவே சமூக நீதிக்கானதுதான், ஏழையெளிய மக்களுக்கானதுதான். ஆனால், சமூக நீதியை நிலைநாட்டுவதிலே இன்னும் நாம் கேள்விக்குறியாகவே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். காரணம், நாம் 69 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றிருப்பதாகச் சொன்னாலும்கூட, அது நடைமுறையில் கேள்விக்குறி. 69 விழுக்காட்டின் நிலை என்ன? இன்னும் ஒட்டுமொத்தமாக 50 சதவிகிதம் என்ற நிலையே நிலவிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த இட ஒதுக்கீட்டிலே நாம் முழுமை பெறுவதற்கு அவசியத் தேவைகளைக் கையாள வேண்டியிருக்கிறது.

பிற்பகல் 1-10

உதாரணத்திற்கு, நம்முடைய இட ஒதுக்கீட்டு முறை எல்லாத் தரப்பு மக்களுக்கும் பலன் அளிக்கக்கூடியது. அந்த வகையிலே, இப்போது தமிழ்நாட்டை வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிற மாண்புமிகு சமூக நீதியினுடைய பிறப்பிடமாக இருக்கிற முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இந்திய அரசுக்கு வழிகாட்டியாக இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில், நாடாளுமன்றத்திலே ஒரு சட்டத் திருத்தம், சமூக நீதிக்காக, இட ஒதுக்கீட்டுக்காகக் கொண்டுவரப்பட வேண்டிய அவசிய காலகட்டம் இது. காரணம், இந்த இட ஒதுக்கீட்டிலே நீதிமன்றத்திற்குச் சென்று அவ்வப்போது சோதனைகளை உண்டாக்குகிறவர்களுக்கு சவுக்கடி கொடுப்பதற்காக, இட ஒதுக்கீட்டை நிலைநாட்டுவதற்காக, நாடாளுமன்றத்தில்—நீங்கள் மனது வைத்தால் முடியும்—அந்தச் சட்டத் திருத்தம் என்பது, மாநிலங்களே அந்தந்த மாநிலங்களின் நிலைமைக்கேற்ப இட ஒதுக்கீட்டை வகுத்துக்கொள்ளலாம் என்பதாகும். காரணம், ஒவ்வொரு மாநிலத்திலும் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களின்

எண்ணிக்கை வேறுபடுகிறது; பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை வேறுபடுகிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு மாநிலங்களின் நிலை, மக்கள் தொகை, பொருளாதார மேம்பாடு, வாழ்க்கைத் தரம் எல்லாம் வேறுபடுகின்ற காரணத்தால், மாநிலங்களின் நிலைமைக்கேற்ப அந்தந்த மாநிலங்களே இட ஒதுக்கீட்டை வகுத்துக்கொள்ளலாம் என்ற சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மனது வைத்து முயற்சித்தால், கட்டாயம் நடக்கும். இந்திய அரசுக்கு வழிகாட்டியாக இருக்கிற தாங்கள், முயற்சிக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் முதலிலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இது மூன்று.

இரண்டாவதாக, இப்போது கல்வியிலே நல்ல சீர்திருத்தங்களைச் செய்யமுன்வந்திருக்கிறீர்கள். இப்போது கல்வி பொதுப் பட்டியலிலே இருக்கிறது. மத்திய அரசும் உரிமை கொண்டாடுகிறது. அவர்களும் திட்டம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாநில அரசும் தன்னிச்சையாகச் செயல்பட முடியாத நிலை. காரணம் பொதுப் பட்டியலிலே இருக்கிறது. ஆகவே, கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கட்டாயம் கொண்டு வந்தாக வேண்டும். அப்படிக் கொண்டு வருகின்றபோதுதான், நாம் உரிய நடவடிக்கையை, மக்களுக்காக எடுத்தால்தான் ஏழை எளிய சாதாரண குடிமகனும் உயர் கல்வி பெறுவதற்கு முடியும்; கல்வியை வழங்க முடியும். ஆகவே, இதையெல்லாம் நீங்கள் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டு வற்புறுத்தி, ஒட்டுமொத்தமாக, உயர்ந்த நோக்கத்திற்காக, ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட குழந்தைகளின் உயர் கல்வி நலனுக்காகக் கொண்டுவந்திருக்கக்கூடிய சட்டமுன்வடிவு இந்தச் சட்டமுனவடிவு என்பதை உணர்ந்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இதை நாங்கள் மனதார வரவேற்கிறோம், பாராட்டுகிறோம்.

நாங்கள் இதற்காகத் தொடர்ந்து போராடியவர்கள். கடந்த 5 ஆண்டுக்காலம் சட்டமன்றத்திலே இதைப் பேசினாலும், எங்களுக்கு ஏற்பட்டது அவமானம். போராட்டத்திற்குப் பலன் ஒன்றும் இல்லை. போராடாமல் வழங்குகிற முதலமைச்சர், கேட்காமல் வழங்குகிற முதலமைச்சர் கலைஞர் என்கிற காரணத்தினாலேதான், இந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இந்தச் சட்டத்தை, நீதிமன்றத்திற்குச் செல்லாமல், எந்தத் தடையும் இல்லாமல் பாதுகாத்து, இது மக்களுக்குச் சென்றடைய இந்தச் சட்டமுன்வடிவை உரிய நிலையில் நீங்கள் நிறைவேற்றி அமலாக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டு,





இந்தச் சட்டமுன்வடிவை மீண்டும் மீண்டும் வரவேற்று, நன்றி பாராட்டி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அடுத்து, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முழுமையாக ஆதரிக்கிறோம்.

இது, பொதுவாக கிராமப்புற மாணவர்கள் இன்றைக்கு கல்வித் துறையில் மேலும் படித்து முன்னேறுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. கடந்த காலங்களில் நுழைவுத் தேர்வு என்ற ஒன்று இருந்த காரணத்தால், பல திறமையான மாணவர்கள்கூட, நுழைவுத் தேர்வில் வெற்றிபெற முடியாத ஒரு சூழ்நிலையில், உயர் கல்விக்குச் செல்ல முடியாமல், ஒரு வாய்ப்பு புறக்கணிக்கப்பட்டு வந்தது.

குறிப்பாக, பொறியியல் துறையில் 80,000 இடங்கள் உள்ளன. அதாவது 80,000 மாணவர்களைச் சேர்ப்பதற்கான இடங்கள் இருந்தும், நுழைவுத் தேர்வு நடந்து வருகின்ற காரணத்தால், பல மாணவர்கள் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற முடியாத ஒரு நிலையில், வருடத்திற்கு 20,000 அல்லது 15,000 இடங்கள் காலியாகவே இருந்து கொண்டிருக்கின்றன. அதோடு, கிராமப்புற மாணவர்களுக்காக சமச்சீர் கல்வியைக் கொண்டுவருவதற்கான ஒரு பெரும் முயற்சியை நமது தலைவர் கலைஞர் அரசு எடுத்துக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், ஏற்கெனவே கிராமப்புறக் கல்விக்கும், நகர்ப்புறக் கல்விக்கும் இடைவெளியும், வித்தியாசமும் இருக்கிறது. அதை நினைத்து, அதைப் போக்கவேண்டுமென்ற அடிப்படையில், அந்த வித்தியாசத்தைக் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையில், நமது கலைஞர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு, ஒரு பெரும் முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்த வித்தியாசம் ஒரு பக்கம் குறைக்கப்பட்டு, இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்பது, பெரிய வரவேற்கவேண்டிய ஒரு அம்சமாக இருக்கின்றது.

பிற்பகல் 1–15

குறிப்பாக, இன்றைக்கு நாம் சட்டமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றினாலும் அதற்கு உடனடியாக கவர்னர் அவர்கள் அனுமதி அளித்தாலும், எல்லாவற்றையும் தாண்டி இப்போது நீதிமன்றத்தினுடைய அனுமதி பெறவேண்டிய ஒரு கட்டாய நிலை இருந்துகொண்டிருக்கிறது.

[திரு. தி. இராமசாமி] [2006 டிசம்பர் 6

எனவே, இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கூறியது போன்றே, நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் என்பது, நீதிமன்றத்தில் ஏதாவது ஒரு காரணத்தினால் தடைபட்டுவிடக் கூடாது. வருகின்ற ஆண்டிலேயே நுழைவுத் தேர்வு இரத்து என்பது அறிவிக்கப்பட்டு வருகின்ற கல்வி ஆண்டிலேயே உயர் கல்வியில் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும். அதற்கு C.B.S.E. syllabus-க்கும், State syllabus-க்கும், இருக்கக்கூடிய அந்த equalisation என்பதை எடுத்துவிட்டு, C.B.S.E. syllabus-க்கு உரிய quota–வை ஒதுக்கீடு செய்து, அதனடிப்படையில் கொண்டுசென்றால் சிறப்பாக இருக்கும். நீதிமன்றத்தினுடைய தடைக்கு உட்பட வேண்டிய அவசியம் இருக்காது என்ற ஒரு கருத்து நல்ல கருத்து. அதை அரசு பரிசீலிக்க வேண்டும். ஏற்கெனவே நமது உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல திறமையான முயற்சிகள் எடுத்து இன்றைக்கு management, நிர்வாகம்கூட ஒத்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு அரசினுடைய quota–வை எல்லாம் 50–விழுக்காட்டிலிருந்து உயர்த்தி பல்வேறு சாதனைகளைச் செய்து வருகின்ற இந்த நேரத்தில், இந்த நுழைவுத் தேர்வு இரத்து என்பது தமிழகத்தில் இருக்கின்ற மாணவர்கள், அதிலும் கிராமப்புற மாணவர்கள், மற்றும் ஒட்டுமொத்த மக்களுடைய ஒரு மிகப் பெரிய வரவேற்பைப் பெறும், கிராமப்புற மாணவர்களுக்கு இது ஒரு சிறப்பான சட்டம் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றிகூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற பின்தங்கிய மாணவர்களினுடைய நலனுக்காகக் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்த நல்ல சட்டத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கின்றோம். சமூகத்தினுடைய பின்தங்கியவர்களை மேலும் பின்தங்க வைப்பதற்கான ஒரு நுட்பமான ஏற்பாடுதான் நுழைவுத் தேர்வு. அதை முறியடிப்பதற்கான சட்டமாக இதை நாங்கள் பார்க்கின்றோம். இது மத்திய அரசும் கொண்டுவருவதற்கான ஒரு போராட்டத்தை, ஒரு தொடர்ச்சியான நடவடிக்கையை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையிலே, இந்திய மாணவர் சங்கத்தினுடைய நீண்டநாள் கோரிக்கை, தமிழகத்து மாணவர்கள், பெற்றோர்களினுடைய நீண்டநாள் கோரிக்கையைச் சட்டமாகக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதற்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2006 டிசம்பர் 6]

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உறுதியோடு இதை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தோடு இங்கே இதைக் கொண்டுவரவேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். ஒரு வாரத்திற்கு முன்பாக, 'விடுதலை' பத்திரிகை ஆசிரியரும், திராவிடர் கழகத்தினுடைய பொதுச் செயலாளருமான திரு. வீரமணி அவர்கள் ஒரு தலையங்கத்தை எழுதியிருந்தார். தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சர் பொறுப்பை ஏற்று, இதுவரை நான்குமுறை முதலமைச்சராக இருந்தபோது அண்ணாவின் ஆட்சியையும், இப்போது ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறபோது பெரியாருடைய ஆட்சியையும் நடத்திக்கொண்டிருக்கிறார்; பெரியாராகவே இருக்கிறார் என்று எழுதியிருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்த ஆறுமாத காலத்திலே கலைஞர் அவர்கள் அரசு நிறைவேற்றியிருக்கிற சட்டங்கள்—அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் மட்டுமின்றி, இன்று காலையிலே நிறைவேற்றியிருக்கிற நீதிமன்றத்திலேயும் தமிழில் வாதாடலாம் என்று, ஆங்கிலத்திலே எவ்வளவுதான் படித்திருந்தாலும், பேச்சு வழக்கிலே பேச முடியாமல் தவித்துக்கொண்டிருந்த கிராமப்புறத்தினுடைய அறிவுசார்ந்த இளைஞர்களுக்கு இன்று நீதிமன்றத்திலேயும் தமிழிலே வாதாடலாம் என்று ஒரு சமூக நீதியை வழங்கி, தீர்மானத்தை முன்மொழிந்திருப்பவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே எண்ணத்தோடுதான், உதட்டளவிலே இல்லாமல், உள்ளத்தளவிலே பெரியாருடைய கொள்கைகளையும், திராவிட இயக்கக் கொள்கைகளையும் உள்ளத்திலே நிலைநிறுத்தி அதைச் செயல்படுத்த வேண்டுமென்று செயல்பட்டுக்கொண்டிருக்கின்றவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆனால், கடந்த காலங்களிலே இரண்டுமுறை இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது; அது உதட்டளவில் கொண்டுவரப்பட்ட சட்டம். பெரியாருடைய பெயரையும், திராவிடர் கழகத்தினுடைய பெயரையும், திராவிட இயக்கத்தினுடைய பெயரையும் உதட்டளவிலே சொல்லிக்கொண்டு ஏதோ ஒரு காரணத்திற்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தினுடைய குறைபாடுகளையெல்லாம் நீக்கி, இது உண்மையான ஒரு சட்டமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தை, சென்ற ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்பொழுதே கலைஞர் அவர்கள் முரசொலியிலே ஒரு கடிதமாகத் தீட்டியிருந்தார்கள். அப்போது முதல்வர் அவர்கள் சொன்ன கருத்து, இந்தச் சட்டத்தை அவசரம்

அவசரமாகக் கொண்டு வருவதைவிட, முதலிலேயே இது உயர் நீதிமன்றத்திலே தோல்வியுற்று இருக்கிற காரணத்தினால், ஒரு குழுவை நியமித்து அதற்குரிய காரண காரியங்களைக் கண்டறிந்து, இதை முழுமையாகக் கொண்டு வர வேண்டுமென்று முரசொலியிலே எழுதியிருந்தார்கள். சொன்னதைச் செய்கிற முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடனே, அதற்கான ஒரு குழுவையும் நியமித்து, இது போன்ற சங்கடங்களையெல்லாம் இந்தக் குழு அலசி ஆராய்ந்து அவர்கள் கொடுத்த அறிக்கையின் அடிப்படையிலேதான் இந்தச் சட்டமுன்வடிவை உருவாக்கியிருக்கிறோம்.

*பிற்பகல் 1-20*

குறிப்பாக இங்கே உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொல்கின்றபோது, C.B.S.E. Syllabus பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே ஒரு வேடிக்கை என்னவென்று சொன்னால், இங்கே மணி அவர்கள் எல்லாம் சுட்டிக்காட்டியதைப் போல, தமிழகத்திலே இந்த ஆண்டு State Board Syllabus-லே பிளஸ்-2 எழுதவிருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கை 5,22,000 பேர். C.B.S.E. மாணவர்களுடைய எண்ணிக்கை 5,000 பேர். இதிலே கடந்த ஆண்டு, சென்ற ஆண்டு, State Board-லேயிருந்து entrance நுழைவுத் தேர்வுக்கு எழுதியவர்களுடைய எண்ணிக்கை 1,39,491. C.B.S.E.-லேயிருந்து எழுதியவர்கள் 4,271. இப்போது இந்த 4 ஆயிரம் பேருக்காக 1½ இலட்சம் பேர் போன தடவை எழுதியவர்கள் எழுத வேண்டும். 3 இலட்சம் பேர் அறிவியல் பாடங்களையும், கணிதப் பாடங்களையும் படித்தவர்கள். ஆனால், அந்த 3 இலட்சம் பேரிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் சொன்னதைப்போல, நுழைவுத் தேர்வு எழுதியவர்களுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 1½ இலட்சம் பேர்தான். பாதிக்குப் பாதிதான் எழுதுகிறார்கள். அதை எழுதுவதற்குக்கூட நம்முடைய கிராமத்து மாணவர்கள் சரியாக முன்வருவதில்லை. ஆகவேதான், இந்த நுழைவுத் தேர்வு வருகிறபோதே அதைக் கடுமையாக எதிர்த்தவர் தலைவர் கலைஞர்; அன்று எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தாலும் எதிர்த்தார்கள். அந்த உணர்வோடுதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறபோது, இதிலே நீதிமன்றம் தலையிடாமல் சட்டச் சிக்கல் இல்லாமல், இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்ற முன்னெச்சரிக்கையோடுதான் இந்தக் குழுவை நியமித்தார்கள்.

இங்கே ஞானசேகரன் சொன்னதைப்போல, இந்த 5 ஆயிரம் C.B.S.E. மாணவர்கள் எழுதுவதற்காக, கிட்டத்தட்ட 3 இலட்சம் மாணவர்களும் இந்த நுழைவுத் தேர்வை எழுத வேண்டுமா என்பது ஒரு நியாயமான





கேள்வி: அதற்காக normalisation என்ற ஒன்றை பிலானி பல்கலைக்கழகத்திலே, பிலானியிலே இருந்த கல்வி நிறுவனமே அதைப் பின்பற்றியிருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட்டே இந்த normalisation-ஐ வரவேற்றிருக்கிறது. ஏனென்றால், நீங்கள் எழுப்பிய ஐயத்தைப் பொறுத்தவரை "The method of normalisation is widely accepted and practised whenever there arises a need to compare examinations under different Boards/ types. This method was adopted continuously for a long time by BITS, Pilani which normalised the ma.:s of Plus Two students of different State Boards and the Central and other Boards in the country. The merits of such normalisation were not questioned at any time and in fact the Supreme Court made an appreciative reference to this method of normalisation in one of its judgments." என்று இந்தக் குழு அறிக்கை கொடுத்திருக்கிறது. ஆக, இந்த normalisation என்ற இந்த முறையைப் பின்பற்றி அவர்கள் 5 ஆயிரம் பேருக்காக, 3 இலட்சம் பேரும் தேர்வு எழுத வேண்டாம்; அந்த 5 ஆயிரம் பேரையும் இந்த மார்க்கோடு இணைத்துக்கொள்ளலாம். அது எப்படி என்று சொன்னால், State Board-லே 100 மார்க் வாங்கியிருந்து, State-லே, State First கணிதத்திலே State Board-லே 100 மார்க் highest mark வாங்கியிருக்கிறார் ஒருவர். C.B.S.E.-லே தமிழ்நாட்டிலே இருக்கிற highest mark 90. அந்த 90-ஐயும் இந்த 100 ஆக எடுத்துக்கொள்கிறோம். 90-க்கு 100. அப்போது 60 மார்க் அந்த போர்டிலே வாங்கியிருந்தால், அவருக்கு 75 மார்க் இதிலே வரும். இந்த 5 ஆயிரம் பேருக்கு மட்டும்தான் இந்த normalisation.

மீதியிருக்கிற 3 இலட்சம் பேருக்கும் அவர்கள் Higher Secondary-லே வாங்கிய மார்க்கை வைத்துதான் நாம் ரேங்க் பட்டியலை, மெரிட் லிஸ்ட்டைத் தயார் பண்ணுகிறோம். அதனாலே, இந்த 5 ஆயிரம் பேரும் இதிலே வருகிறார்கள். இந்த 5 ஆயிரம் பேரிலேகூட சென்ற ஆண்டுகளிலே, சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 20 பேர், 25 பேர்தான் சேர்ந்திருக்கிறார்கள். அதனாலே, அவர்களுக்காக இந்தத் தேர்வு முறை கூடாது என்ற அடிப்படையிலேதான் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளின் அடிப்படையிலேதான் இந்த normalisation கொண்டு வந்திருக்கிறோம்.

நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும், ஞானசேகரன் அவர்களும் சொன்னதைப்போல C.B.S.E. படித்தவர்களுக்குத் தனி இட ஒதுக்கீடு என்று கொடுத்தீர்கள் என்றால் அதிலேயும் பிரச்சினை வரும். ஏனென்றால், கலைஞர் ஆட்சியிலேதான் கிராமப்புறத்து மாணவர்களுக்கு என்று 5 மதிப்பெண் கொடுத்ததற்கே கோர்ட்டிலே போய் அதையும் நிறுத்தினார்கள். இதையும் நாளைக்கு கொண்டு போய் நிறுத்தலாம்.

C.B.S.E.-க்கு மட்டும் எப்படித் தனியாகக் கொடுக்கிறீர்கள்; இட ஒதுக்கீடு கூடாது; தனியாகக் கொடுக்கக் கூடாது; 50 சதவிகிதத்திற்கு மேலாகப் போகிறது என்று சொல்லி நீதிமன்றம் நினைத்தால் அதையும்கூட நிறுத்தலாம்.

அவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான், இந்தக் குழு ஆய்வு செய்து, சுப்ரீம் கோர்ட்டே ஏற்றுக் கொண்டிருக்கிற இந்த normalisation process-ஐக் கொண்டு வந்து, அதன்மூலமாக நீதிமன்றத்திற்கு பதில் சொல்லலாம் என்ற உணர்வோடு இந்த normalisation process-ஐ, விதிமுறைகளிலேகூட இல்லாமல், சட்டத்திலேயே உள்ளடக்கி இதையும் சொல்லியிருக்கிறோம். இது ஞானசேகரன் அவர்கள் வைத்திருக்கிற முதல் கேள்விக்கான பதில்.

*பிற்பகல் 1-25*

இரண்டாவது, அதைப் போல இந்த 5 இலட்சம் ரூபாய் penalty. இந்த 5 இலட்சம் ரூபாய் penalty என்று பிரிவிலே சொல்லப்பட்டிருப்பது இந்தச் சட்டத்தின் 9-வது பிரிவிலே உட்பிரிவு (1)-ஐ மட்டும் படித்துவிட்டீர்கள். கீழே (2)-வது உட்பிரிவும் இருக்கிறது. "இந்தச் சட்டத்தின் ஏதேனும் வகைமுறைகளை ஏதேனும் நிறுவனம் மீறியதாக கருதினால் அரசு, அவ்வாறான நிறுவனத்தின் இணைப்பினை அல்லது அங்கீகாரத்தை திரும்பப்பெற தொடர்புடைய பல்கலைக்கழகம் அல்லது தகுதியான அமைப்பிற்கு பரிந்துரை செய்யலாம் அல்லது பொருத்தமான ஏதேனும் பிற நடவடிக்கைகளை எடுக்கலாம்." இதுகூட ரொம்ப cautious ஆக போட்டிருக்கிறோம். ஏனென்றால், இப்போது எல்லா கோர்ட்டிலும் என்ன சொல்லிவிட்டார்கள் என்றால் State Government-க்கு எந்த அதிகாரமும் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் இப்போது திரு. கோ.க. மணி அவர்கள் எல்லாம் சொல்வதைப் போல education-ஐ State subject-ல் கொண்டு வரவேண்டும் என்பதை முதல்வர் அவர்களும் மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்தி எழுதியிருக்கிறார்கள். இப்போது மாநில அரசுக்கு எந்தவிதமான தனியார் நிறுவனங்களையும் கட்டுப்படுத்துகிற, inspect பண்ணுகிற ஒரு அதிகாரம்கூட இல்லை என்று சொல்கிற அளவுக்கு இருக்கிறது. இன்றைக்குக்கூட தீர்ப்பு B.Ed. Education-ல் பார்த்தீர்களென்றால், இந்தப் பல்கலைக்கழகங்கள் சொன்னதைக்கூட 'முடியாது. எங்கேயோ இருக்கிற பெங்களூரில் இருக்கிற அவர்கள் கொடுத்துவிட்டாலே போதும்' என்ற தீர்ப்புகள்கூட வந்திருப்பதை நீங்கள் படித்திருப்பீர்கள். ஆகவே, நீதிமன்றங்களுடைய தீர்ப்புகளும் மத்திய அரசாங்கத்திலே உருவாக்கப்பட்டிருக்கிற, நடுவண் அரசில் இருக்கிற பல அதிகார வர்க்கங்களுமகூட இதுபோன்ற





தடைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் மீறி வரவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்தச் சட்டம், குடியரசுத் தலைவருடைய ஆணையைப் பெற்றுவிட்டால் பல்வேறு அமைப்புகள், அது M.C.I. ஆக இருந்தாலும், D.C.I. ஆக இருந்தாலும், அவர்களுக்கு இருக்கிற அந்த விதிமுறைகளைக்கூட மேம்பாடுடையதாக இருக்கும் என்ற அடிப்படையோடுதான் இந்தச் சட்டத்திலே நம்முடைய குடியரசுத் தலைவருடைய கையொப்பத்தையும் பெறவேண்டும் என்று அந்தக் குழு பரிந்துரைத்து இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளையும் மிக விரைவில் நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் நான் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, சட்டக் கல்லூரியைப் பற்றிக்கூட கேட்டீர்கள். சட்டக் கல்லூரியிலே ஒரு சிக்கல். இப்போது என்னவென்றால், core subjects இதற்கெல்லாம் ஒன்று. Maths என்று சொன்னோம் என்றால், Physics, Maths, Chemistry தான். அதேமாதிரி, அதிலே படித்து அதிலே merit பண்ணுவது என்பது ஈசியான விஷயம். Higher Secondary-ல் வாங்கியிருக்கிற மார்க்கை வைத்துப் பண்ணிவிடுகிறார்கள். அதேமாதிரி, Science, Medical-க்குப் போகவேண்டும் என்று சொன்னார்கள் என்றால், Biology, Physics, Chemistry அதிலே வாங்கியிருக்கிற மார்க்-ஐ வைத்து நாம் merit list-ஐ தயார் பண்ணுகிறோம். ஆனால், சட்டக் கல்லூரி என்று சொல்லும்போது, Maths படித்தவரும் போகலாம், History படித்தவரும் போகலாம், Economics படித்தவரும் போகலாம். Maths-ல் நூறு மார்க் வாங்கியிருப்பார்கள்; எங்களை மாதிரி History படித்த மாணவர்கள் 60 மார்க் வாங்குவதே பெரிய கஷ்டமாக இருக்கும். அப்போது 100-ஐயும், 60-ஐயும் ஒன்றாகச் சேர்த்து நீங்கள் merit list போட்டீர்கள் என்றால் சரியாக வராது. அதனாலே entrance test வேண்டும் என்று நான் சொல்லவில்லை. Entrance test நீக்குவதற்காகத்தான், இதற்காகத்தான் இந்த normalisation process மாதிரி. கணக்கில் நூறு வாங்கியிருந்தால், History-ல் 60 வாங்கியிருந்தால் அதை எப்படி இரண்டையும் equalise செய்யலாம், normalise பண்ணலாம் என்பது அந்த முறைகளைக் கணக்கிட்டு அந்த முறைகள் சரியாக வரும் என்று சொன்னால், சட்டக் கல்லூரிக்கான அந்த நுழைவுத் தேர்வையும் எடுப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக முயற்சிகளை மேற்கொள்ளும். அதற்குரிய இதுபோன்ற சில விதிமுறைகளையும் வகுத்துக்கொண்டுதான் அதற்கான தனி முறைகளை ஏற்படுத்தவேண்டும் என்று நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் முதல்வர் அவர்களும்

அறிவித்திருக்கிறார்கள், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே கிராமப்புற மாணவர்கள் படிக்க வேண்டும். சமூக நீதிக்காக இங்கே குரல் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிற ஒவ்வொரு உறுப்பினருடைய எண்ணத்தையும் புரிந்து கொண்டிருக்கிற இந்த அரசு நிச்சயமாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். பெரும்பாலும் இது குறித்து கோர்ட்டுக்கு யார் போவார்கள் என்றால், இந்த entrance test coaching நடத்திக்கொண்டு, இதனால் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிற சில பேர் அதற்கு முயற்சிக்கலாம். அனைத்துக் கட்சியினுடைய உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்திருக்கிறீர்கள். உங்களுடைய முயற்சியின்மூலமாக இங்கே விவாதிக்கிற விவாதங்கள்கூட நாளைக்கு பத்திரிகையிலே வருமானால், நீதிபதிகளும் படிக்கிற வாய்ப்புகள் கிடைக்கும். ஆகவே, 5 ஆயிரம் மாணவர்களுக்காக 3 இலட்சம் மாணவர்கள் இந்த நுழைவுத் தேர்வை எழுதுகிற இந்தச் சுமையிலிருந்து நீக்கப்பட்டு ஒரு சமூக நீதி கிடைப்பதற்கான ஒரு வகையாகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் முன்பே சொன்னதைப்போல, இது உதட்டளவில் இல்லாமல், உள்ளத்தளவில் பெரியாருடைய ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டம். நிச்சயமாக நீதிமன்றத்திலே இதற்குத் தடைகள் பிறப்பிக்கப்பட்டாலும் அந்தத் தடைகளைத் தகர்த்தெறிந்து இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற முயற்சிகளை இந்த அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓரேயொரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் எல்லா விளக்கமும் சொல்லிவிட்டார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** அதிலே ஒரு doubt இருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, normalisation-க்கு ஒத்துக்கொண்டு ஒரு தீர்ப்பிலே பிலானி கல்வி நிலைய வழக்கிலே சொல்லியிருக்கிறது என்று சொன்னார்கள். ஏற்கெனவே நம்முடைய தமிழ்நாட்டில் இந்த அவையிலே பாஸ் செய்த இந்தச் சட்டத்தை எதிர்க்கின்றபோது உச்ச நீதிமன்றம் இதில் இரண்டு வகையான படிப்பு இருக்கிறபோது இது செல்லாது என்று திருப்பிவிட்டார்கள். அதற்குப் பிறகு வந்த ஜட்ஜ்மென்ட்டா இது அல்லது அதற்கு முன்பு வந்ததா? அப்பொழுதே நாம் இங்கு





சொன்ன இந்த வாதத்தை அதிலே வைத்திருப்போமேயானால், அப்பொழுதே normalisation வந்திருக்குமே! அதை அமைச்சர் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது சட்டமுன்வடிவிலே நம்முடைய High Court-லேயே என்ன சொன்னார்கள் என்றால், இதெல்லாம் சட்டத்திலே உள்ளடக்கிச் சொன்னார்கள். Normalisation process எல்லாம் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதெல்லாம் சொல்லவில்லை. சொல்லவேயில்லை அந்தச் சட்டத்திலே. அதனால்தான் நாம் இப்போது இந்தச் சட்டத்தில் அந்தக் குறைபாடுகளையெல்லாம் களைந்தெறிந்துதான் normalisation எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். இது சமீபத்திலே கொடுக்கப்பட்ட உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 13 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1-30

பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2006 டிசம்பர் 6

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2006), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.



2006 டிசம்பர் 6]

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2006) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்)

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

தமிழ்நாடு ... 227140 சென்னை-600 009

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 6-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2006), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2006)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

@ 6-12-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2006) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (7-12-2006) வியாழக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

9. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (தமிழ்நாடு அரசுப் பணிகள் நடைமுறை நூல், 1987-தொகுதி-I) இணைப்பு I-ல் "மாநில அரசுப் பணிகள்" என்ற தலைப்பின்கீழ் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறையின் 25-9-2006 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

10. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் (தமிழ்நாடு அரசுப் பணிகள் நடைமுறை நூல், 1987-தொகுதி-I) இணைப்பு I-A ல, "B சார்நிலைப் பணிகள்" என்ற





தலைப்பின்கீழ் திருத்தம் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறையின் 4-10-2006 ஆம் நாளிட்ட 182 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

11. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

12. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

13. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

14. 2005-2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் இருபத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

15. 2004-2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2006-2007)
4. பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2006-2007)
5. பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை. (2006-2007)
6. பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறி[illegible]
7. பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2006-2007)

---

D
V24, 3/2006
206.173
227440
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.